# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 4 சனிக்கிழமை (20.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 359


# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட

# இனி ஒருபோதும் இடமளியோம்

## பதவி ஏற்பு நிகழ்வில் ஜனாதிபதி

கொழும்பு, நவம்பர் 20

நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது. ஆனால் இனி அவ்வாறானதொரு நிலை உருவாகாது. அப்படி உருவாக ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்துக்கான சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் வைபவம், நேற்றுக்காலை காலி முகத்திடலிலுள்ள ஜனாதிபதி செயலக முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம்பெற்றது. பிரதம நீதியரசர் அசோக டி சில்வா முன்னிலையில் ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.


அங்கு ஜனாதிபதி தொடர்ந்து கூறியவை வருமாறு:-

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் நாடு அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பயணம் ஜாதி, மதம் மற்றும் அரசியல் பேதங்களின்றிய மனிதாபிமானப் பயணமாக அமைய வேண்டும்

இலங்கைத் திருநாட்டை அதிசிறந்ததொரு நாடாக உருவாக்கும் மாபெரும் பொறுப்பை இலங்கை மக்களான நீங்கள் என்னிடம் கையளித்துள்ளீர்கள். நீங்கள் எதிர்ப்பார்ப்பதை விட நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பு எனக்குள்ளது. முதலாவது தடவை நான் பதவியேற்கும்போது நாடு இரண்டுபட்டிருந்தது. ஆனால், கடந்த வருடம் நாம் இந்த நாட்டை ஐக்கியப்படுத்தினோம். (02ஆம் பக்கம் பார்க்க)

### எல்லாம் ஒன்றே

ஒரே நாடு, ஒரே மக்கள், நாம் அனைவரும் ஒரே குடும்பம். அனைத்து இன மக்களும் சமத்துவத்துடனும் சமாதானத்து டனும் வாழவேண்டும் என்பதே எனது நோக்கமும் இலட்சியமும் என்று முழக்கமிட்டார் ஜனாதிபதி -மஹிந்த ராஜபக்ஷ. → 3



மேலும் படங்கள் 15ஆம் பக்கத்தில்

## கலை நிகழ்வுகள், அணி வகுப்புகளுடன் கோலாகல கொண்டாட்டமாகப் பதவி ஏற்பு

கொழும்பு, நவ.20

பள்ளி மாணவ மாணவியரின் வண்ண மிகு கலை நிகழ்ச்சிகளுடன் படையினரின் அணிவகுப்புக்கு மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்கால பதவியேற்பு வைபவம் நேற்று கோலாகலமாக காலிமுகத்திடலில் இடம்பெற்றது.

பிரதம நீதியரசர் அசோகா டி சில்வாவின் முன்னிலையில் சுபவேளையான 10.14 மணிக்கு கையெழுத்திட்டு இரண்டாவது (24ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

**மனித உரிமைக் குழு தலையீடு**
கரவெட்டி மாணவிக்கு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலையீட்டால் கலைப்பீட அனுமதி கிடைத்தது பக்கம் 05

**இழந்த உயிர்களை மீட்டுத் தர முடியாது**
ஒட்டுசுட்டானுக்கு வருகை தந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இறந்தவர் உயிர்களை மீட்க முடியாது என்றார். பக்கம் 07

**திட்டமிட்ட வரலாற்று தடய அழிப்பு**
கே.கே.எஸ். வீதி அகலிப்பு பணிகளின் போது தமிழர் வரலாற்றுத் தடயங்கள் அழிக் கப்படும் ஆபத்து பக்கம் 07


## கொழும்பில் 65 ஆயிரம் குடும்பங்களை வெளியேற்றும் அரசின் திட்டம் ஆரம்பம்

### கொம்பனித் தெருவில் பல குடும்பங்களுக்குக் கடிதம்

கொழும்பு, நவ.20

கொழும்பு மாநகரிலிருந்து 65 ஆயிரம் குடும்பங்களை அகற்றும் அரசின் திட்டம் மெதுவாக ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதன் முதற்கட்டமாக கொழும்பு கொம்பனித்தெரு பகுதியிலுள்ள குடும்பங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்திக்காக நீங்கள் குடியிருக்கும் இடம் இனங் காணப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கும் அறிவித்தல் கடிதங்கள் இவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கொம்பனித்தெருப் பகுதியில் பெரும்பான்மையாக முஸ்லிம்களே வாழ்கின்றனர். இவர்கள் இக்கடிதம் கிடைத்ததும் செய்வதறியாது குழம்பிப்போய் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இடர் காலங்களில் ஏற்படும் விபரீதங்களைத் தடுக்கும் 'இப்னு' தொழுகையிலும் இங்குள்ள முஸ்லிம்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கொழும்பிலிருந்து வெளியேற்றப்படவுள்ள 65 ஆயிரம் குடும்பங்களில் (24ஆம் பக்கம் பார்க்க)

## காளிகோயிலில் தேங்காய் உடைத்து அனோமா வழிபாடு

கொழும்பு, நவ.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்கால பதவிப்பிரமாண வைபவம் நடைபெற்ற அதே நேரத்தில், அனோமா பொன்சேகா தனது கணவரின் விடுதலையை வேண்டி கொழும்பு - கொச்சிக்கடை காளிகோவிலில் தேங்காய் உடைத்து வழிபாடு நடத்தினார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக நேற்றுக் காலை கொச்சிக், கடை காளிகோவிலில் நடைபெற்ற மத வழிபாடுகளில் (24ஆம் பக்கம் பார்க்க)

## யானை தாக்கியதில் மல்லாவி வாசி மரணம்

மல்லாவி,நவ.20

மல்லாவி ஆலங்குடா, வேட்டையடியில் நேற்றுமுன்தினம் இரவு யானை தாக்கி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சாமித்தம்பி விஜயராஜ்(வயது 52) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை முல்லைத்தீவு பதில்நீதிவான் தங்கராசா பரஞ்சோதி நேற்றுப் பார்வையிட்டு விசாரணைகளை நடத்தினார். தொடர்ந்து சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-ஐ)

## நேர்த்தி செய்ய முறிகண்டி சென்ற நல்லூர் தம்பதியினர் விபத்தில் பலி

கிளிநொச்சி,நவ.20

கிளிநொச்சி, முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் நேர்த் திக்கடன் செலுத்தச் சென்ற நல்லூரைச் சேர்ந்த தம்பதியர் விபத்தில் அந்த இடத்திலேயே மரணமானார்கள்.

மாங்குளத்தில் இருந்து வந்த படையினரின் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட சம்பவத் திலேயே தம்பதியினர் கொல்லப்பட்டனர் (24ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதியின் பட்டினிப் போர் தொடர்கிறது

கொழும்பு, நவ.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக் காலத்தைப் பொறுப்பேற்றதையொட்டி உலக சாதனைப் பால் சோறு நேற்றுத் தயாரிக்கப்பட்டது. (04ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற லெபனான் தம்பதி கைது

கொழும்பு, நவ.20

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி மீது யாழ்ப்பாணத்தில் வைத்து இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட லெபனான் ஜனநாயக இளைஞர் சங்கத்தின் தலைவரும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று இணையதளம் (23ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்துக்குப் புறம்பாக தங்கியிருந்த 30 ஈழ அகதிகள் தாய்லாந்தில் கைது

கொழும்பு,நவ.20

தாய்லாந்தில் 30 இலங்கைத் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்தின் சொங்க்லா பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை மேற்கொண்ட சுற்றி வளைப்புத் தேடுதலின் போது, மொத்தமாக கைதுசெய்யப்பட்ட 50 பேரில் 30 தமிழர்களும் உள்ளடங்குகின்றனர் என 'த ஏசியன் ட்ரிபியுன்' இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்கள் தற்போது பாங் கொக்கில் உள்ள குடிவரவுத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் அவர்கள் நீதிமன்ற உத்தரவின் பின்னர், நாடுகடத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்து குடிவரவு மற்றும் அடிப்படைச் சட்டங்களை மீறினர் எனத் தெரிவிக்கப்பட்டு அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அனைவரும் தாய்லாந்தில் இருந்து கனடாவுக்கு சட்டவிரோதமாகத் தப்பிச் செல்வதற்குத் தயாராக இருந்தார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கனடாவுடன் தாய்லாந்து அரசு மேற்கொண்ட பேச்சுகளின் அடிப்படையிலேயே அண்மைக் காலமாக தாய்லாந்தில் வைத்து இலங்கையர்கள் கைதுசெய்யப்படுகின்றனர்.(சி)

## கார்த்திகை தின பூஜை

யாழ்ப்பாணம்,நவ.20

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் திருக்கார்த்திகை தினமான நாளை பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் 9 மணிக்கு காலைச் சந்திப் பூசையும் 10.30 மணிக்கு ஷண்முகார்ச்சனையும் நண்பகல் 12 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலும் பிற்பகல் 1.30 மணிக்கு மஹேஸ்வர பூஜையும் இடம் பெறும். அடியார்கள் தமது வாகனங்களில் நேரடியாக ஆலயத்துக்கு வரலாம். (ஒ-16)

## செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ.20

மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கு சிற்றூழியர் நியமனத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதால் நேர்முகப் பரீட்சையை மீண்டும் நடத்தும்படி வன்னி மாவட்டக் கூட்டமைப்பு எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார்.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர்களுக்கான பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9மணி முதல் மாலை 4 மணிவரை மன்னார் வலயக்கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

மாவட்டப் பாடசாலைகளில் நிலவிவரும் சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப கோரப்பட்டிருந்த விண்ணப்பங்களுக்கு அமைய பலர் விண்ணப்பித்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நேர்முகத் தேர்வு நடத்தப்படும் என்று கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தக் கடிதங்கள் பலருக்கு கிடைக்கவில்லை என என்னிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அந்த நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்தவர்களை விட அவர்கள் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இது ஓர் அரசியல் ரீதியான நடவடிக்கை. அரசியல் தலையீடுகளினால் இந்த ஆட்சேர்ப்புக்கான பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

எனவே, இந்த நியமனங்களை உடன் ரத்துச்செய்து அதனைப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கவும்.

இப்படி செல்வம் அடைக்கலநாதன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (சி)

## ஈழ அகதிகள் வருகையை தடுப்பது குறித்து கனேடிய–இந்தியப் அதிகாரிகள் ஆலோசனை

கொழும்பு,நவ.20

இலங்கையிலிருந்து கனடாவுக்கு அகதிகள் வருவதைத் தடுப்பது தொடர்பாக கனேடியப் புலனாய்வுப் பிரிவின் தலைவர் இந்தியப் புலனாய்வுத் துறையின் முக்கிய தலைவருடன் ஆலோசனை நடத்தியுள்ளார். புதுடில்லியில் இந்தப் பேச்சு நடைபெற்றன.

கனேடியப் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் றொபேட் பி படேன் இந்தியாவில் முக்கிய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறார்.

அவர் இந்தியாவின் ஐ.பி. எனப்படும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ராஜீவ் மாத்தூரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது முக்கியமாக இலங்கையில் இருந்து அகதிகள் கனடாவுக்குச் செல்வது தொடர்பாகவும் அதைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது எனத் தெரியவருகிறது.

அதேவேளை, கனேடியப் பாதுகாப்புப் புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் இந்தியாவின் உள்துறை செயலர் ஜி.கே. பிள்ளை மற்றும் 'றோ' புலனாய்வு அமைப்பின் தலைவர் ஏ.கே.வர்மா ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பேச்சுகளில் ஈழத் தமிழ் அகதிகள் கடனாவுக்குச் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகள் குறித்துப் பேசப்பட்டன எனத் தெரியவருகிறது.

## சர்தாரி 28ஆம் திகதி இலங்கை வருகை

கொழும்பு,நவ.20

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசீப் அல் சர்தாரி எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கை வருகிறார் என இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே இவர் இலங்கை வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வீதிகள் அகலிப்பு; செவ்வாயன்று கூட்டம்


யாழ்ப்பாணம்,நவ.20

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பலாலி வீதி, காங்கேசன்துறை வீதிகளை அகலமாக்குவது தொடர்பாக மக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்கான கூட்டம் எதிர் வரும் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பலாலி வீதிக்கான கூட்டம் திருநெல்வேலியில் அமைந்துள்ள நல்லூர் பிரதேச செயலகத்தின் முன்னைய கட்டடத்தில் காலை 10 மணிக்கும், கே.கே. எஸ்.வீதி அகலமாக்குதல் தொடர்பான கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. இரு பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (201-7)

# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இனி ஒருபோதும் இடமளியோம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



இந்நிலையில், நமது நாட்டை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டுசெல்ல வேண்டிய வேலைத்திட்டங்களையே நாம் முன்னெடுக்க வேண்டும். அந்த வகையில் இன்று முதல் 'மஹிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தை முன்னெடுத்து இந்த நாட்டை சிறந்த நாடாகக் கட்டியெழுப்புவோம். மன உறுதியுடன் நாம் இந்த நாட்டை இன்று பொறுப்பேற்கிறோம்.

கடந்த 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது. ஆனால் இனி அவ்வாறானதொரு நிலைமை உருவாகாது. அப்படி உருவாகவும் நாம் இடமளியோம்.

இன்று கிராமங்களில் புதிய ஒளி பிறந்துள்ளது. பல கிராமங்கள் அபிவிருத்தியடைந்துள்ளன. இந்நிலையில், மேலும் பல கிராமங்களை அபிவிருத் தி யடைந்த வலயங்களாக உருவாக்குவோம். தாய்நாட்டின் அபிவிருத்திக்கான தேசிய கதவு திறக்கப்பட்டுள்ளது. ஒரு துளி நீர் கூட கடலில் கலக்க விடாது நாட்டை அபிவிருத்திக்கு உட்படுத்துவோம். நாட்டுக்காகத் தியாகத்துடன் வேலை செய்யும் அனைவருக்கும் கௌரவ மானதொரு சூழலை உருவாக்குவதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

எமது இளைஞர்கள் நாட்டின் எதிர்கால சொத்துக்களாவர். அவர்களின் பலம் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. இந்நிலையில் 3 மொழிகளையும் அறிந்த எதிர்கால பிரஜைகளாக அவர்களை உருவாக்க வேண்டும். இலங்கையின் எதிர்காலப் பிரஜைகள் சர்வதேசத்தில் முதலிடம் பெறவேண்டும்.

பஞ்சமகா கேந்திர நிலையமாக இலங்கையை உருவாக்க வேண்டும். அதன் மூலம் ஜாதி, மத பேதங்கள் மட்டுமன்றி அரசியல் பேதங்களும் மறைந்துவிட வேண்டும். அபிவிருத்தி இல்லாத இடத்தில் சமாதானம் இல்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்காக பல்வேறு நாடுகளும் எமக்கு உதவி வழங்கின. அதே போன்று அபிவிருத்திக்காகவும் பல நாடுகள் உதவ [illegible] வந்துள்ளன. அதனால் [illegible] தேச நாடுகளும் முன்னெடுத்த ஒப்பந்தங்களை அபிவிருத்தி நோக்கிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சட்டவிரோத நடவடிக்கைகள், யுத்தம், போதைப் பொருள், ஆயுதங்கள், ஊழல் மோசடிகள் ஆகியவை அற்ற நாடே எமக்கு வேண்டும்.

நான் ஓய்வு பெற்றதன் பின்னர் இந்த நாட்டின் பிரஜையொருவர் "நீங்கள் இந்த நாட்டுக்காக செய்ய வேண்டிய பொறுப்புகளை ஒழுங்காகச் செய்துள்ளீர்கள்" என்று கூறினால் அதுவே எனது வெற்றியும் நான் செய்த வேலைகளுக்குமான திருப்தியுமாகும்.

இந்நிலையில், நாம் அபிவி [illegible] வேண்டும். எமது தாய் நாடு இலங்கை. அதனை மிகவும் பொறுப்புடன் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. நாம் எல்லோரும் இலங்கையர்கள். இங்கு எல்லோருக்கும் சம உரிமைகள் இருக்க வேண்டும். அது தான் எமது தேவை.

பயங்கரவாதத்தின் பிடியில் சிக்குண்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்று விடுவிக்கப்பட்டு அங்கு வரலாற்றில் இல்லாத பல அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. இன்று வடக்கில் மக்கள் சுதந்திரமாக வாக்களித்துள்ளனர். அதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் அனைத்து வளங்களும் காணப்படுகின்றன. மேலும் பல வளங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் எமது இலங்கை ஒரு சிறிய நாடு என்று எவ்வாறு கூறமுடியும்?

முயற்சியுடையான் இகழ்ச்சியடையான். இந்தக் கூற்றுக்கமைய தாய்நாட்டின் அபிவிருத்தி மற்றும் நல்ல எதிர்காலத்துக்காக அனைவரும் எம்முடன் எழுந்து வர வேண்டும் என்று அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். அனைவருக்கும் நல்லதொரு எதிர்காலம் உருவாக பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

- இப்படி ஜனாதிபதி கூறினார். (உ-சி)

### கிளிநொச்சியில் நாளை தே.அ.அட்டை வழங்கும் நடமாடும் சேவை

கிளிநொச்சி,நவ.20


மத்திய வங்கியின் அனுசரணையுடன் ஆள் பதிவுத் திணைக்களம் கிளிநொச்சியில் நாளை ஞாயிற்றுக்கிழமை தேசிய அடையாள அட்டை தொடர்பான நடமாடும் சேவையை நடத்துகின்றது. கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடமாடும் சேவை ஆரம்பமாகும்.

கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்கள் இதில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்றும் தேசிய அடையாள அட்டைக்குரிய புகைப் படங்கள் இலவசமாக எடுத்து வழங்கப்படும் என்றும் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு காணாத கொண்டாட்டத்துடன் பதவியேற்பு

காலி முகத்திடலில் இருந்து
உதயன் செய்தியாளர்



ஒரே நாடு, ஒரே மக்கள், நாம் அனைவரும் ஒரே குடும்பம். அனைத்து இன மக்களும் சமத்துவத்துடனும் சமதானத்துடனும் வாழவேண்டும் என்பதே எனது நோக்கமும் இலட்சியமும் என்று முழக்கமிட்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று காலிமுகத் திடலில் பல லட்சம் மக்களின் முன் தனது இரண்டாவது பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னரே ஜனாதிபதி இப்படிக் கூறினார்.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஐந்தாவது ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தைப் பொறுப்பேற்றுள்ளார்.

பிரதம நீதியரசர் அசோக.டி சில்வா முன்னிலையில் சுப வேளை 10.14 மணிக்கு கையொப்பமிட்டார்.

பதவியேற்பு வைபவம் பல்லாயிரக் கணக்கான பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்புடன் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த மக்கள் காலை ஏழுமணி முதலே காலிமுகத் திடலை வந்தடைய ஆரம்பித்தனர். ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை, ஜனாதிபதி மாளிகை மற்றும் பொலிஸ் தலைமையகம், துறைமுகம் அமைந்துள்ள அனைத்து வீதிகளும் பாதுகாப்பிற்காக மூடப்படிருந்ததால் பொதுமக்கள் காலி முகத்திடலை வந்தடைவதில் சிரமம் அடைந்தனர்.

ஜனாதிபதியின் வசிப்பிடமான அலரி மாளிகை முதல் ஜனாதிபதி செயலகம் வரை தேசியக் கொடிகளாலும் பல வர்ணக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு அப் பகுதியே விழாக்கோலம் பூண்டிருந்தது.

காலை 8.30 மணிமுதல் பிரதமர், சபாநாயகர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை முதல் அமைச்சர்கள் எனப் பலரும் காலிமுத்திடலுக்கு வர ஆரம்பித்து விட்டனர்.

இவர்களுடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் வெளிநாட்டு விசேட பிரதிநிதிகளும் தமக்கென ஒதுக்கப்பட்ட விசேட ஆசனங்களில் வந்து அமர்ந்து கொண்டனர். கோல உடை தரித்த இராணுவ வீரர்களின் பான்ட் வாத்திய இசையுடன் முப்படையினர் விசேட மேடையின் முன் அணிவகுத்து நின்றனர்.

### ஜனாதிபதி வருகை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சரியாக 10.09 மணிக்கு திருமதி ராஜபக்ஷ, புதல்வரும் நாடாளு மன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ உட்பட மூன்று புதல்வர்களுடன் ஜனாதி பதி செயலகத்தின் பிரதான வாயில் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு வந்தார்.இந்த விசேட மேடை உதய சூரியனின் வடிவில் அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து பிரதம நீதியரசர் அசோக டீ. சில்வாவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் மேடைக்கு வந்தனர்.

### பதவியேற்பு

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 3ஆவது அரசமைப்பின் 3ஆம் பிரிவின் 'அ' விதிக்மைய, 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க தேர்தல்கள் சட்டத்திற்கு அமைய நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாகப் பதவியேற்கின்றார் என்ற உத்தியோகபூர்வ பிரகடனத்தை வாசித்தார்.

ஜனாதிபதியின் செயலளர் இப்பிரகடனத்தை சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வாசித்தார்.

இதைத் தொடர்ந்து சரியாக 10.14 மணிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்பு ஆவணம் மற்றும் உறுதியுரை என்பவற்றில் கையெழுத்திட்டு தனது இரண்டாவது பதவிக் காலத்தில் காலடி எடுத்து வைத்தார். மஹிந்த இதே வேளை பஞ்சதீப மத அனுஷ்டானங்களும் மதத்லைவர்களின் ஆசிப் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

### முப்படைகளின் அணிவகுப்பு

பதவிப் பிரமாணம் நிறைவடைந்தபின் முப்படைகளின் தளபதிகள் பிரதான வாயில் வழியாக தேசபிதா டி.எஸ்.சேனநாயக்காவின் சிலைக்கு முன் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு ஜனாதிபதியை செங்கம்பளம் வழியே அழைத்துச் சென்றனர்.ஜனாதிபதியின் பாரியாரும் புதவர்களும் இடது பக்க படிகளில் இருக்க பிரமுகர்கள் வெளியில் போய் அமர்ந்து கொண்டனர்.

இவ்வேளையில் ஜனாதிபதி செயலத்தில் பிரதான வாயிலில் வானவில் போன்று அமைக்கப்பட்ட அரைவட்ட கோணத்தில் வெள்ளை, இளம்நீல உடையணிந்த பாடசாலை மாணவிகள் ஜெயமங்கள கீதம் இசைத்தனர்.இதனைத் தொடர்ந்து தேசிய கீத இசையுடன் இடம்பெற்ற முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

### பீரங்கி வேட்டுகள்

முப்படைகளின் அணிவகுப்பைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு கௌரவம் அளிக்கும் வகையில் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

### மங்கள பேரிசையும் கண்டிய நடனமும்

அடுத்ததாக ஒரே வேளையில் நடனக் கலைஞர்கள் மங்கள பேரிகை முழங்க அதே அளவிலான இளம் நங்கையர்கள் கண்டிய நடனம் ஆடி மகிழ்வித்தனர்.

### கடற்கன்னிகளின் களியாட்டம்

நேற்றைய நிகழ்வுகளில் உள்நாட்டு பிரமுகர்கள் உட்பட அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது கடற்கன்னிகளின் களியாட்ட நடனம்.

விசேட மேடைக்கு முன் கடற்கரையில் இருந்து கடற் கன்னிகளைப் போன்று அலங்காரம் செய்யப்பட்ட பெருந்திரளான யுவதிகள் மேடையை நோக்கிவந்தது ஒருபெரிய மீன் கூட்டம் நீந்தி வருவது போல் இருந்தது. இவ்வாறு மேடையை நோக்கி வந்தவர்கள் இசைக்கப்பட்ட இசைக்கேற்ப நடனமாடி வண்ணத்துப் பூச்சிகளைப் போன்று மாறினர். இறுதியாக கொப்புடன் கூடிய சூரியகாந்திப் பூவைப்போன்று பூவின் வடிவில் அணிவகுத்து நின்றது வெகு சிறப்பாக இருந்தது.

இந் நிகழ்ச்சிகள் யாவும் முடிவடைந்தபின் ஜனதிபதி மேடையில் இருந்து இறங்கி பார்வையாளர்கள் வரிசைகளுக்கு வந்து அமைச்சர்கள் வெளிநாட்டு பிரமுகர்களுக்கும் கைலாகு கொடுத்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### பாதுகாப்பை உடைத்தெறிந்த ஜனாதிபதி

அனைத்து நிகழ்சிகளும் நிறைவு பெற்றபின் கோல உடையணிந்த மோட்டார் சைக்கிள் வீரர்கள் முன் செல்ல குதிரைப்படை வீர்கள் பின்னே வர ஜனாதிபதி காரில் ஏறி அலரி மாளிகைக்குச் சென் றார். பொதுமக்கள் வழியின் இருபக்கங் களிலும் பெருந்திரளாகக் கூடி விட்டனர். அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் பெரிதும் சிரமப்பட்டனர்.

இந்த வேளையில் ஜனாதிபதி காரில் இருந்து இறங்கி பாதுகாப்பை மீறி பொதுமக்கள் முன் சென்று அவர்களுக்கு கைலாகு கொடுத்தும் கையசைத்தும் நன்றி கூறினார். ஜனாதிபதியின் இந்த திடீர் செயல் பாதுக்காப்பு பிரிவினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது.பின்னர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஜனாதிபதியை அவரது வாகனத்தில் அழைத்துச் சென்றனர்.

## காஸ் சிலிண்டர் கசிவு; தீப்பிடித்து பெண் பலி

நாகொடைப் பகுதியில் சமையலறையில் சிலிண்டரில் இருந்து காஸ் கசிந்திருந்ததை உணராத மூதாட்டி ஒருவர் மின்சார விளக்கின் சுவிட்சை அழுத்தியதும் தீப்பற்றி எரிந்து கருகி மரணமானார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாகொடை வாசியான பேர்லி விக்கிரமசிங்க (வயது 81) என்ற மூதாட்டியே மரணமானவராவார். (ஒ-5)

## புதிய கர்தினாலாக மல்கம் றஞ்சித் இன்று வத்திக்கானில் பதவியேற்கிறார்

கொழும்பு, நவ.20

கொழும்புப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கர்தினால் பதவிக்கான கிரீடம் அணிவிக்கும் விழா பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் தலைமையில் இன்று சனிக்கிழமை ரோமிலுள்ள வத்திக்கான் நகரில் இடம்பெறுகிறது.

உலகின் பல திசைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேலும் 23 பேராயர்களுக்கு இந்த விழாவில் வைத்துப் பாப்பரசரினால் கர்தினால் கிரீடங்கள் அணிவிக்கப்படவுள்ளன.

இந்த விழாவில் இலங்கை அரசின் சார்பாக மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்ணாண்டோ, பிரதியமைச்சர்களான நியோமல் பெரேரா, சரத் குணரத்ன ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

கர்தினால் கீரிடங்களை அணிவிக்கும் உத்தியோகபூர்வ விழாவின் பின்னர் நாளை ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் புனித பீற்றர் சதுக்கத்தில் பாப்பரசரின் தலைமையில் திருப்பலியும் இடம்பெறும். இதில் புதிய கர்தினால் பதவியை ஏற்கும் பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு புதிய மோதிரங்களை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதியன்று இத்தாலியில் வாழும் இலங்கைக் கிறிஸ்தவ மீக்களுடன் இணைந்து திருப்பலி பூசையொன்றையும் புதிய கர்தினால் மல்கம் றஞ்சித் ஒப்புக் கொடுப்பார். எதிர்வரும் 27 ஆம் திகதி நாடு திரும்பும் கர்தினால் மலகம் ரஞ்சித் ஆண்டகையை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கோலாகலமாக வரவேற்பதற்கும் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (த-22)

## பல்கலை மாணவர் ஒன்றியம் நெடுந்தீவில் அங்குரார்ப்பணம்

பல்கலைக்கழக நெடுந் தீவு மாணவர் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் மாணவ கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய மண்படத்தில் இடம் பெறவுள்ளன.

ஒன்றியத்தின் தலைவர் வே. சிவாகரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் செ. மகேஸ் கலந்துகொள்வார். (ஒ-ஐ)

## சமூக விழிப்புணர்வு கருத்தரங்கு

தொண்டைமானாறு கெருடாவில் திறந்தபாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை சமூக விழிப்புணர் வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட போதனாசிரியர் செ.குணசிங்கம் தலைமை யில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் டெங்கு ஒழிப்பு, எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு குறித்தும் திறந்த [illegible] படும். (ஒ-ற-235)

## கழிவு நீர் வாய்க்கால் மூடிகள் மீண்டும் சேதம்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ்ப்பாணம், வின்சர் சந்தியில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையதிற்கு முன்பாகவுள்ள கழிவுநீர் வாய்க்காலின் மூடிகள் மீண்டும் சேதமடைந்து காணப்படுகின்றன.

எரிபொருள் நிரப்புவதற்காக அப்பகுதிக்கு வரும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளும் இந்த உடைவுகள் காரணமாக ஆபத்தை எதிர் நோக்குகின்றனர்.

சேதமடைந்து சில மாதங்களுக்கு முன்னர் திருத்தம் செய்யப்பட்ட போதிலும் மீண்டும் பல இடங்களில் உடைவுகள் ஏற்பட்டு பாதுகாப்பு அடையாளமாக ரயர்கள், தடிகள் வைக்கப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

எனவே இந்த வாய்க்காலை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-201-135)

## பண்ணை வீதி புனரமைப்பு மந்த கதியில் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் சிரமத்தில்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ். பண்ணை வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.

பண்ணைப் பாலத்தடியில் இருந்து இந்தப் புனரமைப்பு வீதி அகலிப்புப் பணிகளும் கடந்த சில மாதங்களாக மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

வீதி அகலிப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவரால் மேற்படி வீதி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை விதிப் புனரமைப்பு மந்தக்தியில் நடைபெற்று வருவதால் வீதியால் பயணம் செய்யும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

தீவுப் பகுதிக்குச் செல்லும் இந்த பிரதான நூழைவாயில் விதியை விரைவாகச் செப்பனிட்டு மக்களின் போக்கு வரத்திற்கான சிரமங்களை தவிர்ப்பதற்கான அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (201 - 26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இராசரத்தினம் - புஸ்பராணி
தம்பதியரின்
செல்வப் புதல்வன் செல்வன்

**இராசரத்தினம் லிந்துஜன்**
(சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்.)

2010இல் நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 166 புள்ளிகளைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரின் கல்வி ஊக்கத்திற்கு முன்னோடியாக விளங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் விஷேடமாக கல்வி கற்பித்த ஆசிரியை சுரேஸ் ரஜிதா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு கல்வியில் சிறந்து விளங்க புனித அந்தோனியாரின் அருளையும் ஆசியையும் வேண்டி நிற்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
உற்றார், உறவினர்,
நண்பர்கள், பெற்றோர்.

392/2, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(106270)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### அறிவித்தல்

**பட்டச் சான்றிதழ் வழங்கல்**

*கலைமாணி, வணிகமாணி, இசை மாணி மற்றும் நடனமாணி*

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் சித்தியடைந்த வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச்சான்றிதழ்களை 22.11.2010 (திங்கட்கிழமை) தொடக்கம் வழங்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. உரியவர்கள் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் நேரடியாக வந்து பெற்றுக் கொள் ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

மேற்படி பட்டச் சான்றிதழ்களுக்கான கட்டணமாக ரூபா. 500 இனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டை வெளி வாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
19.11.2010 (சி/573065)

## ஐந்தாம் ஆண்டு நினைவுச் சங்கமம்



மண் மகிழ 08 . 06 . 1931
கண் நெகிழ 14 . 12 . 2005

### அமரர் செல்லையா தம்பித்துரை

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகார சபை அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை உபதலைவர்)

திதி: சதுர்த்தசி - 20.11.2010

இப்பாரில் இனி எமக்கு கிட்டாத உறவு
எங்களுக்காய் இவ்வுலகில் இறைவன் தந்த பரிசு
தப்பாமல் எமக்கனைத்தும் தந்த எங்கள் அப்பா- நீங்கள்
அப்பாலே சென்றாலும் அனுதினமும் மறவோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.
(106279)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயத்தில் மகசின் சிறைச்சாலையில் அரசியல் கைதியின் பட்டினிப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

தனது விடுதலையை வலியுறுத்தி புதிய மகசின் சிறைச்சாலையில் பட்டினிப் போராட்டம் நடத்திவரும் கனகசபை தேவதாசனின் உடல்நிலை மோசமடைகிறது என சிறைச்சாலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து ஐந்தாவது நாளாக அவரது போராட்டம் தொடர்கிறது. நேற்று சிறைச்சாலை நலன்புரிச் சங்கச் செயலாளர் வை.எம்.குணவர்த்தன தேவதாசனைப் பார்த்துப் பேசினார். ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலத்திற்கான பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டு பட்டினிப் போராட்டத்தைக் கைவிடுமாறு அவர் தேவதாசனிடம் கோரினார்.

அந்தக் கோரிக்கையை நிராகரித்த தேவதாசன் தனது போராட்டத்தைத் தொடர்வார் எனச் சிறையில் இருந்து நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## மரண அறிவித்தல்

### திருமதி
### நாகரத்தினம் விசுவரத்தினம்



சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் விசுவரத்தினம் 19.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற விசுவரத்தினத்தின் அன்பு மனைவியும், சற்குணநாதன், சறோஜினி தேவி, சிறீஸ்கந்தராசா, யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசலா தேவி, தவரஞ்சன், சித்திரா, பிரபலதா (ஆசிரியர், யா/ மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியும், விதுசன், பிருந்திரன், துவாரகன், கிருசாந்தன், தனிஸ்ரன், தஸ்மினி, மயூறன், மயூ ரதன், சஜீவன், தர்ஷனா, தயானி, சிசுதன், துதிப்பிரியன் ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2010) சனிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் சங்குவேலியில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி.சற்குணநாதன் (மகன்),
வி.சிறீஸ்கந்தராசா (மகன்),
வி.யோகநாதன் (மகன்).

சங்குவேலி தெற்கு,
சங்குவேலி.

## சேவைநலன் பாராட்டு

### திரு.வன்னியசிங்கம் குகவேள்

(கல்விமாணி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக்கல்வி)



கடமைதனை கண்ணாக
கல்விசேவைதனை கருத்தாக
அளப்பரும் பணியாற்றி அகவை
அறுபதில் இளைப்பாறும்
உங்களை மனதார
வாழ்த்துகின்றோம்.

என்றும் வாழ்த்துக்களுடன்:
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
ஆரம்பக்கல்வி ஆலோசகர்,
ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள்,
சண்டிலிப்பாய்க் கோட்டம்.
(106204)

## மரண அறிவித்தல்கள்

### கனகராஜா ஞானாம்பிகை



அராலியைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, ஐந்துசந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராஜா ஞானாம்பிகை நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் கனகராஜாவின் பாசமிகு மனைவியும் பரராஜசிங்கம், பரமசிவம், காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி, வசந்தமலர், கமலநாயகி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.11, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சபேசன் (மருமகன்).

### அப்புத்துரை யோகம்மா



மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை யோகம்மா நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் (வைத்தியரும், சமாதான நீதிவானும், முன்னாள் மானிப்பாய் பட்டினசபையின் உறுப்பினரும்) அன்பு மனைவியும் உமா பதிசிவம் (இ.போ.ச., வவுனியா), விவேகானந்தன் (முன்னாள் M.P.C.S. முகாமையாளர்), சிவரூபன் (வலயக் கல்விஅலுவலகம், தென்மராட்சி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியும் ஜஸ்ரினியன், சிவப்பிரியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2010) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்,
0776952117

தகவல்:
பிள்ளைகள்.

உ
சிவமயம்

## உள்ளமதில் உறைந்துள்ளீர்

31[ஆம்] ஆண்டு நினைவு — 1[ஆம்] ஆண்டு நினைவு





**அமரர் பொன்னுச்சாமி நாகலிங்கம்**
மார்கழி பூர்வபட்ச ஏகாதசி

**திருமதி மனோன்மணி நாகலிங்கம்**
கார்த்திகை பூர்வபக்க சதுர்தசி

அன்புள்ள ஐயா! அன்புள்ள அம்மா!
கண்மணிபோல் எமைக்காத்து கருத்துடனே வளர்த்தீர்
எண்எழுத்து கற்பித்து ஏற்றமுற வைத்தீர்
மண்மீது இன்பமுற வாழவழி சமைத்தீர்
பொன்னுலகு போயமர்ந்தீர் பொற்புறவே வாழ்வீர்
மன்னுநெறி மக்கள் எம் உள்ளமதில் உறைந்தீர்
அன்பு நிலை உறவுகளின் நெஞ்சமதில் நிறைந்தீர்
விண்ணினின்று எமை வாழ்த்தி நல்லாசி புரிவீர்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(சி/573055)

பாசமுடன்:
பிள்ளைகளும், உறவுகளும்.

## நான்காம் ஆண்டு நினைவு நாள் | முதலாம் ஆண்டு நினைவு நாள்





**அமரர்**
**சிவலை வல்லிபுரம்**
திதி: சதுர்த்தசி
மலர்வு 25.03.1932 உதிர்வு 03.12.2006

**திருமதி**
**வல்லிபுரம் மகேஸ்வரிஅம்மா**
திதி: அமாவாசை
மலர்வு 22.12.1933 உதிர்வு 22.06.2009

அன்புக்கு அணிகலனாய்- பாசத்திற்கு பிறப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்- சுமைதாங்கியாய் வாழ்ந்து
எம் நல்வாழ்வுக்கு அறிவொளி ஊட்டிய- எம் தாய் தந்தை
ஆண்டுகள் பல கடந்தாலும் எம் இதயத்தில் என்றும் ஒளி
வீசிக்கொண்டேயிருப்பார்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் வேண்டுகின்றோம்.

[illegible], சமரபாகு, வல்வெட்டித்துறை. (104492)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நாட்டின் எதிர்காலம் ஒளிவீச...

✱ இலங்கையை பஞ்சமகா கேந்திர நிலையமாக உருவாக்க வேண்டும். அதன் மூலம் சாதி, மத பேதங்கள் மட்டுமன்றி அரசியல் பேதங்களும் மறைந்து விட வேண்டும். அபிவிருத்தி இல்லாத இடத்தில் சமாதானம் இல்லை.

✱ .....எமது தாய்நாடு இலங்கை. அதனை மிகவும் கவனமாக பாதுகாக்க 'வேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு. நாம் எல்லோரும் இலங்கையர்கள். இங்கு எல்லோருக்கும் சம உரிமைகள் இருக்க வேண்டும். அதுதான் எமக்குத் தேவை.

✱ எமது இளைஞர்கள் நாட்டின் சொத்துக்கள் ஆவர். அவர்களின் பலம் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. இந்நிலையில் 'அவர்களை எதிர்காலத்தில் மூன்று மொழிகளும் தெரிந்த பிரசைகளாக உருவாக்க வேண்டும். எமது எதிர்காலப் பிரசைகள் சர்வதேசத்தில் முதலிடம் பெறவேண்டும்.

✱ எமது நாட்டில் அனைத்து வளங்களும் காணப்படுகின்றன. மேலும் பல வளங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறிருக்க எமது நாட்டை, இலங்கையை, சிறிய நாடு என்று எவ்வாறு கூறமுடியும்?

இலங்கை, குடியரசு நிலையை ஏற்படுத்திக் கொண்ட பின்னர், ஆறாவது ஜனாதிபதியாகவும் இரண்டாவது தடவையாகவும் நேற்றுப் பதவி ஏற்ற பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் மேற்சொன்ன முக்கிய கருத்துக்களை முன்வைத்திருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

தாய் நாட்டின் அபிவிருத்தி மற்றும் எதிர்காலத்துக்காக அனைவரும் தம்முடன் எழுந்து வரவேண்டும் என்றும் ஜனாதிபதி அறை கூவல் விடுத்திருக்கிறார்.

நாம் எல்லோரும் இலங்கையர்கள். இங்கு எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு. அதுதான் எமக் குத் தேவை என்ற ஜனாதிபதியின் கருத்தும் -

''......சாதி மத பேதங்கள் மட்டுமின்றி இந்த நாட்டில் அரசியல் பேதங்களும் மறைந்துவிடவேண்டும் என்ற அவரது விருப்பமும் - அவாவும் - கவனத்தை ஈர்க்கின்றன.

தாமும் இலங்கையர்கள் என்று சிறுபான்மை இன மக்களான தமிழர்களும், முஸ்லிம்களும் மனதார உணர்வதற்கு பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கு உரிய சகல உரிமைகளும் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஆனால், நாட்டின் தேசிய மொழிகளான சிங்களத்துக்கும் தமிழுக்கும் சரிசமமான அந்தஸ்து இன்னும் வழங்கப்படவில்லை. 1956 இல் இயற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் அவ்வாறே இருக்க, தமிழும் உத்தியோகபூர்வ மொழியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வளவு தான்.

இலங்கையர்கள் எல்லோரும் சமஉரிமை உடைய வர்களாவதற்கு, மொழி உபயோக விடயத்தில் சிங் களத்துக்கும் தமிழுக்கும் சரிசமமான அந்தஸ்து வழங்கப்படவில்லையே....!?

எல்லோருக்கும் சம உரிமைகள் உண்டு. அதுதான் எமக்குத் தேவை என்ற ஜனாதிபதியின் விருப்பம், நடைமுறையில் அர்த்த புஷ்டியுள்ளதாக வடிவெடுக்க வேண்டுமெனில் -

சிங்களமும் தமிழும் நாட்டின் உத்தியோக மொழிகள் என்ற புதிய சட்டம் இயற்றப்பட வேண்டும். அல் லது திருத்தப்பட வேண்டும்.

நாட்டின் இளைஞர்களை மூன்று மொழிகளும் தெரிந்த பிரசைகளாக உருவாக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் விருப்பம் வரவேற்கப்பட வேண்டியது. எல்லோராலும் ஆதரிக்கப்பட வேண்டியது. சிங் களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்ற ஜனா திபதியின் புதிய விருப்பம் நாட்டிற்கு, குறிப் பாக எமது நாட்டின் இளைஞர்களுக்கு நல்ல எதிர் காலத்தை உருவாக்கும்.

ஜனாதிபதி தமது மேற்சொன்ன விருப்பத்தை, தமக்குள்ள அதிகாரத்தையும் அமோக ஆதரவையும் பயன்படுத்தி, அதற்கான சட்ட வசதிகளையும், அமுலாக்க விதிகளையும் நிறைவேற்ற வேண்டும். இலங்கை வளம் மிக்க நாடாக விளங்குவதற்கும் புதிய மில்லேனியத்துக்குள் விரைந்து காலடி எடுத்து வைக்கவும் அது வழி செய்யும்.

இரண்டாவது தடவையாகவும் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்த கையோடு அவருக்கு உதித்த புதிய சிந்தனைகளை அவர் அர்த்த பூஷ்டியுடன் செயலாக்க வேண்டுமெனின்-

அவர் அழுத்தி மொழிந்துள்ள அரசியல் பேதங்கள் மறைந்து விடுவதற்கு முதலில் வகை செய்ய வேண்டும்.

தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய அரசியல் உரிமைகளை வழுவின்றி வலுவுள்ளதாக வழங்க வகை செய்வாராயின், அவரது பெயர் இந்த நாட்டின் சரித்திரத்தில் சிறப்பு அத்தியாயமாக மிளிர்ந்து ஒளி வீசும். தமிழ் மக்கள் சார்பில் இந்த வேண்டுகையை மாண்புமிகு ஜனாதிபதியிடம் முன்வைக்கிறோம்.

# மனித உரிமைக் குழுவின் தலையீட்டால் கலைப்பீட அனுமதி பெற்றார் மாணவி

யாழ்ப்பாணம், நவ.20

கரவெட்டியைச் சேர்ந்த மாணவி ஒருவர் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய கிளையின் நடவடிக்கையை அடுத்து யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்துக்கு அனுமதிபெற்றுள்ளார்.

இது பற்றி தெரிய வருவதாவது:-

கரவெட்டியைச் சேர்ந்த புஸ்பராஜ் ஜீவனா என்ற மாணவி 2009 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு கலைப் பிரிவில் தோற்றியிருந்தார். அவர் பரீட்சையில் 2ஏ, பி என்ற பெறுபேற்றைப் பெற்றதுடன் இசற் புள்ளியாக 1.3387 புள்ளியைப் பெற்றிருந்தார்.

2009/2010 ஆம் கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதிக்கான முதல் படிவத்தை அனுப்பும் போது அதனுடன் அகில இலங்கை ரீதியில் தமிழ்த் தினப் போட்டியில் 2008 ஆம் ஆண்டு திறனாய்வுப் போட்டி, தமிழறிவு வினாவிடைப் போட்டி ஆகியவற்றில் முதலிடம் பெற்ற சான்றிதழ்களையும் அவர் இணைத்து அனுப்பியிருந்தார்.

இருப்பினும் இவ்ர் கலைப் பீடத்துக்கு அனுமதி பெறவில்லை. மட்டக்களப்பு விபுலானந்தா நுண் கலைக் கல்லூரிக்கே இவருக்கு அனுமதி கிடைத்தது. 2009 ஆம் ஆண்டுக்கான கலைப்பீட வெட்டுப் புள்ளி 1.3529 என்பதனால் இவர் அதனை விட 0.0142 புள்ளி குறைவாகப் பெற்றதனால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டி நூலின் 18ஆம் பகுதியில் அவ்வாறான குறைவான புள்ளி வித்தியாசத்தில் அனுமதி இழப்பவர்களில் தேசிய மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம்பெற்றுள்ளவர்கள் அவற்றைச் சமர்ப்பித்து அனுமதி பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட்ட போதும் இவருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நுண் கலைப்பீட அனுமதியே வழங்கியது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவி கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்தார். ஆணைக்குழு உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு குறித்த மாணவிக்கு அனுமதியைப் பெற்றுக் கொடுத்தது. இவருக்கு கடந்த 16 ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக் கழகத்தின் கலைப்பீட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையினால் இவ்வாறு பாதிக்கப்பட்டு பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுக் கொடுப்பது இரண்டாவது சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது. (த-9-15)

# மானிப்பாய் சந்தைக்கு புதிய கட்டடம் நவீன வசதிகளுடன் அமைக்க வேண்டும்

## வர்த்தகர் சங்கம் கோரிக்கை

சண்டிலிப்பாய், நவ.20

பல வசதியீனங்கள் மத்தியில் பழைமை வாய்ந்த கட்டடங்களில் பல வருடங்களாக இயங்கிவரும் மானிப்பாய் சந்தைக்கு நவீன வசதிகளுடன் புதிய கட்டடம் ஒன்றை அமைத்துத் தருமாறு மானிப்பாய் வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தகர் சங்கத்தின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட சந்தைக்குப் பின்புறமாக உள்ள காணியில் இதனை அமைக்குமாறும் அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தினதும் மானிப்பாய் பட்டினத்தினதும் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி மானிப்பாய் வர்த்தகர் சங்கம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.தென் மேற்குப் பிரதேச சபை நகர சபையாகத் தரம் உயர்த்தப்பட இருப்பதால், அதற்கேற்றவாறு மானிப்பாய் பட்டினத்தைப் பல துறைகளிலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேசத்தில் பஸ் நிலையம் இல்லாததனால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள். மானிப்பாய் கிறீன் வைத்தியசாலைக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுயில் பஸ் நிலையத்தை அமைத்துத் தருவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் வாகனம், ஆளணி ஆகியவற்றிற்குப் பற்றாக்குறை இருப்பதனால் மக்களுக்குச் சீரான சேவையைச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே ஆளணியை யும் வாகனத்தையும் அதிகரிக்க வேண்டும்.

வாகனங்கள் அதிகரிக்கப்பட்டதற்கு ஏற்றவாறு எரிபொருள் நிலையங்கள் அமையவில்லை.பெற்றோல் முன்பு போல் சகல இடங்களிலும் பெறமுடியாது. எரிபொருள் நிலையங்களில் மட்டும் தான் பெறமுடியும். இந்த நிலையில் மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள மானிப்பாய் எரிபொருள் நிலையத்தில் எரிபொருள்கள் அடிக்கடி முடிவடைந்து விடுகின்றன. குறிப்பாக பெற்றோல் அடிக்கடி முடிவடைவதால் பாவனையாளர் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அத்தியாவசியப் பொருளான பெற்றோலை ஒழுங்காகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மானிப்பாயிலுள்ள இந்து, கிறிஸ்தவ மக்கள் பயன்படுத்தும் மயானங்களைப் பார்ப்பதற்கு அழகான முறையில் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (த-115)

# சட்ட விரோத மது வகைகள் உற்பத்தி: கைதாவோருக்கு பொலிஸ் பிணை ரத்து

## சுற்றுநிருபம் மூலம் அறிவிப்பு

கொழும்பு, நவ.20

சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் சாராயம் தயாரிக்கும் குற்றவாளிகளுக்கு பொலிஸார் பிணை வழங்கும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் இது தொடர்பான சுற்று நிருபத்தை சகல பொலிஸ் அதிபர்களுக்கும் அனுப்பியுள்ளார்.

சட்ட விரோத மதுபானத்துடன் கைது செய்யப்படும் ஆண் பெண் இரு சாராரும் அறிக்கையுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தின் பிணையில் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டும் எனவும் எக்காரணத்தைக் கொண்டும் அவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்படக் கூடாது எனவும் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் தலைமையில் அண்மையில் உயரதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடும் நபர்களுக்கு உச்ச பட்ச தண்டனை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டதையடுத்தே பொலிஸ்மா அதிபர் பொலிஸ் பிணையை ரத்துச்செய்துள்ளார். (ஐ-5)

# வெடிபொருள் வெடித்து குடும்பஸ்தர் காயம்

கெற்பேலிப் பகுதியில் நேற்று வெடிபொருள் ஒன்று வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார்.

கெற்பேலி கிழக்கைச் சேர்ந்த சாமியப்பன் கணேசராஜா (வயது-37) என்ற குடும்பஸ்தரே காயமடைந்து சிகிச்சைக்காகச் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டுக்கு அண்மையில் உள்ள காணி ஒன்றில் விறகு எடுப்பதற்காகச் சென்றபோதே அங்கிருந்த வெடிபொருள் ஒன்று வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குசென்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (த-135)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 5 | | 21.11.2010 |
| | | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | : | பூரணை |
| | | மு.இ.11.51 வரை |
| நட்சத்திரம் | : | பரணி |
| | | மு.ப. 8.14 வரை |
| [illegible] | : | [illegible] |
| [illegible] | : | [illegible] |

# கொழும்பு-மதுரைக்கு இடையே விமான சேவை நடத்தத் திட்டம்

கொழும்பு, நவ.20

கொழும்புக்கும் மதுரைக்கும் இடையேயான விமானசேவையை அறிமுகப்படுத்துவது தொடர்பில் இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது விடயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவும் மதுரை விமான நிலையத்தின் தன்மையைக் கண்டறிவதற்கும் ஸ்ரீ லங்கன் விமான சேவையின் அதிகாரிகள் சிலர் நேற்று முன்தினம் மது[illegible] விஜயம் செய்திருந்ததாகவும் மேற்படி செய்திகள் கூறுகின்றன.

கொழும்பிலிருந்து மதுரைக்கு விமானசேவையை நடத்துவது தொடர்பாக இதன் போது ஆலோசிக்கப்பட்டதாகவும் விரைவில் இது தொடர்பான திட்டமொன்று இந்திய விமானப் போக்குவரத்து ஆணையகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப் படு கின்றது.

இந் நிலையில் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் முதல் இந்த விமான சேவை ஆரம்பிக்கப்படலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக மேற்படி செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



செல்வரத்தினம்
செல்லப்பாக்கியம்
(ஓய்வு பெற்ற மருத்துவ தாதி)

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம் அவரின் பிரிவால் துயரில் இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்போம்.

செல்லத்துரை குடும்பம்
நவக்கிரி, புத்தூர்.

(106268)


## கூடைப்பந்தாட்டம் இறுதிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை நடத்தும் முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான-

பாடசாலைகளுக்கு இடையிலான காடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதுகின்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். வேம்படி மகளிர்கல்லூரிஅணியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப்பாடசாலை அணி மோதுகின்றது. சிறப்பு ஆட்டமாக சென்றலைட்ஸ் கூடைப் பந்தாட்ட அணியை எதிர்ந்து யாழ். மாவட்ட அணி மோதும்.

(ஒ-23)

## கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை ஆரம்பம்

வலி. வடக்கு, நவ. 20

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படவிருக்கும் சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுடன் முதல் தடவையாக யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள பொலிஸ், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைகளின் அணிகளும் இப்போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடவுள்ளன.

பிரிவு IIIக்காக நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் அடுத்த கட்டமாக தேசிய மட்டப் போட்டிகளில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஒ-86)


# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 844 திகதி: 18.11.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| K | 16 | 19 | 24 | 35 | 55 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 22,281,425.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 294 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14565 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 204791 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 30,504 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**7,150,400.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**22,875,503.00**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360, 2433631 இணையம்: www.nlb.lk


# வருடாந்தப் பொதுச்சபைக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் 20.11.2010 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதை சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.


# ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 178 சீட்டிழுப்புத் திகதி 18.11.2010

| வெற்றி இலக்கங்கள் | | | | சுப்பர் இலக்கம் |
|---|---|---|---|---|
| 24 | 28 | 50 | 57 | 04 |

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,687,660/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதாவது 1 இலக்கத்துக்கும் | 58755 | ரூ. 20/= | ரூ. 11,75,100/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதாவது 1 இலக்கத்துக்கும் | 5401 | ரூ. 40/= | ரூ. 2,16,040/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதாவது 2 இலக்கங்களுக்கும் | 4536 | ரூ. 100/= | ரூ. 4,53,600/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதாவது 2 இலக்கங்களுக்கும் | 414 | ரூ. 200/= | ரூ. 82,800/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதாவது 3 இலக்கங்களுக்கும் | 122 | ரூ. 1,500/= | ரூ. 1,83,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதாவது 3 இலக்கங்களுக்கும் | 3 | ரூ. 3,000/= | ரூ. 9,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏதாவது 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 10,00,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏதாவது 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,687,660/= | |
| மொத்த எண்ணிக்கை | 69232 | | ரூ. 3,119,540/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. **8,866,250/=** உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


# வலிகாமம் வடக்கு பிரதேச சபை-காங்கேசன்துறை (மல்லாகம்)
## சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைத் தொகுதிகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல்-2011

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 29.11.2010 திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 30.11.2010 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி: 30.11.2010 செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திர பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **மல்லாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 100,000.00 | 1000.00 | 150.00 |
| 02 | மல்லாகம் பொதுச் சந்தை | - | 35,000.00 | 500.00 | 150.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 1,000.00 | 250.00 | 150.00 |
| 04 | மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 90,000.00 | 1000.00 | 500.00 |
| 05 | மல்லாகம் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 8,000.00 | 500.00 | 150.00 |
| 06 | கும்பழாவளை மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 8,0000.00 | 1000.00 | 500.00 |
| 07 | மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை | 500.00 | 20,000.00 | 250.00 | 100.00 |
| 08 | அளவெட்டி மலைவேம்பு கரு வாட்டுக்கடை இல.06 | 250.00 | 5,000.00 | 500.00 | 150.00 |
| 09 | அளவெட்டி மலைவேம்பு கரு வாட்டுக்கடை இல.07 | 250.00 | 5,000.00 | 500.00 | 150.00 |
| | **தெல்லிப்பழை உப அலுவலகம்** | | | | |
| 10 | கூத்தன்சீமாச் சந்தை | - | 5000.00 | 500.00 | 150.00 |

குறிப்பு:
★ மாத வாடகை யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்
★ கேள்விப் பத்திரப் பணம், கேள்வித் தொகை, மாத வாடகை ஆகியவற்றிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT 12%), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT3%) யும் மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
★ கேள்விப் பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டு வருதல் வேண்டும்.
★ இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.
★ போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
★ கேள்விப் படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியிலோ சேர்ப்பதுடன் கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கும் அனுப்புதல் வேண்டும்.
★ ஏனைய மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும், மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
19.11.2010 (சி/573053)

திருமதி யோகேஸ்வரி காசிலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).


# JEYA BEAUTY SALON



அழகுக்கலை கருத்தரங்கு
கொழும்பில் பிரபல்யமான
Jeya Beauty Salon உரிமையாளர்
N.Nagularani
(Dip.in. BTHD in Srilanka& India)

அவர்களால் நடத்தப்படும் அழகுக்கலை கருத்தரங்கு மற்றும் முடியுதிர்வுக்கான தீர்வு முகப்பருவுக்கான சிகிச்சை நம்மை நாமே அழகு படுத்துவது எப்படி என்பது பற்றியும் மேலும் அழகுக்கலை தொடர்பான பல விடயங்களை உள்ளடக்கியதுமான கருத்தரங்கு.
காலம்:- நவம்பர் 21ஆம் திகதி
யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்
காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை.

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்
★ மதிய போசனத்துடனானது
நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்கும் இடம்
திரேசா தளபாடமாளிகை(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்),
ஆறுமுகவிலாஸ்(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி),
துர்க்கா அரைக்கும் ஆலை (கனகரட்ணம் வீதி, அரியாலை)
நுழைவுச் சீட்டுக்கள் நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது ஆலயத்துடன் மிக நீண்ட நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருவதுடன் ஆலய வளர்ச்சியிலும் கரிசனை செலுத்தியதுடன் திருவிழா உபயகாரராகவும் இருந்து வந்த அமரர்

**சோமசுந்தரம் பத்மநாதன்**
(இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)

அவர்களின் மறைவையிட்டு துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த மனக் கவலையைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல விநாயகப்பெருமானை பணிந்து வணங்குகின்றோம்.

அரசடி விநாயகர் ஆலயம்,
கட்டுடை, மானிப்பாய்.

வழிபடுவோர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கைதடி இராசபுரி கிராம மக்கள் கோரிக்கை

## இயன்ற உதவிகள் செய்வதாக சரவணபவன் எம்.பி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

கைதடி, இராசபுரி கிராமத்தில் தங்கியுள்ள 59 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் நெருக்கடிக்கு மத்தியில் தாம் வாழ்ந்து வருவதாக அப்பகுதிக்கு நேரடியாகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கைதடிப் பிரதேசத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம், நவபுரத்தில் அமைந்துள்ள நவசன சனசமூக நிலையம், குமரநகர் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு நேரடியாக விஜயம் செய்தார். அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.



கைதடி, இராசபுரி கிராமத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அக்கிராம மக்களுடன் கலந்துரையாடுகின்றார்.

இதன்போது கைதடி இராசபுரி கிராமத்துக்குச் சென்ற போது, அங்குள்ள மக்கள் தமக்கு சுத்தமான குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் என்பன இல்லையெனத் தெரிவித்தனர். மேலும் முன்னர் கல் உடைக்கும் தொழிலில் தாம் ஈடுபட்டு வந்ததாகவும் தற்போது அந்தத் தொழிலை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் கூலிவேலை செய்து வருவதாகவும் தெரிவித்தனர். அத்துடன் அடிப்படை வசதிகளில் ஒன்றான பொது மலசல கூடமாவது அமைத்துத்தருமாறு வேண்டினர்.

பின்னர் நவபுரம் நவசன சனசமூக நிலையத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கேட்டபோது மக்கள் மேற்படி பகுதியிலுள்ள வீதியைத் திருத்தித் தருமாறும், இந்த வீதி மோசமடைந்திருப்பதால் சில வேளைகளில் பேருந்து கூட சேவைக்கு வருவதில்லை எனவும் தெரிவித்தனர்.

மேற்படி விடயங்களைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயங்கள் தொடர்பாக தம்மால் இயலுமானவற்றைச் செய்து தருவதாக கூறினார்.

இதேவேளை கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம், நவசன சன சமூக நிலையம், குமரநகர் சன சமூக நிலையம் மூன்றிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் தளபாடக் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(201-15)

## கணித புதிர்ப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.20



மாகாண மட்டத்தினால் நடத்தப்பட்ட கணிதப் புதிர் போட்டியில் கரவெட்டி கரணவாய் மகா வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவியான வி.சாளினி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாணவி வடமராட்சி வலய மட்டத்தினால் நடத்தப் பட்ட கணிதப்புதிர் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ற)

## நாளை மின் தடை

பராமரிப்பு வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை குறிப்பிட்ட சில பகுதிகளில் மின் தடை அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுன்னாகம் மல்லாகம், ஏழாலை அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை ஆகிய இடங்களிலேயே மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மாணவர் நன்மை கருதி நெடுந்தீவுக்கான மின் விநியோகம் 1/2 மணி நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் வசதிக்காக நெடுந்தீவுக்கான மின் விநியோகம் மேலும் 1/2 மணித்தியாலம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதிகாலை 4.30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை வழங்கப்படும் மின்விநியோகம் இன்று சனிக்கிழமை முதல் அதிகாலை 4 மணி முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரை நேற்றைய தினம் யாழ்.மின்சாரசபை அத்தியட்சகர் வழங்கியுள்ளார்.

இதேவேளை தூர இடங்களில் மின்விநியோகம் தடைப்படும் போது அதனை உடனடியாகச் சென்று பார்வையிடுவதற்கு கூடியதாக ஊழியர் பற்றாக்குறை உள்ளதாகவும் நெடுந்தீவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-7)

## ஆலங்குளாய் சனசமூக நிலையம் விஷமிகளால் தீக்கிரை

யாழ்ப்பாணம்,நவ.20

சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குளாய் சனசமூக நிலையக் கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இனந்தெரியாதவர்களினால் உடைக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சனசமூக நிலைய முன்றிலில் உள்ள இருக்கைகள், கட்டடக் கதவுகள் என்பவற்றை உடைத்துச் சேதப்படுத்திய விஷமிகள் கட்டடத்தினுள் ரயர்கள் போட்டுத் தீயிட்டுள்ளனர். இதனால் கட்டடப் பகுதி சேதமடைந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக சனசமூக நிலையத் தலைவரால் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(201-250)

## நீதியமைச்சின் நடமாடும் சேவை 27 ஆம் திகதி தென்மராட்சியில்

தென்மராட்சி, நவ.20

தென்மராட்சி பிரதேச மக்களுக்கான இலவச நடமாடும் சேவை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நீதி அமைச்சின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, உறுதிகள், முதியோர் அடையாள அட்டை ஓய்வூதியம், காணி, கடற்றொழில் போன்றவை தொடர்பான பிரச்சினைகளுக்கு நடமாடும் சேவையில் தீர்வு காணப்படவுள்ளன.

கொழும்பில் உள்ள திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் நடமாடும் சேவையில் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கவுள்ளனர்.

காலங் கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு போன்றவற்றுக்கும் தேசிய அடையாள அட்டை, ஓய்வூதியம் போன்றவற்றுக்கும் விண்ணப்பித்து இதுவரை கிடைக்காதவர்கள் முன் கூட்டியே பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் சேவையில் கொழும்பிலிருந்து வருகை தரும் விசேட மருத்துவக் குழுவினரால் மருத்துவ முகாமும் பரிசோதனையும் நடத்தப்படுமெனவும் சகல தர நோயாளர்களும் கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## பற்றைகளால் மூடப்பட்டுக் காணப்படும் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவாலயம்



யாழ்ப்பாணம், நவ.20

உலக தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்ட பத்து பொதுமக்களின் நினைவாக யாழ். முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவாலயம் பற்றைகளால் சூழப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள இந்த நினைவாலயத்தை எவரும் கவனிக்காது விட்டுள்ளமை குறித்து பலதரப்பட்டோர் மத்தியில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளுக்கும் தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் வருகை தருகின்ற போதும் இந்த நினைவாலயத்தின் நிலையைக் கண்டு கொள்ளவில்லையா என்று கேள்வி எழுப்புகின்றனர்.

வருடா வருடம் ஜனவரி 10ஆம் திகதி வரும் இந்த மக்களின் நினைவு தினத்திற்கு முதல் நாள்தான் இந்நினைவாலயம் துப்புரவு செய்யப்பட்டு அன்றைய தினம் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

## கிராம சேவகர் பிரிவு ரீதியாக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

### ஜனாதிபதியின் பதவி ஏற்பையொட்டி

வலி.வடக்கு, நவ.20

இலங்கை ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவையொட்டி அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இது சம்பந்தமான சுற்றறிக்கையொன்று இலங்கையில் உள்ள அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் இன்று சனிக்கிழமை அனைத்து கிராம அலுவலர் மட்டத்திலும் பின்வரும் அலுவலர்களை ஒன்றிணைத்து அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தும்படி பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கிராம அலுவலர்கள் தலைமையில் சமுர்த்தி அலுவலர், குடும்பநல அலுவலர், விவசாய அலுவலர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றை ஒன்றிணைத்து அபிவிருத்தி செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இல்லாத இடத்து சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 9 மணிக்கு தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் பாடுவதுடன், தொடர்ந்து இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துமுகமான சிற்றுரையும் 9.15 மணிக்கு வானொலியில் ஒலிபரப்பாகும் ஜனாதிபதியின் உரையை செவி மடுப்பதைத் தொடர்ந்து 9.30 மணிக்கு வேலைத்திட்டம் ஆரம்பமும் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் சார்ந்த அனுபவங்களை கற்றுத்தரும் பெருமை சைவசமயத்துக்குரியது

## துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம்,நவ.20

வாழ்வியல் சார்ந்த அனுபவங்களைக் கற்றுத்தரும் பெருமை சைவசமயத்திற்கு மட்டுமே உண்டு.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

யாழ்.வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழாச் சைவ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்:-

மனிதர் அகத்தும் புறத்தும் மாயைகளால் நிரம்பியுள்ளார்கள். அதிலும் 40 வீதமானோர் புறத்தூண் டல்களுக்கு அடிமையாகிச் சமய விழுமியங்களில் இருந்து முற்றிலும் விடுபட்டுள்ளார்கள்.சமயம் வேறு வாழ்க்கை வேறல்ல. அதனால் சமூகத்தினர் நம்பிக்கையுடன் சமய விழுமியங்களைப் பின்பற்றுதல் அவசியமாகும்-என்றார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நல்லை திருஞானசம் பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், சைவப் புலவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பொன்விழா சைவக் கலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வ ழங்கலும் இடம் பெற்றன. (204-313-311)




ஜயோதா

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 700 திகதி 18-11-2010

வெற்றி எண்கள்

07 08 30 51 E

ஜக்பொட் பரிசு ரூ. 13,636,030/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,636,030/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 2,000/= | 24,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 383 | 1,000/= | 383,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 574 | 1,000/= | 574,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15337 | 60/= | 920,220/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7164 | 40/= | 286,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 179469 | 20/= | 3,589,380/= |
| | | மொத்தம் ரூ. | 6,577,160/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூ.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 700547479-5-15 |
| அநுராதபுரம் | 700546390-1-41 |
| மாத்தளை | 700542843-6-26 |
| திருகோணமலை | 700553047-1-41 |
| அம்பாந்தோட்டை | 700541969-9-39 |
| கம்பஹா | 700554786-4-44 |
| கேகாலை | 700554326-0-10 |
| மொனராகலை | 700540027-3-13 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,977,160/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 14,121,760/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 நவம்பர் 22 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## மட்டக்களப்பு மேற்கில் 2ஆவது உபகல்வி வலயம்

மூதூர், நவ.20

கிழக்கு மாகாணத்தில் இரண்டாவது உபகல்வி வலயமாக மட்டக்களப்பு மேற்கு வவுணதீவு உப கல்வி வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.யூ. கே. வீரவர்தன தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு கல்விவலயம் ஆகியவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு இந்த உப கல்வி வலயம் அமைக்கப்பட்டுள்ளது. படுவான்கரை பிரதேசங்களைச் சேர்ந்த 60பாடசாலைகள் இதில் அடங்குகின்றன.

இந்த உபகல்வி வலயம் 2011 ஜனவரி முதல் இயங்க ஆரம்பிக்கும். கிழக்கு மாகாணத்தின் முதலாவது உபகல்வி வலயம் திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பிரதேசத்தில் இயங்கி வருகின்றது. இது ஜனவரி முதல் தனியான கல்வி வலயமாக இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ- 229)

## புகையிலைச் செய்கையில் தீவக விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,நவ.20

தீவுப்பகுதியில் புகையிலைச் செய்கை தற்போது களை கட்டியுள்ளது.

மண்டைதீவு, வேலணை போன்ற இடங்களில் விவசாயிகள் அதிகளவில் புகையிலைக் கன்றுகளை நடும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கென வடமராட்சிப் பகுதியில் இருந்து பெருமளவிலான புகையிலை நாற்றுக்கள் தீவுப்பகுதிக்குத் தினமும் எடுத்துச் செல்லப்படுகின்றன. (201-26)

## விஷ்ணு தீப பூசை

அளவெட்டி நாகேஸ்வரம், ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை விஷ்ணு தீப பூசை நடைபெறும்.

காலை 8 மணிக்கு விசேட அபிசேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகி 9 மணிக்கு சமய சொற்பொழிவு நடைபெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகி 11 மணிக்கு நாராயணர் வீதியுலா வருவார். இறுதியாக மாலை 5.30 மணிக்கு சொக்கப்பானை எரித்தல் நடைபெறும். (ற-160)

## போயா தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து காலை 8.45 மணிக்கு போயாதின நிகழ்ச்சிகள் நடைபெறும்.பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, மங்களாராத்தி ஆகியன இடம்பெறும் என யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தின் தலைவர் ஆர்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ற)




50ஆவது பிறந்த தின வாழ்த்து

கணபதி அமிர்தலிங்கம்

(உரிமையாளர், துஷந்தினி பந்தல் சேவை, கைதடி)

இன்று (20.11.2010)
சனிக்கிழமை
50ஆவது பிறந்த
தினத்தைக் கொண்டாடும்
எமது அப்பா க.அமிர்தலிங்கம்
அவர்களை இறையருள்
பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க
என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மனைவி- அ.புவனேஸ்வரி
மகன்மார்-அ.ரூபன் (இலத்திரனியல் பொறியியல் பீட இறுதி வருட மாணவன், நோர்வே)
அ.கயானன்
மகள்மார்-அ.துஷந்தினி,அ.கலக்சனா

"துஷந்தினி இல்லம்",
கைதடி மத்தி, கைதடி.


## மதிப்பளித்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.20

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் 2010ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களையும் கௌரவிக்கும் முகமாக "மதிப்பளித்தல் நிகழ்வு" நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலயத்தின் சின்னத்தம்பி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர் சி.திருவாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ற)


இன்று யாழ் நகரில்



IELTS இன்றி
Spot Admissions
மூலம் UK இல்
உயர் கல்வி

West End College London

இடம் : Green Grass Hotel & Restaurant | 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.

திகதி : 20th November 2010

நேரம் : காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை

Spot Admission by the College Representatives
Ms. Hannah Bilcliffe & Ms. Marie Lovett

VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

For appointment please contact :
0777-761346

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

4, IBC Road, Wellawatte, Colombo 6.
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk



வசீகரத் தோற்றத்திற்கு!

சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை.

‘சிவா நறுமணப் பூங்கா’
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.



STUDY IN U.K.



IELTS அவசியமில்லை

யாழ். நகரில் மிகக் குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்

January Admission இற்கான இறுதி வாய்ப்பு

★ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
★ சேவைக்கட்டணம் முற்றிலும் இலவசம்
★ மிகக் குறைந்த செலவில் Sponsor வசதிகள்
★ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
★ குடும்பமாகக் கல்வி பயிலக் கூடிய வாய்ப்புகள்
★ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்.
★ Visaவுக்கான 100% உத்தரவாதம்.
★ மிகக் குறுகிய காலத்தில் பயணஞ் செய்யலாம்.
★ Interview இன்றி 3 நாள்களுக்குள் அனுமதி.

தொடர்பு: 077 0871616

அலுவலக முகவரி:
245, பலாலி வீதி,
கந்தர்மடம்.
(Baby Photo அருகில்)

அலுவலக நேரங்கள்:
திங்கள் - சனி வரை
காலை 9 - பிற்பகல் 3.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த உயிர்களை எம்மால் மீட்டுத்தர முடியாது உங்கள் வாழ்வாதாரத்தையே வளப்படுத்த முடியும்

## ஒட்டுசுட்டானில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

முல்லைத்தீவு,நவ.20

போரின்போது இழந்த உங்களின் உறவுகளின் உயிர்களை எம்மால் மீட்டுத்தர முடியாது. ஆனால் உங்கள் வாழ்வாதாரத்தை எம்மால் வளப்படுத்த முடியும். இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ஷ.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான், நெடுங்கேணிச் சந்தியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபோதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரை யாற்றுகையில், வடக்குத் தெற்கு மக்கள் ஒன்றுபடும் நோக்க மாகவே வீதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இழந்த உயிர்களை எம்மால் மீட்டுத்தர முடியாது. ஆனால் ஏனைய தேவைகளை நாம் நிறைவேற்றி வைப்போம். இப்போது மின்சாரம் உங்கள் பகுதிக்கு ஏற்படுத்தித்தரப்பட்டுள்ளது. மேலும் விவசாயம், மீன்பிடி, வீதி திருத்தங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை நாம் நிவர்த்தி செய்து தருவோம். இப்பகுதியிலே நிரந்தரமாக வசிக்கும் இளமைத்துடிப்புள்ள ஒருவரை நாடாளுமன்றம் அனுப்புங்கள். அவர் உங்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து நிவர்த்தி செய்து தருவார்கள்.

இப்போது நாங்கள் ஒன்றுகூடியிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயக்கேணி மிகவும் பழமையானது. அது சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனை நாங்கள் புனரமைக்கவிருக்கின்றோம். நீங்கள் விட்ட கண்ணீரைத் துடைத்து உங்களுக்குத் தேவையானவற்றை நேரிலே கண்டறிவதற்காகவே நாங்கள் நேரில் வந்துள்ளோம். நாமெல்லோரும் ஒரே மக்கள் என்ற உணர்வுடன் வாழவேண்டும். வடக்குத் தெற்கு மக்கள் ஒன்றிணைய வேண்டும். நீங்கள் செய்கை பண்ணிய பொருள்களை இலகுவாகத் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காகவே இந்த வீதிகளைச் செப்பனிட முன்வந்துள்ளோம்.

நீங்கள் உரியவர்களிடம் உங்கள் தேவைகளைச் சொல்லி நிறைவேற்றி வைப்பதற்கு முன்வரவேண்டும் என்று கூறி முடித்தார் அமைச்சர் பசில் ராஜபக்ஷ. (க-500)

# வீடுகளைத் திருத்த நிதியுதவிகள்

முல்லைத்தீவு,நவ.20

மக்கள் மீள்குடியேறிய தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை ஆகிய பகுதிகளிலுள்ள பகுதிச்சேத வீடுகளைத் திருத்துவதற்கான நிதியை வழங்க வேண்டுமென இப்பகுதிகளிலுள்ள மக்கள் கேட்டுள்ளனர்.

தமது வீடுகள் கூரைகள் இல்லாமலும், சுவர்கள் உடைந்தும் காணப்படுவதால் அவற்றில் தம்மால் வசிக்க முடியவில்லையெனவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே இந்த வீடுகளைத் திருத்தியமைப்பதற்கு நிதியை வழங்குவது அவசியமானது. (க-500)

வன்னி வலம்

# தபால் கந்தோரைத் தேடி வெகுதூரம் அலையும் மக்கள்

முல்லைத்தீவு,நவ.20

ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் தபாற்கந்தோர்களைத்தேடி ஐந்து கிலோ மீற்றர் தூரத்திற்கு மேல் அலைந்து திரிவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்திலே தபாற் கந்தோர் இல்லாத காரணத்தால் கற்சிலைமடு, பேராறு 3 ஆம் பிரிவு, பண்டாரவன்னி, வித்தியாபுரம், கணேசபுரம், மன்னாகண்டல், கூழாமுறிப்பு, புளியன்குளம், கருவேலன் கண்டல், கெருடமடு, வசந்தபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தபால் கந்தோர் தேவைகளுக்கென 5 கிலோ மீற்றர் தூரத்திற்கு மேல் சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

மேலும் இந்தப் பகுதிகளில் சீரான பஸ் சேவைகளும் இல்லை. இதனால் வயது முதிர்ந்தவர்களும், இயலாத நிலையில் உள்ளவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இந்தப் பகுதிகளிலே ஒரு தபால் பெட்டி கூட அமைக்கப்படாததால் ஒரு தபாலைச் சேர்ப்பதற்குக் கூட இவர்கள் மேலே குறிப்பிட்ட தூரத்திற்கு அலைய வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆகவே இந்தக் கிராமங்களுக்கு மத்தியில் ஏற்றதொரு இடத்தில் உப தபால் நிலையமொன்றை அமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொள்கின்றார்கள். அத்துடன் தற்காலிக ஏற்பாடாக பொது இடமொன்றில் தபால்பெட்டியொன்றைப் பொருத்துவதற்கு ஆவன செய்யுமாறும் இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-500)

## ஆக்கமே ஊக்கம்....



திறந்து வைப்பு: கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சியை பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார், கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் ஆகியோர் திறந்து வைக்கின்றனர். (405)

# பாவனைக்கு உதவாத பஸ் வண்டிகளால் சிரமங்களை எதிர்கொள்ளும் பயணிகள்

பூநகரி,நவ.20

பூநகரிப் பகுதியில் பயணிகளை ஏற்றியிறக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதால் பிரயாணிகள் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பஸ்வண்டிகளின் ஆசனங்கள் சேதமடைந்தும் இயந்திரங்கள் பழுதடைந்த நிலையிலும் காணப்படுகின்றன. அத்துடன் உடல் பகுதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. இது தொடர்பாகப் பலரிடம் முறைப்பாடு செய்துள்ளபோதிலும் பயன் எதுவும் கிட்டவில்லை.

தினமும் இந்த வண்டிகளில் பயணம் செய்யும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள் எனப் பலரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

உரியவர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதே இந்தப் பிரதேச மக்களின் வேண்டுகோளாகும். (க-406)

# சூரிய மின்கலப் பாவனை

முல்லைத்தீவு,நவ.20

முல்லை மாவட்டத்தில் சூரிய மின்கலப்பாவனை உச்சப் பயன்பாட்டினைக் கொண்டுள்ளது. இந்தப்பகுதி மக்கள் எவ்வித செலவுகளுமின்றி சுமார் கால் ஏக்கர் நிலத்தில் வீட்டுத் தோட்டத்தினை உருவாக்கி சூரியமின்கலமூலம் நீரைப்பாய்ச்சி அதன் மூலம் மரக்கறிகளை வீட்டுத்தேவைக்குப் பயன்படுத்துவதோடு விற்பனைக்கும் கொண்டு செல்கின்றனர்.

அதுமட்டுமல்ல தென்னை, பலா, வாழை போன்ற வான்பயிர்களை நட்டு அதன் மூலம் நல்ல வருவாயை ஏற்படுத்தலாம். ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அனேகமானோர் சூரிய மின்கலத்தின் மூலம் அன்றாடச் செலவின் ஒரு பகுதியினை நிறைவேற்றி வருகின்றனர். குறைந்த செலவுடன் நிறைந்த பயனை அடைய இதனை வழங்கிய நிறுவனத்துக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். மேலும் இதனை மக்களுக்கு வழங்க நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்பதே இந்த மக்களின் வேண்டுகோள். (க-500)

# ஒரே வீதியும் சேதமடைந்ததால் கற்சிலைமடு மக்கள் அவதியில்

முல்லைத்தீவு,நவ.20

கற்சிலைமடு 3 ஆம் பிரிவில் வசிக்கும் மக்களுக் கான ஒரேபாதையான முத்து ஐயன் கட்டு 2 ஆம் பிரிவு செல்லும் வீதியிலிருந்து பேராற்றைச் சென்றடையும் வீதி கவனிப்பாரற்ற நிலையில் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது.

கற்சிலைமடு 3 ஆம் பிரிவில் வசிக்கும் மக்கள் இதனூடாகவே மயானம், கடைகள், வைத்தியசாலை, பாடசாலை ஆகியவற்றிற்குப் பயணத்தை மேற்கொள்கின்றனர். மழைக்காலங்களில் இப்பாதையைக் குறுக்கிட்டு சிறிய ஆறுகள் பெருக்கெடுத்தோடுவது வழக்கம். அந்த வேளைகளில் மக்களின் போக்குவரத்து துண்டிக்கப்படுவதால் அவர்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் இரவு வேளைகளில் இந்தப் பாதையூடாகப் பயணிப்பது அச்சத்தைக் கொடுப்பதாக உள்ளது.

இதைப்போன்றே பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களும் சிரமங்களைச் சந்திக்கின்றனர்.

மீள்குடியேறிய நிலையில் துன்பத்துடன் வாழ்ந்து வரும் இப்பகுதி மக்களுக்கு இவ்விடயத்தில் உதவ உரிய அதிகாரிகள் முன்வர வேண்[illegible] மக்கள் கேட்டுள்ளன[illegible]

# கண்டாவளை பிரதேச செயலகத்தின் இடமாற்றத்தை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

கண்டாவளை,நவ.20

கண்டாவளை, பிரதேச செயலகத்தினை இடமாற்றுவதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர் என அதனை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கண்டாவளை பகுதி மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டாவளை மகாவித்தியாலயத்தில் அப்பகுதி மக்களின் பிரதிநிதிகளை சந்தித்து விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. கலந்துரையாடல் மேற்கொண்டார். இந்தக் கலந்துரையாடலில் அப்பகுதி கிராம சேவகர் நந்தகுமாரும் கலந்து கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கண்டாவளைப் பிரதேச செயலகத்தை புளியம்பொக்கணைக்கு மாற்றுவதற்கு சிலர் முயன்று வருகின்றனர்.இங்கு நடைபெற்ற அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இதற்கு நாம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தோம். 1982 ஆம் ஆண்டிலிருந்து கண்டாவளைப் பிரதேச செயலகம் இதே இடத்திலேயே இயங்கி வருகின்றது. எனவே இதை மாற்றுவதற்கு இரகசியமாக முயற்சி எடுக்கப்படுகின்றது. பிரதேச செயலகத்துக்கான தங்குமிடம் தற்போது புளியம்பொக்கணையில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது மறைமுகமாக பிரதேச செயலகத்தை இடம்மாற்றுவதற்கான முயற்சியாகும் என்று தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக விஜயகலா எம்.பி. இந்தச் சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



நிதானம் பொறுமையோடு செயற்பட வேண்டும். கலைஞர்கள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். அயலாருக்குப் பண உதவி செய்யலாம். தவறு என தெரிந்தும், உங்களின் ஆதாயத்திற்காகச் சில விடயங்களைச் செய்வீர்கள். உடன் பணிபுரிவோர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். பணவரவு உண்டு

**இடபம்:**




எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். முக்கியமான நேரத்தை வீணடித்து விட்டு பின்னர் அவசரமாக செயற்படுவீர்கள். வெளியூர் பயணங்களின் போது பொருள்களை கவனமாக பார்த்து கொள்வது நல்லது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களால் எரிச்சல், கோபம் அடையலாம். வீட்டுச் செலவுகள் கூடும்.

**மிதுனம்:**



உடன் பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். பழைய நண்பர்கள் சிலரை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். நீங்கள் குறைவாக மதிப்பட்ட ஒருவர் உங்களுக்கு பெரிய அளவிலான உதவிகளை செய்யலாம். கடந்த கால சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். சிவாலய வழிபாடு சிறப்பு தரும்.

**கடகம்:**



மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். மனைவி வழி உறவுகளால் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். அரைகுறையாக நின்ற வேலை ஒன்றை இன்று சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உங்களின் செல்வாக்கைக் கண்டு மற்றவர்கள் வியப்படைவர். மாணவர்கள் ஆசிரியர்களின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். ஆற்றல் அதிகரிக்கும்.

**சிங்கம்:**



திடீர் பணப்பற்றாக்குறையைச் சந்திக்கலாம். நெருங்கிய ஒருவர் தொடர்பான வேலைகளுக்காக அலைய நேரிடலாம். குறுக்கு வழி சிந்தனைகளை அகற்றி நேர் வழியில் செயற்பட முற்படுவீர்கள். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள்.

**கன்னி:**



ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் மனக்கசப்பு தரும் நிகழ்ச்சி நடக்கலாம். வியாபாரிகள் வழக்கத்திற்கு மாறான கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ள லாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம். எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம்.

**துலாம்:**



புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் சேரும் நாள். உங்கள் நலனில் அக்கறை கொண்ட சிலரைச் சந்திப்பீர்கள். சொந்தமாக தொழில் புரிவோருக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். சிறியளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் பெரியளவில் ஆதாயம் கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் உறவினர்கள் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:**



சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்வீர்கள். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். சிலர் மூலம் சிறு பண வரவுகளைப் பெற வாய்ப்பு உண்டு. வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். பிள்ளைகளின் மனதை புரிந்து கொண்டு நடப்பீர்கள். உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு:**



ஊக்கம், உற்சாகத்தை குறைக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களின் செயற்பாடுகளை பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். பெற்றோர்கள் வழியில் உருவான சிக்கல்கள் தீர்விற்கு வரும். நாளை சந்திக்கலாம் என நினைத்த நண்பர் ஒருவரை இன்றே சந்திக்கலாம். சில பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியாமல் தவிக்க நேரிடலாம்.

**மகரம்:**



தாய் வழி உறவுகளால் சில தொல்லைகளைச் சந்திக்கலாம். புதிய மனிதர்கள் சிலர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று, கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம். அடுக்கடுக்காக வேலைகள் குவியலாம். கடன் மிகுதிகள் விலகும். ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் செலவாகும்.

**கும்பம்:**



நண்பர்கள் அல்லது சக ஊழியர்கள் சிலருக்கு கடன் கொடுக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் உள்ளம் அறிந்து நடந்து கொள்வீர்கள். பெரிய மனிதர்களின் உதவியை நாடலாம். கேளிக்கை, கொண்டாட்டங்களில் நாட்டம் செல்லும். சிலர் அவர்களின் வேலையை உங்கள் தலையில் சுமத்தி விட்டுத் தப்பித்துக் கொள்ளலாம்



**மீனம்:** கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள். கணவன், மனைவி இடையே அன்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களின் விமர்சனங்களை பற்றி கவலைப்படாமல் தைரியமாக செயற்படுவீர்கள். பணவரவுகள் இருந்தாலும் அதற்கேற்ற செலவுகள் உண்டு. திட்டமிட்ட வேலைகளை முடிக்க முடியாமல் தடை ஏற்படலாம்.

# உணர்வுகள் பத்து



ஒருவர் ''சேர் அன்று உங்களிடம் அதிகமாக உணர்ச்சி வசப்பட்டுப் பேசிவிட்டேன். அதை பெரிய விடயமாக எடுக்காதேங்கோ '' என்று பெரியவர் ஒருவரிடம் கூறினார்.

''நீங்கள் உணர்ச்சிவசப்படுவதே மிக அபூர்வமானது! அதுக்காக நான் சந்தோசப்படுகிறேன்'' என்று கூறினேன்.

''என்ன அப்படிச் சொல்கிறீர்கள்'' என்று அவர் கேட்டார்.

உங்களை உணர்ச்சியில்லாத மரக்கட்டை என்று தானே நமது நண்பர்கள் சொல்வது வழக்கம் என்று கூறினேன்.

''அட போங்க சேர்'' என்று கூறி மறுபடியும் உணர்ச்சிவசப்பட ஆரம்பித்தார் அவர்.

மனிதனுக்கு ஏற்படும் உணர்வுகளில் சில நன்மைகளைச் செய்யும் சில உணர்வுகள் தொந்தரவு கொடுக்கும். எனவே இவை இரண்டு வகைப்படும்.

உதாரணத்துக்கு 'கோபம்' என்ற உணர்வு நோயை உண்டாக்கும். அதேவேளை 'சிரிப்பு' நோயைக் குணப்படுத்தும்.

உணர்வுகள் இல்லாமல் மனிதன் சந்தோஷமாக வாழ முடியாது. எமது வாழ்க்கையை ஆட்சி செய்வதே இந்த உணர்வுகள் தான். எனவே நாம் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கின்றோமா- இல்லையா என்பதை முடிவு செய்வது உணர்வுகள்தான்.

மனிதனில் அடிப்படையான 10 உணர்ச்சிகள் உண்டு. அவற்றில் 5 நல்ல விடயங்களையும் 5 தீயவிடயங்களையும் உருவாக்குகின்றன. அவற்றில் தீய விடயங்களை உருவாக்கும் உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது? நல்ல விதமான உணர்வுகளை எப்படி வலுப்படுத்துவது? என்பது பற்றி பார்க்கலாம்.

மோசமான அதாவது தீயவகையான உணர்ச்சிகளாக கோபம்-குற்ற உணர்வு- பயம்- சலிப்பு- துக்கம் என்பவையாகும். நல்ல விதமான உணர்வுகளாக சிரிப்பு- அன்பு- ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பு- நம்பிக்கை- தன்னம்பிக்கை என்பவையாகும்.

இவற்றில் கோபம் இதயநோயை உண்டாக்கும். அதாவது கோபம் வந்தால் மனதையும் உடம்பையும் பாதிக்கச் செய்யும். எனவே கோபம் வந்தால் முதலில் அது நியாயமான கோபம்தானா? என்பதை நிதானமாக யோசித்து முடிவு செய்ய வேண்டும்.

குற்ற உணர்வை எடுத்துக் கொண்டால் அதாவது ஒரு தப்புச் செய்தால் அதை நினைத்துக் கவலைப்படுகின்றோம். எனவே, இதற்கான வழி தன்னம்பிக்கையை மனதில் வளர்த்துத் தவறு செய்யாமல் இருக்கப் பழகிக்க கொள்ளவேண்டும்.

மூன்றாவது விடயமான பயம் எவற்றிற்கெல்லாம் பயப்பட வேண்டும் என்றில்லாது எல்லா விடயத்துக்கும் பயம் கொள்கின்றோம். எனவே பயத்துக்கான மூலகாரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அதன் பின்பு அதிலிருந்து விலகிக் கொள்ளவேண்டும்.

சலிப்பு என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் சில பேருக்கு நேரம் கிடைப்பதே அரிதாக இருக்கும். ஒரு சிலருக்கு நேரம் இருக்கும், ஆனால் அந் நேரத்தில் என்ன வேலை செய்வது என்று தெரியாது திண்டாடுவார்கள்.

எனவே, இதனால் இதயநோய், செரிமானக் கோளாறு, தோல் வியாதிகள், மனத்தளர்ச்சி என்பன ஏற்படும். இதனால் நமக்கான ஒரு பொழுதுபோக்கு அல்லது வேலையை நாமேதான் உண்டாக்க வேண்டும்.

துன்பம் என்று உணர்ச்சியை எடுத்துக் கொண்டால் மனிதன் கவலைப்படுவதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. துக்கத்தைக் கண்டு பயந்தால் அது அதிகமாகுமே தவிர குறையாது. எனவே, துயரத்தை மனதுக்குள் தேக்கி வைக்காது அழுது தீர்க்கவேண்டும்.

இவ்வாறு கூறப்பட்ட விடயங்கள் ஐந்தும் மனிதனுக்குத் தீயவற்றை ஏற்படுத்துபவை நன்மையான விடயங்களை உண்டாக்கும் உணர்ச்சிகளை இவ்வாறு கூறலாம்.

சிரிப்பு- இது நுரையீரலுக்கும் இதயத்துக்கும் நல்ல பயிற்சியாக அமையும். நாம் சிரித்து முடித்ததும் மூச்சு விடுவது இலகுவாக இருக்கும். நன்றாகத் தூக்கம் வரும்.

அன்பு- இது பல நோய்களைக் குணப்படுத்தும்.

ஆக்கபூர்வமான எதிர்பார்ப்பு - இது வாழ்வில் மிகவும் முக்கியம். நம்பிக்கை- வாழ்வில் மிகவும் அவசியமானது. அதாவது நான் எங்கே உருப்படப் போகிறேன் என்று நினைப்பவர்கள் உருப்படவேமாட்டார்கள்.

தன்னம்பிக்கை- இது ஆக்கபூர்வமான உணர்வு. இதற்கு உதாரணமாக நல்ல விதமாக சிந்திக்கின்ற நோயாளிகள் விரைவில் குணமாகின்றனர். இது மருத்துவக் கண்டுபிடிப்புகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த 10 விதமான உணர்வுகள் பற்றி தெரிந்து விட்டீர்கள். அதனால் இனிமேல் நாம் உணர்ச்சி வசப்படுவதற்கு முன்னர் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்து உணர்ச்சிவசப்பட வேண்டும்.

**கோ.சுவாமிநாதன்.**

# அரைகுறையான அர்ப்பணிப்பு

நான் இறைவனுக்கு உரியவன்;எனவே என் செல்வம் சொத்து யாவுமே அவனது உடைமை என்ற தெளிவும், தீர்க்கமும் இல்லாதவர்கள் கோயிலுக்குக் கொடுப்பது கொடையல்ல, கொடுமை! தானமல்ல, திமிர்!. இந்த அகில உலகமும் இறைவனுக்கே உரியது என்ற உண்மையை உணராமல் இறைவனுக்கு ஏதோ தாம் படியளப்பதாக நினைக்கும் வள்ளல்கள் வழிகாட்டிய பாவிகள்....! அர்பணிப்பைப் புரிந்து கொள்ள ஒரு கதை சொல்கிறேன்.

பகவான் இராமகிருஷ்ணரைப் பார்க்க வந்த பணக்காரன் ஒருவன் ஆயிரம் பொற்காசுகளை மூடையாகக் கட்டிக் கொண்டு வந்தார். ''பகவான்... பக்தியுடன் நான் கொண்டு வந்த இந்த எளிய காணிக்கையை ஏற்றுக் கொள்வீர்களா?'' என்று காலில் விழுந்தார்.

''எளிய மலரையும் சில்லறைக் காசையும் கொண்டு வந்தாலும் அன்புடன் ஏற்பதுதான் பகவானது கடமை. அப்படியிருக்க நீ ஏன் பொற்காசுகளை... கொண்டு வந்திருக்கிறாய்.. பகவான் எப்படி மறுக்க முடியும்?'' என்று சிரித்தார் இராமகிருஷ்ணன்.

பலபேரும் தனது பரிசளிப்பை உணர வேண்டும் என்று அகம்பாவத்துடன் பையைப் பிரித்துப் பொற்காசுகளைத் தரையில் கலகல வென்று கொட்டினான் பணக்காரன். ''நீ செய் யும் தானத்தை ஏன் இவ்வளவு சத்தத்தோடு செய்கிறாய்..'' என்று காதுகளை மூடிக்கொண் டார் கிருஷ்ணர்.

''பகவானே! இவை உம்முடையவை'' என்றான் பணக்காரன்.

''இவை என்னுடையவை என்றால் இவற்றை நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் அல்லவா?'' என்றார் குருநாதர். பணக்காரன்.

''ஆம்'' [illegible] இந்த



மூடையைக் கங்கையில் வீசி விட்டு வா. வந்து என்னைப் பார் என்றார் இராமகிருஷ்ணன். பணக்காரனின் முகம் வாடிவிட்டது. தனது தானத்தைக் கொண்டாடி இராம கிருஷ்ணன் அனுபவிப்பார். தன்னைச் சிலாகிப்பார் என்ற எண்ணத்தில் இடி விழுந்தது. எனினும் வேறு வழியின்றி உத்தரவை மீளமுடியாமல் சோகமாகப் புறப்பட்டார்.

சிலமணி நேரம் ஆனது. பணக்காரன் திரும்பவே இல்லை. அவர் என்ன செய்கிறார் என்று பார்க்க சீடர்களை அனுப்பினார் குருதேவர். அவர் கங்கைக் கரையில் உட்கார்ந்து பெருமூச்சு விட்டபடி ஒவ்வொரு தங்க நாணயமாக எடுத்து திருப்பித் திருப்பிப் பார்த்தபடி, படிக் கல்லில் தட்டித் தட்டி வெகு சோகமாக மனம் இல்லாமல் ஒவ்வொன்றாக எறிந்து கொண்டிருந்தார். தங்கக் காசுகள் மீதிருந்த பற்று அவரைப் பாடாய்படுத்தியது.

இராமகிருஷ்ணன் அவரைத் தேடி வந்தார் ''கங்கையில் வீசிவிட்டு வா என்று சொன்னதே ஒழிய ஒவ்வொரு நாணமாகச் சேர்த்துவிட்டு வா என்று நான் சொல்லவில்லையே! ஏன் இப்படிச் செய்கிறாய்? உண்மையாகவே இதை நீ என்னிடம் சமர்ப்பித்திருந்தால் இந்தப் பொருளை எறியும் போது நீ பாதிக்கப்படமாட்டாய்! இன்றும் இதனை நீ உன்னுடையதாகவே கருதுகிறாய். அதனால் தான் வேதனை அடைகிறாய். அர்ப்பணிப்பு எப்பொழுதும் முழுமையானதாகவே இருக்க வேண்டும். அரைகுறையாக இருந்தால் துன்பம்தான் மிஞ்சும் - என்றார் குருநாதர்.

'' நான் என்னையே கடவுளிடம் அர்ப்பணித்து விட்டேன். ஆனாலும் எனக்கு ஏன் இவ்வளவு கஷ்டம்?'' என்று அழுதுபுலம்பும் அரைகுறைகள் இதைப் புரிந்துகொள்வார்களா?

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோடு பின்னிப்பிணைந்துவிட்ட மெய்யியல்

**உலக மெய்யியல் தினம் கடந்த 18 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது.**

**அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

மனிதனது நாளாந்த வாழ்வில் மெய்யியல் அறிவின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதற்கும், மெய்யியல் அறி ஞர்களைக் கௌரவப்படுத்தும்முகமாகவும் உலக மெய்யியல் தினமானது 2002 ஆம் ஆண்டில் இருந்து வருடம் தோறும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழக்கிழமை உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ்வருடம் உலக மெய்யியல் தினம் உலகில் 9ஆவது தடவையாக யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்பட்டது. இருந்த பொழுதிலும் ஈரானில் காணப்படுகின்ற அரசியல் உறுதியின்மைச் சூழல் மற்றும் இஸ்லாமிய சமய நம்பிக்கைகளுக்குச் சவாலாக சமகால மெய்யியல் விளங்குவதனால் அதனை மீள் திருத்தம் செய்வதற்கு அந்த நாட்டு அரசு எடுத்த முயற்சியைக் கண்டித்தல் என்பவற்றின் காரணமாக இவ்வருடம் ஈரானில் மெய்யியல் தினத்தைக் கொண்டாடுவதற்கு மெய்யியலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். உலக மக்கள் மத்தியில் மெய்யியில் பாரம்பரியத்தை ஊக்குவித்தல், புதிய சிந்தனைகளுக்கான வழிவகைகளினை ஆராய்தல், சமூகத்தில் இழையோடிக் காணப்படும் பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் ஓர் மெய்யியல் ரீதியான தீர்வினை திறனாய்வின் அடிப்படையில் முன்வைத்தல் என்பவற்றுக்காக மெய்யியல் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. உலக மெய்யியல் தினம் 2002ஆம் ஆண்டில் இருந்து யுனெஸ்கோ நிறுவனத்தினால் அதன் தலைமையகத்தில் 2004ஆம் ஆண்டுவரை அனுஷ்டிக்கப்பட்டு வந்த போதிலும் 2005ஆம் ஆண்டில் இருந்தே இதன் முக்கியத்தினை உலகம் முழுவதும் பரப்பும் நோக்குடன் உலக மெய்யியல் தினமானது பல நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படலாயிற்று. அந்த வகையில் 2005ஆம் ஆண்டு சிலி நாட்டிலும் 2006 மொறோக்கோ நாட்டிலும் 2007இல் துருக்கி நாட்டிலும் 2008இல் இத்தாலியிலும் 2009 இல் ரஷ்யாவிலும் இவ்வருடம் பிரான்ஸில் யுனெஸ்கோவின் தலைமையகத்தில் அதன் இயக்குநரான இறினா பொகோவா (Irina Bokova) தலைமையிலும் அனுஷ்டிக்கப்பட்டது.


இந்த வருட மெய்யியல் தினம் "மெய்யியலும் பண்பாட்டுப் பல்வகைமைகளுக்கிடையிலான நட்புறவினை உருவாக்குதலும்" எனும் தொனிப்பொருளில் பின்வரும் கருப்பொருள்களை உள்ளடக்கியதாக அமைந்தது.

* பல்வகைப் பண்பாடுகளுக்கு இடையில் அறிவுப்பாலத்தினைக் கட்டியெழுப்புதல்.
* பெண் மெய்யியலாளர்களும் அரசியல் சரிப்படுத்தல்களும்
* பகுத்தறிவான உரையாடல்கள்
* அறிவும் அதன் போராட்டங் களும்

- என்பனவே அவை.

இத்தினத்தில் மெய்யியல் என்றால் என்ன? மனித வாழ்வுச்சக்கரத்தில் இதன் முக்கியத்துவம் என்ன? இலங்கையில் மெய்யியல் கல்வியின் முக்கியத்துவம் எவ்வாறு உள்ளது? சமகால அரசியலில் பகுத்தறிவுடன் சிந்திக்கவேண்டிய தேவைப்பாடு என்ன? எனச் சற்றுச் சுருக்கமாக நோக்குவது பொருத்தமாக அமையும். மெய்யியல் என்ற சொற்பதத்திற்கு சரியான, துல்லியமான வரைவிலக்கணத்தை வழங்குவது இயலாத ஒரு விடயமே. ஏனெனில் மெய்யியலானது அனைத்து அறிவியல் துறைகளுக்கும் ஓர் அடிப்படை ஊற்று.

மனித வாழ்க்கையுடனும் அது பின்னிப்பிணைந்தனவா. குறிப்பாக விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம், மொழியியல், உளவியல், சமூகவியல், போன்ற பல்வேறுபட்ட அறிவியல் துறைகளுடன் நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ளது. மேற்கூறப்பட்ட துறைகள் மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்ததாகவே காணப்படுகின்றன.



உண்மையில் மெய்யியலின் தோற்றக்களம் கிரேக்கம் என்று கூறப்பட்டு வந்த பொழுதிலும் மனிதனிடத்தில் உண்மையினை அறிய வேண்டும் என்ற ஆர்வம் எப்போது தோன்றியதோ அன்றே மெய்யியல் தோற்றம் பெற்றதாகக்கொள்ளலாம்.

மெய்யியல் என்ற சொற்பதமானது ஞானத்தின் விருப்பு அல்லது அறிவின் மீதான தீவிரப்பற்று எனக் கூறப்படுகின்றது. ஒருவருடைய புதுமை நாட்டத்தினையும், நுண்ணறிவினையும் பிரயோகிப்பதற்கான விருப்பு என்பதனையும் இது குறித்து நிற்கின்றது. இருந்த பொழுதிலும் பல்வேறுபட்ட காலப் பகுதிகளில் வாழ்ந்த பல மெய்யியலாளர்கள் மெய்யியலுக்கு விளக்கம் கொடுப்பதற்கு மெய்யியலின் இலக்கினையும் அதன் பண்புகளையும் மையப்படுத்தி முறையியல் அடிப்படையில் பல்வேறுபட்ட விளக்கங்களை முன்வைத்திருந்தனர். அந்த வகையில் மெய்யியல் என்றால் என்ன என்பதறக்கு ஒரு பொதுவான வரைவிலக்கணமாக "சிந்தனையுடன் கூடிய வினாக்களை கொண்டமைந்த உலகு பற்றியும், மனித வாழ்வின் அர்த்தம் பற்றியதுமான உண்மை அறிவினை தேடும் ஓர் அறிவியல்துறை" எனக் கூறிக்கொள்ளலாம்.

**ஊழலும் லஞ்சமும் ஒழிந்திட, தமிழருக்கு சமாதானமும் ஜனநாயகமும் கிடைத்திட பொருளாதாரம் அபிவிருத்தியடைந்திட, சிறந்த தலைமைத்துவத்தினை உருவாக்கிட, சிறந்த எதிர்கால சமூகத்தினை கட்டியெழுப்பிட, இனவாதத்தினையும் மதவாதத்தினையும், பூண்டோடு அழித்திடப் பகுத்தறிவுடன் சிந்திப்போம்.**

### மெய்யியலின் முக்கியத்துவம்

மனிதனின் எல்லாச் செயற்பாடுகளிலும் மெய்யியல் செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றது. உதாரணமாக எமது வாழ்வில் நாம் பயன்படுத்தும் அர்த்தத்துடன் கூடிய மொழி என்பது மெய்யியலில் இருந்தே தோன்றுகின்றது.

சமூகத்தில் காணப்படும் ஒவ்வொரு நிறுவனங்களும் மெய்யியல் சிந்தனைகளை அடிப்படையாக கொண்டே கட்டியமைக்கப்படுகின்றன. உதாரணமாக "மெய்ப்பொருள் காண்பது அறிவு," உனை நீ அறிபோன்ற மகுட வாக்கியங்கள் இன்று பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங் களிலும் பயன்படுத்தப்படும் இலச்சினைகளில் பொறிக்கப்படுகின்றன. மெய்யியலானது உண்மையினை பொய்யிலிருந்து காப்பாற்றுவதோடு மூடநம்பிக்கைகள், முற்கற்பிதங்கள், வியாக்கியானங்கள் போன்ற மாயை இருளை அகற்றும் ஓர் ஆயுதமாகவும் விளங்குகின்றது. அதேவேளை, அறிவினையும் தெளிவினையும் பெற்றுக்கொள்வதற்கான முக்கிய கருவியாகவும் காணப்படுகின்றது. மெய்யியல் கல்வி ஒருவருடைய கூற்றினை விமர்சன ரீதியில் பகுத்து எமது வாதத்துக்கு ஆராய்வதற்கு தர்க்க ரீதியான உதாரணங்களை முன்வைப்பதற்கும் உதவுகின்றது.

மெய்யியல் அறிவினைப் பெற்றுக் கொள்ளும் ஒருவன் திறனாய்வின் அடிப்படையில், பல வினாக்களுக்கான விடைகளைப், பல கோணங்களில் அலசி ஆராய்வதன் ஊடாக ஒரு விடயம் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றுக்கொள்வதுடன் தனது புத்திசாலித்தனத்தை நிலைநாட்டுபவனாகவும் மாறுகின்றான். மெய்யியல் அறிவு இல்லாதவனின் வாழ்க்கை உயிரோட்டம் அற்ற சலிப்புத் தன்மையுடையதாகவும் அர்த்தம் இல்லாததாகவுமே காணப்படும். மேலும் மெய்யியல் அறிவானது மற்றவர்களின் சிந்தனையை விமர்சன ரீதியில் மட்டுமன்றி மற்றவர் கூற்றினை நம்புவதற்கு பதிலாக எவ்வாறு சிந்திக்க வேண்டும் என்ற கற்றல் முறையினையும் எமக்குக் காட்டுகின்றது. மெய்யியலைக் கற்பதன் மூலம் மனித இருப்பின் முக்கியத்துவத்தினை உணர முடியும் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்ற யாதார்த்தத்தையும் அது காட்டி நிறக்கின்றது. தனி மனிதனுக்கும் சமூகத்திறக்கும் இடையில் ஓர் உறவுப் பாலமாக ஐக்கியத்தையும் புரிந்து கொள்ளலையும் உருவாக்க மெய்யியல் முனைகின்றது.

### இலங்கையில் மெய்யியல் கல்வி

இலங்கை சுதந்திரம் அடைய முன்னரே சேர் பொன்.இராமநாதன், ஆனந்தக் குமாரசாமி போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை மெய்யியலுக்கு செலுத்திவந்தனர் எனினும் மெய்யியல் தனித்த ஒரு துறையாக வளர்ச்சியடையவில்லை. இலங்கையின் சுதந்திரத்துக்கு பற்பட்ட காலப் பகுதியிலேயே பல் கலைக்கழகங்களில் மெய்யியல் கல்வி யானது ஓர் தனித்துறையாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.

முதன்முதலில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே மெய்யியல் துறை தனித்துறையாக ஆரம்பிக்கப் பட்டது. இது இன்றுவரை மாணவர்களுக்கு மெய்யியல் அறிவினை வழங்கி வருகின்றது. 1970ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல மாணவர்கள் தமது பட்டப் படிப்புக்கான விசேட துறையாக மெய்யியலினை மிகவும் ஆர்வத்துடன் கற்றுவந்தனர்.

இக்காலப்பகுதியில் சிங்கள அறிஞர்களான பேராசிரியர் கே.என். ஜெயதிலக, பேராசிரியர் டேவிட் களுபகான போன்றவர்களின் பங்களிப்பு மாணவர்கள் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் மெய்யியல் பரவலடையக் காரணமாக இருந்தது. 70களின் பிற்பகுதியில் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் மேலும் விருத்தியடைய களனி, யாழ்ப்பாணம், கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களினூடாக மெய்யியல் கல்வி வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

சமகாலத்தில் பேராசிரியர் என். ஞானக்குமாரன்; பேராசிரியர் க. சிவானந்தமூர்த்தி, கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ், பேராசிரியர் டெஸ்மன் மல்லிகாராய்ச்சி, பேராசிரியர் தயா எதிரிசிங்க, இளைப்பாறிய கலாநிதி காசிநாதன், கலாநிதி இராமகிருஸ்ணன், அண்மையில் மறைந்த பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா ஆகியோர் மாணவர்கள் மத்தியில் மெய்யியல் அறிவினை விருத்தி செய்வதில் பெரும் பங்களிப்பினை வழங்கியுள்ளனர்.

எனினும் மேற்கத்தேய சமூகங்களில் மெய்யியல் கல்விக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் போன்று இலங்கையில் மாணவர்கள் மத்தியிலோ ல்லது சமூகத்தின் மத்தியிலோ உணரப்படுவதுஅதன் முக்கியத்துவம் அ குறைவே. உலக மயமாக்கலின் விளைவும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும், பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாப் பிரச்சினையின் தாக்கமும் இலங்கையில் மெய்யியல் கல்வியின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

### சமகால அரசியலில் பகுத்தறிவின் முக்கியம்.

இப்போது சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றன. வடமாகாணத்துக்கான தேர்தல், உள்ளூராட்சி தேர்தல்கள் போன்றன எம்மை நாடி வரும் காலப்பகுதியில் நாம் வாழ்ந்து வருகின்றோம். மக்கள் அரசியல் தலைவர்களின் இருப்பிடங்களை நோக்கிச் சென்ற காலம் மாறி அரசியல்வாதிகள் மக்களை நாடுகின்ற காலம் வரப் போகின்றது. இதுவரை காலமும் புரையோடிப்போயிருந்த இனமுரண்பாட்டுக்கு முடிவுகட்டவேண்டிய தருணமிது. இத்தகைய பொன்னான சந்தர்ப்பத்தினை நாம் எமது பகுத்தறிவுச் சிந்தனை கொண்டு அணுக வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

பொய்யையும் புழுகையும் மூலதனமாகக் கொண்டு வெறும் பசப்பு வார்த்தைகளினை மக்கள் முன் வைத்து மீண்டும் மக்களினை ஏமாற்றச் சிலர் முன் வருவார்கள். வெறும் வார்த்தைகளினை நம்பாது எது சரி எது பிழை ? ஏற்கக் கூடியது எது? நிராகரிக்க வேண்டியது எது ? எனத் தர்க்க ரீதியாக முடிவெடுக்கும் சக்தி மனிதனுக்கே உண்டு. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளை எழுப்பி, சிந்தித்து, சீர்தூக்கிப்பார்த்து உண்மையை உணர்வோம்.

**ந.சிவகரன்**

*விரிவுரையாளர், மெய்யியல் துறை*

*யாழ் பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.கே.எஸ். வீதி அகலிப்பு: திட்டமிட்ட பண்பாட்டு வரலாற்று







திட்டமிடப்படாத எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாடுகளும் ஆக்கச் செயற்பாடாக அமையாது. பெரும்பாலும் அழிப்புச் செயற்பாடாகவே அமைந்து விடுகிறதென திட்டமிடல் - அபிவிருத்தியில் துறைபோன வல்லுநர்கள் பலரும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அனுபவ நிலைப்பாடு தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் வீதி அகலிப்புச் செயற்பாட்டுக்கு நன்கு பொருந்தும். ஒருவகையில் இலங்கையில் வீதி அகலிப்பின் பொருட்டாக பிரயோகிக்கப்படும் அனைத்துச் சட்ட முறைகளையும் ஏறத்தாழ துஷ்பிரயோகம் செய்து அல்லது மிகவும் செய்கின்றன.

யாழ்ப்பாண நகரத்தை அண்டிய கே.கே.எஸ்.வீதிப் பிராந்தியம், யாழ்ப்பாணத் தமிழர்களின் பண்டைய பண்பாட்டு மரபுரிமை இடம். ஒரு கோயில் நகர அமைப்பையுடைய இந்தச் சுற்றாடலிலேயே இன்றைய யாழ்ப்பாணத்தின் முன்னோடி வரலாற்று பண்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன. அவற்றின் தடயங்களாக இப்பிராந்தியத்தின் பல்வேறு திசைகளிலும் அந்தப் பெருமை மிகுந்த காலத்தின் தடயங்கள் காணப்படுகின்றன. கே.கே.எஸ். வீதியில் மட்டும் யாழ்ப்பாண வரலாற்றின் பெருமைமிக்க சின்னங்கள் தொடர்ந்து அடுக்கப்பட்டுள்ளன. 250 யாழ்ப்பாணத்து முன்னோடி பத்திரிகையான இந்து சாதனத்தின் பழைய அச்சகமும் அலுவலகமும் இருந்த கட்டடம், யாழ்ப்பாண கல்வியெழுச்சியின் இன்னொரு முளையான மிஷனரிக் கல்வி இயக்கத்தின் முன்னோடியான கில்னர் மண்டபம் என இவற்றையெல்லாம் முழுதாக அல்லது பகுதியாக இடித்தே நடந்தேற இருக்கின்ற இந்த நடவடிக்கை ஒரு திட்டமிட்ட பண்பாட்டு வரலாற்று சான்றுகளை துடைத்தெடுக்கும் ஒரு நடவடிக்கையே என சந்தேகிக்க வேண்டியிருப்பது தவிர்க்க முடியாதது. புலிகள் கோட்டையை அழித்தார்கள் - எமது பண்டைய சின்னத்தை அழிக்கலாமா என முழுங்குபவர்களிடம் இதே

## நமது பெருமை மிகுந்த மரபுரிமைகள்

கெட்டிக்காரத்தனமாக தந்துரோபாயங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவதில் உள்ளூர் அதிகாரிகள் மிகவும் வல்லமையோடு தொழிற்படுகிறார்கள். சுற்றுச் சூழல் தொடர்பான சட்டங்கள், அரும்பொருள் மரபுரிமை தொடர்பான சட்டங்கள், வீதி அகலிப்பால் பாதிக்கப்படுபவருக்கு நஷ்ட ஈடுதரும் சட்ட நடைமுறைகள் என இலங்கையில் வீதி அகலிப்போடு சம்பந்தப்பட்ட அனைத்துச் சட்டங்களுக்கும் மேலாக வீதி அழிப்புக்கான வாகனங்கள் விரைந்து பயணஞ் வருடங்களுக்கு முந்திய வண்ணார் பண்ணைச் சிவன் கோயில், கதிரேசன் கோயில் தொடக்கம் சாந்தையர்மடம் பிள்ளையார், பண்றிக்கோட்டுப் பிள்ளையார் முதலான பல ஆலயங்கள் இவற்றிற்கப்பால் கல்வியிற் சிறந்த யாழ்ப்பாணம் என மேடை தோறும் முழங்குகிறீர்களே அதனை உருவாக்கியதில் பங்கேற்ற இரண்டு நூறாண்டுகளைக் கடந்து நிமிர்ந்த நாவலர் பாடசாலையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதல் கட்டடங்கள், யாழ்ப்பாணத்து சித்தர் பாரம்பரியத்தின் முதுசொம்மான யோகர்சுவாமியின் சிவதொண்டர் நிலையம், கேள்வியை கேட்க இப்பத்தி விரும்புகிறது. அது மாபெரும் தவறே அந்தத் தவறு பற்றியெல்லாம் பேசத்துணிந்த உங்களுக்கு ஏன் இந்த பண்டைய வரலாற்று சின்ன அழிப்பு கண்ணுக்குப் படவேயில்லை.

வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் முன்பாகவுள்ள 'பந்தல் மண்டபம்' இந்தக் கோயில் கட்டடத்தின் பொது அம்சமே. எனினும் இங்கு அது யாழ்ப்பாணத்திற்கேயான ஒரு புதிய பாணியை மேற்கத்தைய கட்டடப் பண்புகளை உள்ளெடுத்து உருவாக்கி இருக்கிறது. இதைக்

கிள்ளி எறி
அபிவிருத்
வைக்கப்
இலங்கை
வருடத்தி
எந்தவொ
பாதுகாக்க
ஒரு அடிட்
போது, அ
செய்து இ
கோயில்
சிதைக்க
மாற்று
அல்லது
செய்வோ
நமக்குக்
அதிகார
அழிக்கப்
மூதாதை
வரலாற்ற
பா
மு
உ
எ
இ
ய
பிரதிநிதி
அவர்கே
உ பின்
மறுக்கிற
வரலா
மறப்பதி
இப்பத்தி
வரலாற்றி
முன்னோ
விளைவு
பிரியாவி
பெரும்ப
வாய்புண்
வேதனை
ஒரு ச
குடிமகன
விட வே

# கல்யாணம் தான் கட்டிக்கிட்டு...


அன்று மதியம் 12 மணியிருக்கும் யாழ்.பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். யாழ்.பஸ் நிலையம் முன்னர் மாதிரியல்ல இப்போது. மிகவும் மாறிவிட்டது. கலகலப்பு சலசலப்பு! ஒரே அமர்க்களம்தான்! அதுபற்றி உங்களுக்குச் சொல்லவே தேவையில்லை. சரி அது இல்லாவிட்டால் எதைச்சொல்ல வருகிறீர்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்

பஸ் நிலையத்தில் ஓரமாய் நிற்கிறேன். திடீரென அங்குள்ள ஒரு மூலையில் சனக்கூட்டம் குவிந்து நின்றது.... சனங்களும் பரபரப்பாக - படபடப்புடன்... - அந்த இடத்தை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர்.

''பழையபடி ஆள்களைச் சுட வெளிக்கிட்டாங்களா? ஆரையும் சுட்டுப்போட்டுக்கிடக்குதா? அதுதான் சனம் ஓடிப்போய்ப் பார்க்குதோ?' என்று எனக்குள்ளே ஒருவித அச்சம் இழையோடி மனதை இறுக்கியது.

ஏனென்றால் நீண்ட காலத்துக்குப் பிறகு அண்மையில்தான் அளவெட்டியில் ஓர் இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு விழுந்திருந்தது. அதனால்தான் இந்தப் பயம் எனக்குள் உருவானது.

இருப்பினும் மனதைத்திடப்படுத்திக்கொண்டு சனங்கள் குவிந்து நின்றிருந்த அந்தப் பகுதிக்குள் ஒருவாறு நுழைந்துவிட்டேன்.




நுழைந்த பின்னர் தான் ''அடக்கடவுளே! இந்தக் கண்றாவியைப் பார்க்கவா இவ்வளவு சனமும் முண்டியடித்தது?'' என்று எனக்குள்ளேயே கோபப்பட்டேன்.

அந்தக் கண்றாவி என்ன என்று கேட்க ஆவலாய் இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது -

'ஒரு 28 வயதுடைய பெண்ணொருவர் கையில் ஒரு சூட்கேஸையும் வைத்துக்கொண்டு நிற்கிறார்.

அவருக்குப் பக்கத்தில் நடுத்தர வயது ஆணொருவர் அழுது புலம்புகிறார். காலில் விழாத குறையாக ''வீட்டை வா என்னை விட்டுப் போகாதே'' என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆனால் அந்தப் பெண் ''நான் போவதாக முடிவெடுத்து விட்டேன்...'' என்று அடம்பிடித்துக்கொண்டிருந்தாள். இந்தக் காட்சியைத் தான் எல்லோரும் கண்ணுக்கு விருந்தாகப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கிறார்கள். ''புதினம்'' என்று சொன்னால் அது எதுவாயினும் பார்க்கப் பின் நிற்க மாட்டார்கள் யாழ்ப்பாணத்த வர்கள், என்று எனக்குள்ளே விமர்சனத்தை விரித்துக்கொண்டேன். அதில் நின்ற ஒரு பெரியவர் அங்கு மன்றாடிக்கொண்டிருந்த வரைப் பார்த்து... ''தம்பி என்ன பிரச்சினை'' என்று கேட்டார் ''ஐயா இவள் என்ர மனிசி. எங்களுக்கு இரண்டு பிள்ளையள் இருக்கிது... என்னைவிட்டுட்டு வேற ஒருத்தனோட ஓடுறதுக்காக வந்து நிற்கிறாள்... என்னைப் பிடிக்கேலயாம்''... என்று கூறி விம்மி விம்மி அழத் தொடங்கினார்...

அவர் சொன்னது உண்மையா? என்று அந்தப் பெண்ணிடம் கேட்டபோது அவளும் 'உண்மைதான்' என்று உறுதிப்படுத்தினாள். இதைக்கேட்டதும் அதில் நின்றவர்கள் திகைத்துப்போய் விலகினார்கள்.

பார்த்தீர்களா? கடந்த வாரம் யாழ்.பஸ் நிலைய்த்தில் நடந்த இந்தச் சம்பவம் நிஜமானது... நிழலானதல்ல... இவைகள் பார்த்து ரசிப்பதற்கல்ல... சிந்திப்பதற்கு... எங்கள் கலாசாரங்களுக்கு ஆப்பு வைக்கும் இத்தகைய சம்பவங்களைப் பார்த்துவிட்டு அவற்றைப் புதினமாக நினைத்துவிடக்கூடாது. தடுக்க வழிதேடவேண்டும். குடாநாட்டில் விவகாரத்துக்கோருவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக.. சமூக ஆய்வாளர்கள் கருத்தும் - கவலை - வெளியிட்டுள்ளனர். இவ்வாறு கருத்தும் - கவலையும் வெளியிட்டால் மட்டும் போதுமா? இத்தகைய விடயங்களைத் தடுக்க செயலும் - உரிய நடவடிக்கையும் - தேவை.. சிந்திப் பார்களா... சமூக ஆர்வலர்கள்?

கவிநேசன்




# உலகத்தி

(சென்றவ
'பிரபஞ்சத்தின்
மனிதனின் ஆக்கத்திற்கா
அவனது அழிவுக்காகவே
யில் ஐரோப்பிய விஞ்ஞானி
கண்டறிவதற்காக நிலத்திற்
உங்களுக்கு நினைவிருக்கல
கள் முன்னெக்கப்படு கின்ற
தோற்று விக்குமென சில வி
லாவது தீவிரமான ஆய்வு 20
ஒரு உதைபந்தின் அளவிற்

எமது பூமி வடக்கிலிருந்
அறிந்திருக்கின்றோம். ஆன
இது குறித்து விஞ்ஞானிகள்
பூமியின் காந்த விசைக
வருடங்களுக்கொரு முறை
மாற்றம் நிகழ்ந்து வருகின்றது
இது முன்னெப்போதும் இல்
போது காந்தப்புலம் குழப்ப
இவ்வாறான காந்தப்புலத்தி
கணத்திற்குக்கணம் உயிரி
எல்லாம் அழிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# று தடய அழிப்பு?



கிள்ளி எறிவது போலவே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கல் வைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் சட்டங்களோ நூறு வருடத்திற்கு மேற்பட்ட எந்தவொரு கட்டடமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரு அடிப்படையை கொண்டுள்ள போது, அதையும் துஷ்பிரையோகம் செய்து இலங்கையின் ஒரே யொரு கோயில் நகர அமைப்பைச் சிதைக்க முற்படுவது ஏன்?'


மாற்று வழிகளே இல்லையா? அல்லது நாம் நினைத்ததையே செய்வோம்; எது அழிந்தாலும் நமக்குக் கவலையில்லை என்ற அதிகார மமதையா? நீங்கள் அழிக்கப்போவது உங்கள் மூதாதையரின் - பரம்பரையின் வரலாற்றை உங்கள் நீண்டநெடிய பாரம்பரியத்தின் முடிமணிகளை என உங்களுக்குத் தெரியதா என்ன? ஏன் இவற்றையெல்லாம் யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் அவர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ கவனிக்க மறுக்கிறார்கள்.

## கள்



வரலாறு எதனையும் மறப்பதில்லை. ஒருவேளை இப்பத்தி இந்த நெடிய பண்பாட்டு வரலாற்றின் தடயங்களுக்கு எமது முன்னோர்களின் பெரும்பணியின் விளைவுகளான சின்னங்களுக்கான பிரியாவிடைக் குறிப்பாகவும் பெரும்பாலும் அமைய வாய்புண்டு என்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

ஒரு சாதாரண தமிழ்க் குடிமகனால் வேதனைப் படுவதை விட வேறென்ன செய்ய முடியும்.



நாங்கள் நம்மை நாமே அழித்து இன்புறும் விநோத மனிதர்கள் ஆயிற்றே. அதனால் இது வெல்லாம் ஒரு விடயமேயில்லை. உரையாடலும், மற்றவர்களை செவிசாய்க்க மறுக்கும் நிலவரங்களுள் ஒரு கிணற்றுள் எறியப்படும் கல்லாய் இப்பத்தியை எறிகிறேன் காலம் ஒரு பெரும் சாட்சியமாய் முன்னே நிற்கிறது.

**ம.திருக்குமரன்**



# எங்கிருந்து வருகிறது?



காலைப்பொழுது என்பது மிகவும் அநுபவித்து லயிக்க வேண்டிய தருணம். ஐந்து மணியோடு எல்லாக் கோயில்களிலும் மணியோசை ஒலிக்கத் தொடங்கிவிடும், அதோடு ஊர் முழுக்க ''பக்தி மணம்'' பரவ ஆரம்பிக்கும். ஆலய மணியோசையைத் தொடர்ந்து இறைவனை போற்றித் துதிக்கும் கான மழையும் ஒலிபெருக்கியில் சத்தமும் கேட்கத் தொடங்கிவிடும்.

பத்தியோடு வரும் கானமும் மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுத்து ஒரு ஆக்க பூர்வமான நல்ல மன நிறைவான தொடக்கத்தை காலையில் துயில் எழும் மனிதர்களுக்கு கொடுக்கும். 'முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே' எனத் தொடங்கி '..... உண்ணாமல் இருப்பேன் நான் உறங்காமல்' எனும் பாடல் காற்றில் கலந்து வரும்.

நானும் வழமை போல் அதிகாலை எழுந்து வாசல் கதவினை திறந்து கொண்டு வெளியே வந்தால் சுகமான குளிர் காற்று முகத்தில் அடிக்க அதனை அநுபவிக்க நன்றாக மூச்சினை உள்ளுக்குள் இழுக்க ''.... ஆகா.... என்ன இனிமையான அநுபவம்.... எவ்வளவு புத்துணர்ச்சி ஒரே பக்தி மணம்...'' ஆனந்தமாக சற்று நடை பயின்று பக்கத்து வெறும் வளவுக்குள் நுழைய இவ்வளவு நேரமும் அநுபவித்த பக்தி மணம் போய் வேறு வகையான மணம் மூக்கைத் துளைத்தது.

மூச்சைப் பொத்தி அடக்க வேண்டிய தருணம். அவ்வளவு நாற்றம். அந்த 'நறுமணம்' எங்கிருந்து வருகின்றது? வீட்டின் உள்ள வளர்ப்புப் பிராணிகள் நாய், பூனை இரண்டும் என் கண் முன்னே நின்றன. சாகவில்லை, கோழி வளர்ப்பும் இப்போது வீட்டில் இல்லை. அப்படியானால் மணம் எங்கிருந்து வருகின்றது? இருள் அகலத் தொடங்கியது.

நான் மேலும் அப்பால் மணம் வந்த திக்கை நோக்கி நடந்தேன். உரப்பை ஒன்று தரையில் கிடந்தது. வெளியே இறைக்கைகள் பரவிக் கோழியின் கால், தலை, குடல் பாகங்கள் சிதறிக் கிடந்தன.

மணம் இன்னும் அதிகமாகியது. யார் கொண்டு வந்து எறிந்து விட்டு போயுள்ளார்கள்? கடவுளே அந்த முகம் தெரியாத, இனம் தெரியாத நபர் யார்? எப்படி ''மனம் கூசாமல்'' இந்தக் காரியத்தைச் செய்கின்றார்கள்? இனம் தெரியாத நபர்களும் அதிகரித்து விட்டார்கள். எந்த விடயம் நடந்தாலும் அதன் பின்னர் யார் அந்த இனம் தெரியாத நபர் என்ற கேள்வியோடு நடந்த பாதிப்பான விடயமும் அதன் தாக்கமும் மெல்ல அமுங்கி விடும்.

நான் இங்கே கோபத்துடன் நிற்கின்றேன். யாரை சந்தேகிப்பது? பகலில் நடந்ததா? இரவில் நடந்ததா? யார் அந்த நபர்? எவ்வளவு கொடுமையான சம்பவம் நடந்த பிறகு, யார் அந்த நபர் என்ற கேள்வி வரும் போது நான் போயும் போயும் கோழியை கொண்டுவந்து போட்ட அந்த இனம் தெரியாத நபரை நினைத்து கோபப்படுவது கடவுளுக்கே பொறுக்காது. குடாநாட்டு மக்களும் என்னைப் பார்த்து சிரிப்பார்கள்.

என்ன செய்வது? இப்படியான சம்பவங்கள் நடக்கும் போது கோபம் வராமல் மனதை அடக்கினாலும், கொண்டு வந்த ''உரைப்பையால் எழும்'' மணத்தை அடக்க முடியாமல் உள்ளதே? சரி பக்வத் கீதை சொன்ன படி ''எது நடந்ததோ அது நன்றாக நடந்தது'' என்ற கூற்றின் படி எச்சங்களை குழி வெட்டி முடினேன்.

**தொல்புரம் சி.கதிர்காமநாதன்**

கொண்டு வந்து போட்டவர் தனது வீடு, வளவு சுத்தமாக இருக்க விரும்புகிறாரா? மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை நினைக்கின்றாரா? இப்படியான மனநிலை எப்படி வருகின்றது? இந்த செயல்களை மாற்ற முடியாதா? அல்லது இவர்களும் அடிக்கடி நடக்கும் 'செமினார்', பயிற்சிகள் போல் தங்களுக்கும் வைக்க ஆசைப்படுகின்றார்களா?

அது சரி இப்படி செயலைச் செய்யும் மனிதர்களை எப்படி கண்டுபிடிப்பது? மனது நச்சரிக்கின்றது.

எங்கேயும் கிணற்றோடு கூடிய வளவுகள் இருக்குமானால், நிலைமை அதோ கதிதான். சகல இறந்த பிராணிகளோடு உதவாத பொருள்கள் அனைத்தும் கிணற்றுக்குள் போய் விடும். இறந்த உடல்கள் நாறத் தொடங்கினால் திருவிழாக் காலங்கள் அல்லாத நாள்களிலும் ஊரில் பக்தி மணம் பரவிக்காணப்படும் அநேகமாக இக் காரியத்தை செய்யும் நபர்கள் இரவு நேரத்தைத் தான் இதற்கு சாதமாக பயன்படுத்துகின்றார்களா? பகலில் சேர்ந்த குப்பைகளை இரவில் ''ஒரே ஓட்டமாக வந்து போட்டுவிட்டு ஓடுகின்றார்களா? பகலா? இரவா? எப்போதுதான் நடக்கின்றது?'' நான் புலம்பித் தவித்தேன். என் மகனுக்கு பொறுக்க முடியவில்லை

''அப்பா பகலில் ஒரு சம்பவம் நடந்தாலும் பிறகும் இன்ம் தெரியாத நபர்களின் கைவரிசையெண்டு தானே நியூஸ் வருகுது நீங்கள் என்னடா வெண்டால்'' மகன் சிரித்தான்.

''அப்படியானால் இது நடப்பது பூமியில் பிறந்த மனிதர்களால் இல்லையா? வேற்று கிரகவாசிகள் யாராவது வருகிறார்களா? யார்?''

# கத்தின் முடிவு நெருங்குகின்றதா?



**தகனன்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

பிரபஞ்சத்தின் தோற்றம்' பற்றிய ஆய்வு

ன் ஆக்கத்திற்காக உருவாக்கப்பட்ட பொருள்கள் அழிவுக்காகவே பெருமளவில் பயன்படுகின்றன. அண்மை பிய விஞ்ஞானி களால் 'பிரபஞ்சத்தின் தோற்றம்' பற்றி ற்காக நிலத்திற்கடியில் கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டமை நினைவிருக்கலாம். பலத்த எதிர்ப்புக்களின் மத்தியிலும் இச்செயற்பாடு க்கப்படு கின்றன. இச்செயற்பாடு மிகவும் பாரதூரமான விளைவுகளைத் குமென சில விஞ்ஞானிகள் எச்சரிக் கின்றனர். இப்பரிசோதனைகளில் முத மான ஆய்வு 2012 இல் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் செயற்பாட்டின் வாயிலாக பூமி ந்தின் அளவிற்குச் சுருங் கலாம் என எதிரான தரப்பினர் எச்சரிக்கின்றனர்.

**பூமியின் காந்தவிசைக்கோடுகள்**

வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச்செல்லும் காந்தவிசைக்கோடுகளால் சூழப்பட்டிருக்கின்றது என நாம் ின்றோம். ஆனாலும் இந்த காந்தவிசைக் கோடுகள் பற்றி பிரமிக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன. விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள தகவல்களைப்பார்ப்போம்.

காந்த விசைகோடுகள் தென் வட முனைவுகளுக்கிடையில் இருக்கின்றது. இந்த முனைவுகள் 750 000 க்கொரு முறை சற்று இடம்பெயர்வது வழக்கம். எனினும் அண்மைக்காலமாக இதில் பெருமளவான ந்து வருகின்றது. அதாவது ஒவ்வொரு வருடமும் 20-30 அங்குலம் வரை இந்த முனைவுகள் அசைகின்றன. ப்போதும் இல்லாத அளவிற்கு மிகவும் பாரியளவான மாறுதலாகும். இப்படியாக முனைவுகள் நகரும் ப்புலம் குழப்பப்படுவதுடன் இறுதியில் இல்லாமல் போய்விடவும் கூடும். சில நேரங்களில் காந்தப்புலத்தின் மறைவு 100 வருடங்களுக்கு கூட இருக்கலாம். இதன் விளைவாக கழியூதாக்கதிர்கள் கணம் உயிரினங்களின் உடலின் தோலை வந்தடையும். இப்படியாகக் கதிர்கள் படும் உயிர்கள் ிந்துவிடும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்

தோற்றம் 25.11.1928

மறைவு 11.10.2010

கடந்த 11.10.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (20.11.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (106156) குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டின் நினைவஞ்சலி



பிறப்பு 23 . 05 . 1929
இறப்பு 20 . 11 . 2006

வைத்தியசிகாமணி அமரர் **பேதுரு பிலிப்ஸ்**

(மட்டுவில் ஆரோக்கிய வாச வைத்தியசாலை உரிமையாளரும் பிரபல ஆயுள்வேத வைத்தியரும் சமாதான நீதிவானும் சகஸ்டாபிஷேக விருதுபெற்றவரும்)

சித்தர்கள் வழிமுறையில் சித்திபெற வித்தகனாய்
முத்திரையே பதித்திட்ட முத்தே! வைத்தியனாய்
எங்கும் பெருமையுறும் எங்களுக்கோர் நிழலாக
தங்கமான வாழ்வு தந்த தந்தையே!

பண்புடன் எமை வளர்த்தீர்
பாசமழை எமக்குப் பொழிந்தீர்
பாரெங்கும் எமது புகழ்பரவ ஆசீர்த்தீர்
பாசமிகு உறவுகள் என்றும் போற்றிப் பணிகின்றோம்.

தற்காலிக முகவரி:
பிரசாத் வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

நிரந்தர முகவரி:
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(105925)

# ஆசிரிய ஆலோசகர் நேர்முகப் பரீட்சை

அச்சுவேலி, நவ.20

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட்பட்ட 12 கல்வி வலயங்களிலும் வெற்றிடமாக உள்ள பாட ரீதியிலான ஆசிரியர் ஆலோசகர் பதவிகளுக்குப் பொருத்தமான ஆளணியைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இன்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள மாகாணக் கல்வித் திணைக்கள முதன்மை அலுவலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்களில் பாடரீதியாகப் பெருமளவில் ஆசிரியர் ஆளணியில் வெற்றிடம் நிலவுவதால் அதற்குத் தகுதியானவர்களிடம்இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு கல்வித் தத்துவமும் நடைமுறையும், பாடரீதியான ஆற்றல் என்ற வகையில் இரண்டு பாடங்களில் போட்டிப்பரீட்சை நடைபெற்றது.

போட்டிப் பரீட்சைகளில் பெற்றுக்கொண்டபுள்ளி அடிப்படையில் நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(த-11-207)

# பொதுப்பரீட்சைகள் பிற்போடப்பட்டன

வடக்கு மாகாண பாடசாலைகளில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவிருந்த தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப்பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட நேரசூசியின் பிரகாரம் அந்தந்த தினங்களில் கொத்தணிப் பாடசாலையில் வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)


# ஈராண்டு நினைவு அஞ்சலி

*நீதிமானுக்காக வெளிச்சமும் செம்மையான இதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது (சங் 97:11)*

மண்ணில் மலர்வு 22.08.1948

விண்ணில் உதிர்வு 20.11.2008

அமரர் காசிலிங்கம் இந்திரதேவன்



(106178)

அன்பு பேபி
"ஈராண்டுகளோ இரு நாள்களாகி விட்டன.
உம்மை எண்ணும் பொழுது நினைவோ முடிவதில்லை
உம்மை எண்ணாமல் பொழுதோ விடிவதில்லை"

கோவிலாக்கண்டி,
கைதடி.

அன்பு மனைவி, சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார், மைத்துனிமார், பெறாமக்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் கந்தசாமி கமலாதேவி

மலர்வு 18.10.1943



உதிர்வு 20.10.2010

அன்பென்ற சொல்லுக்கு அர்த்தமானவளே- அம்மா!
பாசத்தின் பிறப்பிடமும் நீயே!
துன்பத்தை உனக்குள் புதைத்து வைத்து
இன்பத்தை எமக்குள்ளே விதைத்து வைத்தாய்
எம்வாழ்வில் ஒளி வீச வழிவகுத்துவிட்டு- நீ
எங்கு அம்மா சென்றுவிட்டாய்
நாள்கள் 31 என்ன... 300 வருடங்கள் சென்றாலும்
உன் முகத் தொளியே முழுநிலவாய் எமக்கிருக்கும்- அம்மா!

கடந்த (20.10.2010) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.11.2010) சனிக்கிழமை மு.ப.11.மணியளவில் சுன்னாகம் கதிரமலை சிவன்கோயில் மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். (சி/573052)

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வபாக்கியம் செல்வரத்தினம்

(இளைப்பாறிய தலைமைத் தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

யாழ்ப்பாணம், அச்சுவேலி தோப்பைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் , லண்டனை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வபாக்கியம் செல்வரத்தினம் 11.11.2010 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உசன், மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், பகீரன், ஜீவகன், பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தாயும் கதிரேசு, முருகேசுவின் சகோதரியும், சோபனா, காலஞ்சென்ற பிறேமலதா, சிந்துஜா ஆகியோரின் மாமியாரும், சௌமியா, நந்திகா, லதிக்கா, ஹரிஷனன், வசீகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற குணரத்தினம், நவரத்தினம், அரியரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 11.00 " Hendon Crematorium, Holders Hill Road, London, NW7 1NB" இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: +44 208 9048638/ +44 774 8106567.

(106189)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அகலட்டும் இருள்...



சமாதானம் மலரட்டும்: ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வுகள் நேற்று வெகு கோலாகலமாக நடைபெற்று முடிந்தன. ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்த பின்னர் தமது குடும்பத்துடன் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து உதயசூரியன் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் விசேட மேடைக்கு வருவதையும் இராஜதந்திரிகள் ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதையும் சமாதானப் புறாக்கள் பறக்கவிடப்படுவதையும் மஹிந்தவின் சகோதரர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் விழா நிகழ்வுகளை அவதானிப்பதையும் படங்களில் காணலாம்.

# மக்களின் வயிற்றில் அடித்து பதவியேற்பு விழா

## ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 20

''மக்களின் வயிற்றில் அடித்து, ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு விழா நிகழ்வுகளுக்காகப் பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்கிறது அரசு.''

- இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வரிச்சுமைக்கு எதிரான மக்கள் சக்தி' எனும் தொனிப் பொருளில் ஜே.வி.பியினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டமொன்று நேற்றுமுன்தினம் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்துக்கு அருகில் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

இதனால்பலமணிநேரம்போக்குவரத்து ஸ்தம்பித்தது.



இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகித்த பேசியபோதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் அடுத்து சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தின்போது அரசு கட்டாயம் மக்கள் மீதான வரிச்சுமை, பொருள்களின் விலை என்பவற்றைக் குறைத்து மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்து, வாழ்க்கை முன்னேற்றம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றைச் செய்யத் தவறும் மக்களைத் திரட்டி - போராட்டம் நடத்தி இந்த அரசை வெளியேற்றுவோம்.

ஜனாதிபதியின் பதவி யேற்பு நிகழ்வுகளுக்கு பல மில்லியன் ரூபாவை செலவு செய்வதன் மூலம் அரசு மக்களின் வயிற்றில் அடிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் இரண்டாவது பதவிக்கால பதவியேற்பு நிகழ்வை யொட்டிக் கடந்த திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

## கல்வியியற் கல்லூரி நேர்முகப்பரீட்சை

கொழும்பு,நவ.2

பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி யில் 2011 ஆ ஆண்டில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முக பரீட்சைகள் கல்லூரியில் நடை பெற்றுவருகின்றன என கல்லூரி பீடாதிபதி ஏ.சுந்தரலிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி மூலப் பா நெறிகளான தமிழ், ஆரம்ப கல்வி, கணிதம், சமூகக்கல்வி விஞ்ஞானம், கர்நாடகசங்கீதப் பரதநாட்டியம் ஆகியனவ றுக்கும், சிங்கள மொழிமூ பாடநெறிகளான சிங்களம், கண தம், விஞ்ஞானம், ஆரம்பக்கல் ஆகியவற்றுக்கும் மாணவ களைத் தெரிவு செய்வதற்கே இந்த நேர்முகப் பரீட்சைக இடம்பெற்று வருகின்றன.

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தால் மக்களுக்கு எவ்வித பயனுமில்லை

## அதை சர்வதேச துறைமுகமாகக் கருத முடியாது என்கிறார் மங்கள எம்.பி.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாகக் கருத முடியாது என்றும் இந்தத் துறைமுகம் பிராந்திய மக்களுக்கு எவ்வித சேவையையும் ஆற்றப் போவதில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை 'மஹிந்த ராஜபக்ஷ' துறைமுகத்தின் திறப்பு விழா தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச துறைமுகங்களுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

அம்பாந்தோட்டைதுறை முகம் சர்வதேச துறைமுகமக அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே அமெரிக்கக் கப்பல்கள் நங்கூரமிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய 'வெள்ளை யானை' அம்பாந்தோட்டைத் துறைமுகம் என்றும் அவர் சாடியுள்ளார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றியீட்டினார் என்பதை மஹிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் மனச்சாட்சிகள் நன்கு அறியும் என்றும் இதன் காரணமாகவே சரத் பொன்சேகாவிற்கு எதிராக அரசு வழக்குகளை அடுக்கிச் செல்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டங்களில் மாற்றம் ஏ படுத்தப்பட வேண்டும் என்று பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. அ சால் உத்தேசிக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்தச் சட்டங்களில் சில மா றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அது சுட்டிக் காட்டியுள்ள

குறிப்பாக விருப்பத் தெரிவு மற்றும் தொகுதிவாரி முறை ஆச ஒதுக்கீடு தொடர்பில் புதிய பரிந்துரைகளை பவ்ரல் அமைப் முன்வைத்துள்ளது. விருப்பத் தெரிவு முறையின் மூலம் 4 வீதமானவர்களும், தொகுதிவாரி முறையின் ஊடாக 60 வீதமா வர்களும் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும், வேட்பாளர்க பிரசாரப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தையும் வ யறுக்க வேண்டும் என்றும் அவ்வமைப்பு கோரியுள்ளது.

# 3 தமிழர்களை நாடு கடத்த அமெ. நீதிமன்றம் உத்தர

மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்குள் பிரவேசித்து சட் விரோதமாகக் குடியேற முற்பட்ட 3 இலங்கை தமிழர்களையு நாடு கடத்துமாறு அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட அவர்கள் நேற்று காலைநீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர். மெக்சிக்கோவின் சிபே கிரேண்ட் நதியின் ஊடாக அவர்கள் அமெரிக்கா செல்ல முற்ப டுள்ளனர்.

நீதிமன்ற விசாரணைகளின் போது, தமக்கு மெக்சிக்கோவி சில சுற்றுலா வழிகாட்டிகள் உதவி செய்ததாக தெரிவித்துள்ளன

இந்தநிலையில் அவர்களை 4 முதல் 6 வாரங்களுக்கு சிறையி வைக்க உத்தரவிட்ட நீதிமன்றம், பின்னர் அவர்களை இலங்கைக் திருப்பி அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது.

கைதானவர்கள் ரூபன் சிவகிரிநாதன், ரிச்சர்ட் பத்திநாதர் மற்று ரமேஸ் மகேஸ்வரன் ஆகியோர் என 'த பிறவுண்ஹில் ஹரால் செய்தி வெளியிட்டுள்ளது.

(த

# ஜனாதிபதிக்கு இறைஆசி வேண்டி டக்ளஸ் பூசை

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு அவருக்கு நல்லாசிகள் வேண்டி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதி அமைச்சர் வீரக்குமார திசநாயக்க ஆகியோர் நேற்று சிறப்பு பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர். கொழும்பு பம்பலப்பிட்டி நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்ரீ புதிய கதிர் வேலாயுத சுவாமி கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரக்குமார திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி ஜெகராசசிங்கம், யாழ்: மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் துறைசார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2011

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2011 ஆம் ஆண்டுக்குப் பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து ஒவ்வொரு இலக் கத்துக்குமான வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ரூபா 100/= ஐ எமது அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டு அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற பெயரில் இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் உள்ள நடை முறைக் கணக்கு இலக்கம் 7040260 இற்குச் செலுத்தி வங்கிப் பற்றுச் சீட்டை (Credit Slip) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் *''வழங்கல்கள் / சேவைகள் பதிவுசெய்தல் - 2011''* எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கவேண்டும்.

தொகுதிகள் :

தொகுதி "A" - பொருள்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - பொருள்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி "C" - சேவைகள்
தொகுதி "D" - வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல. | பொருள்கள் விவரம் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A - 03 | கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்க்கல் வகைகள், நீர்க்குழாய்ப் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | சகல விதமான அலுமினிய வீட்டுப்பாவனைப் பொருள்கள் |
| A - 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் |
| A - 08 | கட்டட, இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருள்கள், மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A - 09 | மின்சாரப் பொருள்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டார்கள், மின்சார பல்ப்புகள், மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும் |
| A - 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 11 | ஊத்தைச்சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A - 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், டயர், டியூப் மற்றும் பற்றறிகள் |
| A - 13 | தோல் உற்பத்திப் பொருள்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A - 14 | குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A - 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் |
| A - 16 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல. | பொருள்கள் விவரம் (மருத்துவம்) |
|---|---|
| B - 01 | Surgical Instruments |
| B - 02 | Laboratory Consumables |
| B - 03 | Laboratory Equipment |
| B - 04 | Surgical / Medical / Equipments |

| தொகுதி இல. | சேவைகள் விவரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப் பெட்டி, ரோனியோ இயந்திரம், கணினியும் அதனோடிணைந்த உபகரணங்களும், ஏனையவையும்) |
| C - 03 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் (Rewinding) |
| C - 04 | பதிப்பக வேலை (Printing) - சகல வித படிவங்கள், ஏனையவை |
| C - 05 | வைத்தியசாலைக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு இயந்திரத் திருத்தமும் பராமரிப்பும், கழிவுநீர்ப் பைப் அடைப்பு நீக்கி திருத்தம் செய்தல் |
| C - 06 | வைத்தியசாலை அலுவலர்களுக்கு பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C - 07 | கட்டடத் திருத்தவேலை |

| தொகுதி இல. | சேவைகள் விவரம் (வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்) |
|---|---|
| D - 01 | சகல விதமான வாகனத் திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பவற்றுக்கு குஷன் வேலை |
| D - 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்பு (Service ) |

*நிபந்தனைகள்:*

01. வழங்கல்கள் / சேவைகள் 2011 ஆம் ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02. திருப்திகரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
03. பணிப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04. பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05. மேலதிக விவரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 2261 உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி திருமதி ப.பசுபதிராஜா**
**பணிப்பாளர், போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

*மாதிரி விண்ணப்பப் படிவம்*

**வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2011**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

01. நிறுவனத்தின் பெயர் :
02. நிறுவனத்தின் முகவரி :
03. தொலைபேசி இலக்கம் :
04. தொலைநகல் இலக்கம் :
05. வியாபாரப் பதிவு இலக்கம் :
06. வியாபாரத்தின் தன்மை :

| தொகுதி இலக்கம் | வழங்கல் / சேவை விவரம் |
|---|---|
| | |

01. வற் பதிவு இலக்கம் :
02. மின் அஞ்சல் முகவரி :

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகப் பொருள்கள் / சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கின்றோம். ரூபா100/=இற்குரிய வங்கி வைப்புப் பற்றுசீட்டு இத்துடன் இணைத்துள்ளேன் / இணைத்துள்ளோம்.

விண்ணப்பதாரியின் ஒப்பம் ............................

விண்ணப்பதாரியின் பெயர் :............................
திகதி :............................

(சி/573043)

## சேவை நலன் பாராட்டு

வலிகாம கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வன்னியசிங் கம் குகவேளின் சேவைநலன் பாராட்டு விழா இன்றுசனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் க.ஸ்ரீநந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராசேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.சுந்தரசிவம், சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் பொ.தயானந்தன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி மற்றும் வலிகாம கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரன் ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ம-9)

## கரோல் நிகழ்வு

யாழ்ப்பாணக் கல்லூரியின் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது (ஐ)

## பெற்றோரை இழந்த மாணவருக்கு புலமைப்பரிசில்

இலங்கை பெண்கள் சாரணர் அமைப்பு சுனாமியால் பெற்றோரை இழந்த வடமராட்சி மாணவர்களுக்கு கல்விக்கான புலமைப்பரிசிலை வழங்க முன்வந்துள்ளது.

இதற்காக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் சுனாமி அனர்த்தத்தின்போது பெற்றோரை இழந்த மாணவர் விவரங்களை பாடசாலை ரீதியாக அதிபர்களிடம் கோரியுள்ளது.

இதேவேளை இந்த அமைப்பு அம்பன் அ.மி.த.க. பாடசாலைக்கு நூலகம் ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளது. பருத்தித்துறை கலட்டி றோமன் கத் தோலிக்க பாடசாலையிலும் நூலகம் ஒன்றை அமைத்துக்கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (201-190)

# வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூ.ச.சமாச அலுவலகம் புனரமைப்பு

பருத்தித்துறை, நவ.20

யுத்தத்தினால் சேதமடைந்த வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச அலுவலகத்தின் புனரமைப்புப் பணிகள் 'போரூட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் இடம்பெற்று வருகின்றன.

மாடிக் கட்டடத்தைக் கொண்ட இந்த அலுவலகத்தின் கீழ் தளம் 2 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படுகின்றது.

இதேவேளை, சுனாமி அனார்த்தத்தின் பின்னர் ஜேர்மன் தொழில் கூட்டுத்தாபனத்தால் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கானஅலுவலகம் தாளை யடியில் நிர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (201-190)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் Dr. **வைத்திலிங்கம் கிருபைநாதன்** R.M.P.

மலர்வு: 08.06.1941
உதிர்வு: 20.11.2009

ஆண்டு ஒன்றென்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.
உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய். (106254)

சகோதரன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் அண்ணா இராசேந்திரம் B.A. (cey)
(ஓய்வுபெற்ற பதிவாளர், மேல் நீதி மன்றம், யாழ்ப்பாணம்)

மண்ணில் *13.09.1942*
விண்ணில் *18.11.2002*

கார்த்திகைத் தீபத்தோடு கலந்துவிட்ட எம் தீபமே!
எட்டாண்டு ஆகியும் ஏங்குகின்றோம் உம் நினைவால்
அணையாய்த்தீபம் நீங்கள் என்றும் எம்மோடு கலந்திருங்கள்.

என்றென்றும் தங்கள் நினைவுடன் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

*சுமல்லிகை,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 15 . 01 . 1948



உதிர்வு 27 . 09 . 2010

**அமரர் செல்லையா சிவநேசன்**
**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், யாழ். கல்வி வலயம்)**

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடனே எமை வளர்த்து பார் புகழ நாம் வாழ
இன்பமுடன் எல்லாம் எமக்களித்து - அமைதியாக
மென்மையாகப் பேசி புன் சிரிப்போடும் புரிந்துணர்வோடும்
சிறப்பாக வாழ்ந்து சிவனோடு சேர்ந்தீர்!
நெஞ்சிருக்கும் வரைக்கும் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்!
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து அனுதாபம் தெரிவித்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று சனிக்கிழமை (20-11-2010) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

பாடசாலை வீதி,
இடைக்காடு, அச்சுவேலி. (சி/573049)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்

**யோகேஸ்வரன் எம்.பி.கோரிக்கை**

மண்டூர், நவ.20

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை உபவேந்தராக நியமிப்பதற்கு தீவிர முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ் வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன் தமிழர் ஒருவரை அப்பதவிக்கு நியமிக்குமாறு, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு பல்கலைக்கழகம் பெரும்பான்மை தமிழ் மக்கள் வாழும் பிராந்தியத்தைக் கொண்டது. தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்க ளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒரு பல்கலைக்கழகமாகவும் இது திகழ்கின்றது.

இந்நிலையில் தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரை உபவேந்தராக நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது, திட்டமிட்டு கிழக்கு பல்கலைக்கழ கத்தைப் பாதிப்படையச் செய்யும் முயற்சியாகவும் தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்காது நசுக்குவதற்கான முயற்சியாகவும் அமையும்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் எதிர் காலத்தில் கல்வி சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றையும் பல நூல்களையும் ஆய்வு செய்து ஆவணப்படுத்த வேண்டிய கடப்பாடும் உள்ளது.

இதனை நிறைவேற்றுவதற்கும் மேலும் கல்விமான்களையும் கல்விச் சமூகத்தையும் உருவாக்குவதற்கும் கிழக்கு பல்கலைக்கழகத் திற்கு தமிழ் உபவேந்தரின் பணி அத்தியா வசியமான தொன்று.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரை நியமிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கையை அரசு கைவிட்டு பொருத்தமான ஒரு தமிழரை உபவேந்தராக நியமிக்க வேண்டும். ( ளி )

# சாய்ந்தமருது இளைஞர் லண்டன் விபத்தில் மரணம்

சம்மாந்துறை, நவ.20

லண்டனில் அமைந்துள்ள தொடர்மாடிக் கட்டடமொன்றில் அண்மையில் இடம் பெற்ற தீ விபத்தில் சிக்குண்டு உயிரிழந்தவர்களில் சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞரொருவரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய அப்துல் அஸீஸ் பௌசுல் இஹ்ஸான் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டனில் மேற்படி இளைஞர் தங்கியிருந்த தொடர் மாடிக் கட்டடத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கின் காரணமாக 2ஆம் மாடியில் உறங்கிக் கொண்டிருந்த மேற்படி இளைஞர் மூச்சுத் திணறலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உயிரிழந்தவரின் சகோதரியும் குடும்பத்தாரும் குறித்த கட்டடத்தின் கீழ் மாடியில் குடியிருந்த நிலையில் தீக்காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் லண்டனில் வசிக்கும் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த பலரின் முன்னிலையில் நல்லடக்கம் செய் யப்பட்டது. (ளி)

## மக்கள் முகம்

### ஆசிரியர்களுக்கான மென்பொருள் ஆக்கத்திறன் போட்டியில் தொடர்ந்து 3வது முறையாகவும் பரிசில் பெறும் செ.கமலக்கண்ணன்



யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனும்,வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட யா/கீரிமலை நகுலேஸ்வரா ம.வி ஆசிரியரும்,யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி விரிவுரையாளருமான செ. கமலக்கண்ணன் இரண்டாம் தர கல்வி நவீன செயற் திட்டத்தின்கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி நதி உதவியுடன் கல்வி அமைச்சு நடத்திய ஆசிரியர்களுக்கான மென்பொருள் ஆக்கப் போட்டியில் க.பொ.த உயர்தர பிரிவில் வட மாகாணத்தில் 2ஆம் இடத்தை பெற்று தேசிய ரீதியாக இடம்பெறும் போட்டியில் கலந்து கொள்கின்றார்.இவர் சென்ற 2009ஆம் ஆண்டும் தேசிய மட்டப் போட்டியில் கலந்து சான்றிதழ் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## புத்தகசாலை

ஈழத்தில் சிற்றிதழ்களின் தொடர்ச்சியான வருகை அத்திபூத்தாற் போல் அரிதான நிகழ்வாகவே மாறிவிட்டது. நமது வாசிப்புத் தளத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையும், தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருந்த யுத்தமும் இலக்கியச் சஞ்சிகைகளின் மூச்சினை வெகுவிரைவாகவே நிறுத்திவிடுவதில் முன்நின்றன. ஆயினும் எல்லாவற்றையும் தாண்டி- தாங்கி- தமது இருப்பின் நீட்சியைத் தொடர்கின்ற சிற்றிதழ்களும் இருக்கவே செய்கின்றன. அவற்றில் தீவிர இலக்கியம் சார்ந்த படைப்புகளோடு தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் 'கலைமுகம்' தனது 50ஆவது இதழைப் பிரசவித்திருக்கிறது.




252 பக்கங்களுடன் 25 கட்டுரைகள், 30 கவிதைகள், 10 சிறுகதைகள் என்பனவற்றுடன் இன்னும் வாசிப்பை நோக்கி நகர்த்தக்கூடிய ஏனைய படைப்புகளைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. ஒரு சமயம் சார்ந்த நிறுவனத்தினால் வெளியிடப்படும் இதழாக இருந்தாலும் கூட, குறித்த சமயம் சார்ந்த அடையாளங்களையோ அல்லது அந்த நிறுவனத்தின் பிரசாரம் சார்ந்த படைப்புகளையோ இதில் வெகு அரிதாகவே காணமுடிகிறது. அத்துடன் தீவிர வாசிப்புக்குரிய கனதியான படைப்புகளே அதிகமாக கலைமுகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஓரிரண்டு படைப்புகள் கனதியான தளத்திலிருந்து விலகுவது இதழுக்கு ஓர் பலவீனமே. ஆயினும் அதிகளவான படைப்பாளிகளிடமிருந்து படைப்புக்களைப் பெற்று கனதியாக கலைமுகம் தனது 50 ஆவது இதழில் பயணிக்கிறது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

# பக்தியுடன் இசைச்சேவை ஆற்றிய கலாபூஷணம் ஜெயராமன்



''ஒழுக்கம் விழுப்பந் தரால் அது உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவன் வாக்கிற்கு ஓர் உதாரண புருஷனாக வாழ்ந்து மறைந்தவர் கலாபூஷணம் தவில் வித்வான் அமரர் ஜெயராமன். தான் உதித்த வடலியடைப்புக் கிராமத்தின் பெயரை நாடளாவ, உலகளாவ பெருமைப்பட வைத்தவர். சிறந்த பக்திமானாக நிறைந்த பல குணாதியசங்கள் கொண்டவராகவும் திகழ்ந்தார். பல பட்டங்களுக்கும் விருதுகளுக்கும் உரியவராக இருந்தபோதும் மிகவும் தன்னடக்கமே உள்ளவராக வாழ்ந்து தனது எழுபத்தெட்டாவது அகவையில் பரமனின் பாதார விந்தங்களைச் சென்றடைந்தார்.

நிறைந்த குருபக்தியுடையவராக இருந்த இவர் தனது குருநாதராகிய மூளாய் ஆறுமுகப்பிள்ளையை அவர் தேக விநியோகம் அடையும் வரை மதித்து நடந்தார். இவர் தனது பால்ய வயதில் இணுவிலைச் சேர்ந்த கலைஞராகிய அமரர் இரத்தினம் தியாகராசாவுடன் தவில் கலைஞராக நீண்டகாலம் சேவைப் பணியாற்றினார். இசையாளரும் இசை ஆர்வலரும் நிறைந்த இக்கிரா மத்தின் புகழ் பூத்த கோயில்களிலெல் லாம் சேவகம் செய்தார். இதனால் அன்றோ சிறந்த பக்திமானாகவும் ஆசாரசீலராகவும், ஒழுக்க சீலராகவும் தன்னை ஆக்கிக் கொண்டார். நவாலியூர் சிந்தா மணிப்பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவங்களில் வாசித்து அக்கோயிலின் பிரதம குருக்களாலும், பிற்காலத்தில் அந்தண சிரேஷ்டராக விளங்கிய பிரதிஸ்டா சிரோன்மணி சாமிவிஸ்வநாதம் குருக்களின் நல்லாசிகளை யும் பெற்றார்.

## நீத்தார் நயப்புரை

இவரது இப் பராயத்தில் அக்காலத்தில் பிரபல நாதஸ்வர வித்வானாகிய நாச்சிமார் கோயில் கோவிந்தராஜ பிள்ளையுடன் இணைந்து குழுக் கச்சேரிகளில் வாசிக்கத் தொடங்கினார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் பிரபல நாதஸ்வரக் கலைஞர்களின் குழுக்களில் இணைந்து அளவையூர் கான கலாநிதி என்.கே பத்மநாதன், நாதஸ்வர மேதை திரு. சிதம்பரநாதன், மூளாய் ஏ.பாலகிருஸ்ணன், அளவெட்டி எம்.பி. பாலகிருஸ்ணன் என்போரது இசைக் குழுக்களில் நீண்டகாலம் தவில் வாசித்தார். இவரது வாசிப்பின் சிறப்பம்சம் நாதம், வயப்பிரமாணம் என்பவையாகும்.

தனது காலத்தில் கோலாலம்பூர் ஈப்போ பட்டினத்தின் ஆஸ்தான வித்வானாக சுமார் ஆறு வருடங்கள் வரை தவில் மழை பொழிந்தார்.

கலாபூஷனம் லயஞான பூபதி, லயஞான கலாமணி, லயஞான திலகம், லய கலா வாதி, கலை ஞாயிறு, தவில் லலித கலைமணி பல பொருத்தமான பட்டங்கள் இவரை வந்தடைந்தபோதும் மிகத் தன்னடக்கம் உடையவராகவும் சகலரையும் எந்த வித ஏற்றத் தாழ்வுமின்றி அணைத்து வாழ்ந்தார்.

இவர் போல யாரென்று உளர் சொல்ல வாழ்ந்த இவர் கடந்த 18.11.2010 அன்று இறைபதமடைந்தார்

வசந்தி மணாளன்.

# ஓவியக் கலைத்திறனுக்காக விருதுபெற்றவர் பிரம்மஸ்ரீ ஜெகநாத சர்மா



ஒரு சமூகத்தின் வரலாற்றில் கலையானது மிகவும் இன்றியமையாததொன்றாகும். ஏனெனில் அதன் வரலாற்றுப் பதிவுகளாக இடம்பெறுவனவற்றுள் பெரும்பங்கு வகிப்பது அச்சமூகத்தின் கலை வெளிப்பாடுகளே. சமூகம் முழுமை பெறுவதற்கும் கலை சிறப்படைவற்கும் கலைஞனவன் முக்கியத்துவம் பெறுகின்றான். அவ்வாறான கலைஞர்களில் சிலர் தமது ஆளுமையினால் தம்மைப் புற உலகிற்கு வெளிப்படுத்திக் கொள்கின்றனர். சிலர்தம்மைப் பெரிதாக வெளிக்காட்டிக் கொள்ளாமல் இலைமறைகாயாக வாழ்கிறார்கள்.

அவ்வாறு இலைமறைகாயாக வாழ்ந்து அண்மையில் மறைந்த ஓவியக் கலைஞரே பிரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயர் ஜெகநாதசர்மா ஆவார். 1921ஆம் ஆண்டு வைகாசி மாதம் 11ஆம் திகதி பிறந்த இவர், தஞ்சாவூர் கண்ணாடி ஓவியம் எனப்படும் கண்ணாடியில் இறை உடுக்களை வரைவதில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், அக்கல்லூரி ஓவிய ஆசிரியராக இருந்த பொன்னையா ஆசிரியரிடம் ஓவிய அடிப்படைகளைக்கற்றுக் கொண்டார்.பின்னர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எஸ்.ஆர்.கே எனக் குறிப்பாக அழைக்கப்படும் எஸ்.ஆர். கனகசபையினால் நடத்தப்பட்ட ''வின்சர் ஆட்'' என்னும் ஓவியப் பட்டறையின் மூலம் தனது திறனை வளர்த்துக் கொண்டார். 1936இல் தமது சிறுவயதிலேயே கண்ணாடியில் படம் வரையலாம் என்பதை அறிந்து அதில் ஆர்வம் கொண்டிருந்த இவர், தனது தொழிலாக 1967,68 காலப்பகுதியில் கண்ணாடி ஓவியங்களை வரைய ஆரம்பித்தார். இவர் வரைந்த மகிஷாசுர மர்த்தனி, சோமாஸ்கந்தர், ஸ்ரீசக்கரம் போன்றவை இன்றும் நல்லூர் சிவன் கோயிலில் உள்ளன.

இவரது கண்ணாடி ஓவியங்களில் தெய்வ உருவங்கள் நேர்த்தியானதாகவும் பக்தி பூர்வமானதாகவும் இருக்க அதேநேரம் ஓவியத்தின் மொத்தப்பரப்பில் உருவத்தின் அளவை விட பின்புலத்தில் அமையும் திருவாசி, தூண், பீடம் போன்றவற்றின் பரப்பு அதிகமாக அமைந்திருப்பதைக் காணலாம். எனினும் தூண், பீடம், திருவாசி என்பனவும் உருவத்தின் நகையலங்காரங்களும் மிக நுண்ணிய அலங்காரரேகை வேலை ப்பா டுகள் உ டையன வ. ஆனால் நிறப்பயன்பாடு மிக எளிமையானதாக இருக்கும். இவரது ஓவியங்களில் மஞ்சள், மஞ்சள் சார் நிறப்பயன்பாடும் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் அதேநேரம் தஞ்சாவூர் கண்ணாடி ஓவியங்களில் அதிகமாகக் காணப்படும். ''ஜருகை'' வேலைப்பாடு அதாவது 'வத்தி ஒட்டுதல்' எனும் அலங்கார வேலைப் பாடு குறைவானதாக இருப்பதனையும் அவதானிக்காலம்.

இக்கண்ணாடி ஓவியங்களை விட ஐம்பொன் அல்லதுபித்தளையினாலான தகட்டில் ஒவ்வொரு கடவுளாருக்கும் வரையப்படும் ''யந்திரங்களையும்''மிக நுணுக்கமாகவும்,நேர்த்தி யாகவும் வரைவதில் வல்லவர். இவ் வகையில் இவர் சுமார் 2000இற்கு மேற்பட்ட யந்திரஙங்களைக் கீறிக் கொடுத்துள்ளார். அத்துடன் உலோக கொத்து வேலையினால் அமைந்த உருக்கள் ஒரு சிலவற்றையும் உருவாக்கியுள்ளார்.இவர் தனது சொந்த முயற்சியினால் உருவாக்கிய ''சந்திரசேகரர்'' வார்ப்புச் சிலை நல்லூர் சிவன் கோயிலில் உள்ளது. இது மிக எழிமையும், அழகும், நளினமும் உடையது.

1943 இல் தனது சொந்த முயற்சியினாலேயே தயாரிக்கப்பட்ட கடதாசினைப் பயன்படுத்தி அச்சுக்கூடம் ஒன்றை'' நிரஞ்சனா அச்சகம்'' எனும் பெய ரில் உருவாக்கினார். சிறிது காலம் இயங்காதிருந்த அவ் அச்சுக் கூடம் 90கள் வரை நடத்தப்பட்டுவந்தது.

இவை மட்டுமன்றி பேப்பரினால் ஒட்டிச் செய்யப்படும்'' பேப்பர் பொம்மை'' உருக்களையும் தயாரித்து அதற்கு வர்ணம் தீட்டி ஒவ்வொரு நல்லூர் திருவிழாக் காலங்களிலும் விற்ப னை செய்து வந்துள்ளார்.கண்ணாடி ஓவியங்களை விடவும் ''மெய் யுரு''(Portrait) ஓவியங்களையும் வரையக் கூடியவர். 6-7 மெய்யுரு ஓவியங்களையும் வரைந்து கொடுத்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு திறமைகளையும் தன்னகத்தே கொண்டு ஆடம் பரமில்லாது எழிமையாக வாழ்ந்த இவரின் திறமையையும்,சேவையையும் பாராட்டி நல்லூர் கலாசாரப் பேரவை இவருக்கு ''கலைஞானச் சுடர்'' எனும் விருதினை வழங்கி கௌரவித்தது.கடந்த சில ஆண்டுகளாக கொழும்பில் தனது இளைய புதல் வரோடு தங்கியிருந்து வீட்டிலிருந்த வண்ணமே யந்திரத் தகடுகளை வரைந்து கொடுத்து அமைதியாக வாழ்ந்த இவர் சென்ற 3.11.2010 அன்று கால மானர்.இவரின் பல்வேறு பட்ட கலை ஆற்றல்களை எமது சமூகத்தால் பயன்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் அவர் இல்லாத நிலையில் அவ ரை நினைவு கூர்வது ஏற்புடையது.

உ.குமுதா, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாளுக்கான விடை

## விடைகள் — விஞ்ஞானம் I&II

### விஞ்ஞானம் I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-3 | 02-2 | 03-2 | 04-3 | 05-3 | 06-4 | 07-4 | 08-3 | 09-4 | 10-1 |
| 11-2 | 12-4 | 13-1 | 14-3 | 15-1 | 16-1 | 17-3 | 18-2 | 19-2 | 20-4 |
| 21-3 | 22-2 | 23-1 | 24-4 | 25-4 | 26-4 | 27-1 | 28-1 | 29-2 | 30-3 |
| 31-4 | 32-4 | 33-2 | 34-4 | 35-1 | 36-3 | 37-2 | 38-3 | 39-1 | 40-4 |

### விஞ்ஞானம் II பகுதி A அமைப்புக் கட்டுரை

01. A 1) தாவரங்களில் இருந்து பெறப்படும் எளிதில் ஆவியாகும் அரோமற்றிக் பதார்த்தங்கள் ஆகும்.
2) கொதிநீராவி காய்ச்சி வடித்தல்.
3) கறுவா எண்ணெய் + நீராவி. 4) இலீபீக்கின் ஒடுக்கி.
5) நீரின் தன்வெப்பக் கொள்ளளவு கூடியதால்.
6) ஒரு தாக்கத்தில் பௌதிக நிலை சிறு துண்டுகளாக்கப்படும்போது தாக்கமடையும் மேற்பரப்பு கூட்டப்படுகிறது.
7) X - நீர். Y - கறுவா எண்ணெய்.

B 1) A - மாக்காந்தியா - ஈரலிப்பான தரை. B - பரமேசியம் - வைக்கோல் நீர்.
C - பங்கசு - பாண்/அழுகிய பொருட்கள்.
D - பக்றீரியா.

02. A 1) A - நைத்திரேற்றாக்கம் - $NO_2$ ஐ $NO_3$ ஆக மாற்றல்.
B - அகத்துறிஞ்சல் - $NO_3$ ஐ நீருடன் வேர் மயிர்களூடாக அகத்துறிஞ்சல்.
C - நைதரசனிறக்கம் - $NO_3$ ஐ வளிமண்டல $N_2$ ஆக பக்றீரியாவினால் மாற்றல்.
2) புரதமாக. 3) றைசோபியம்.
4) ஒன்றிய வாழ்வு. 5) யூரியா.
6) யூரியா, அமோனியம் சல்பேற். 7) உயிர் வளமாக்கிகள்.

B 1) தாவரங்கள்.
2) சக்திப்பாய்ச்சலின்போது பத்தில் ஒரு பகுதியே அடுத்தபடி நுகரிக்குச் செல்வதால்.
3) $gm^{-2}$ 4) 1.5kJ

03. 1) சிலிக்கன். 2) வாயுக்களாக.
3) இவற்றின் உருகுநிலை (மறைப் பெறுமானத்தில்) குறைவாகக் காணப்படுவதால்.
4) G - நீரைச் சுத்திகரிப்பதற்கு/வெளிற்றுவதற்கு.
H - மின்குமிழில் அடைப்பதற்கு.
5) $CG_3$ - அயன்பிணைப்பு. 6) A
7) $3B + N_2 \rightarrow B_3N_2$ 8) S
9) D 10) 142

04. A 1) 160,000J
2) பொருளின் திணிவை விட வாளியின் திணிவு குறைவு.
3) முதலாம் வகை நெம்பு. 4) 28.28

B 1) C யில். 2) ஆழம் கூட அமுக்கம் கூடும்.
3) 11,152 Pa
4) திரவத்தின் ஆழம், திரவத்தின் அடர்த்தி, ஈர்வையிலான ஆர்முடுகல்.

### பகுதி B கட்டுரை
#### உயிரியல்


05. 1) A - சுவாச நாடி B - தொகுதிப் பெருநாடி
C - அரைமதி வால்வு D - முக்கூர் வால்வு
E - சுவாச நாளம் F - கீழ்ப்பெருநாளம்.
2) இடது சோணையறைக்கும் இடது இதயவறைக்கும் இடையில்.
3) எண்டோ காடிறிஸ். 4) இதயமுடுக்கி.
5) மூளை, முண்ணான், பரிவகக்கீழ்.
6) இதயவறைகள் குருதியைச் செலுத்தும் அறைகளாகக் காணப்படுவதால்.
7) பொருந்தாத குருதியை மாற்றீடு செய்வதால் ஒருங்கொட்டல் ஏற்படல்.
8) எயிட்ஸ், மஞ்சட்காமாலை, அரிவாட்போலி செங்கல நிலை.

06. A 1) இலிங்கமுறை இனப்பெருக்கம், இலிங்கமில்முறை இனப்பெருக்கம் (பதியமுறை)
2)



3) சூலகம் - கனி, சூலகச் சுவர் - சுற்றுக்கனியம், சூல்வித்து - வித்து (முளையம்)

B 1) சுக்குரோஸ், ஓமோன்கள், கனியுப்புக்கள்.
2) தாவரத்தின் சிறிய பகுதிகள் இடப்படுவதால்.

C 1) உயரமானவை - H, குறளானவை - h
2)




தோற்ற அமைப்பு - எல்லாம் உயரமானவை - 4:0
3) பிறப்புரிமை அமைப்பு விகிதம் - 1:1


#### பௌதிகவியல்

07. A 1) முதன்மைச் சுற்றுக்கு வரும் மேலதிக மின்னோட்டம் வரும்போது தானாக உருகித் தடைசெய்தல்.
2) முதன்மைச் சுற்றிலேயே 240V அளவுள்ள மின்னோட்டம் வருவதால்.
3) இது ஒரு படிகுறை மாற்றியாகக் காணப்படுவதால்.
4) X - இருவாயி - மின்னோட்டத்தைச் சீராக்குவதற்கு.
Y - கொள்ளளவி - மின்னேற்றங்களைச் சீராகச் சேமித்து வழங்க.

B 1) 45kJ 2) 1.87kg 3) 38.4Ω

08. A 1) 3.99 2) 1.33 = i/40 3) வானவில், கானல் நீர்.

B 1) 20cm



2) 2.
3)



## இதுவரை மட்டக்களப்பு வலத்தில் வெளிவந்த வினாத்தாள்களுக்குரிய விடைகள்

### இரசாயனவியல்

09. 1) வளியுடன் தாக்கம், நீருடன் தாக்கம், அமிலங்களுடன் தாக்கம்.
2) பொன்/பிளாற்றினம்.
3) பௌதிக நிலை, வெப்பம், செறிவு, ஊக்கி, அமுக்கம்.
4) 1. மஞ்சள்நிற வீழ்படிவு பெறப்பட்டது. 2. கந்தகம்.
3. அமிலத்தைச் செறிவாக்கல். 4. செறிவு.

10. 1) சுண்ணாம்புக்கல், களிமண், ஜிப்சம். 2) 1,600°C - 1,400°C
3) 1/3 பங்கு நீர் இழக்கப்படல், சுண்ணாம்புக் கல்லில் உள்ள $CaCO_3$ பிரிகையடைந்து $CaO$, $CO_2$ உண்டாதல்.
4) முக்கல்சியம் சிலிக்கேற்று, இருகல்சியம் சிலிக்கேற்று, முக்கல்சியம் அலுமினேற்று.
5) சீமெந்து கிளிங்கர்.
6) சீமெந்து இலகுவில் இறுகாது தடுக்கும். 7) $CaSO_4.2H_2O$
8) நிலக்கரி. 9) கிளிங்கர்.
10) கட்டடம் கட்ட/கொங்கிறீட் கலவை/தூண் அமைக்க.

## Answers — English Language I&II

TEST: 01
2. cordial 3. blocks 4. telephone
5. Prior 6. hairstylists 7. appointment
8. food 9. restaurant 10. space
11. lease

TEST: 02
b. 2.00 p.m. c. Annual Prize Giving
d. Mr.M.Kanapathippillai
e. The Principal and the Staff of BT/Hindu College
f. BT/Hindu College / School Main Hall / Main Hall of BT/Hindu College

TEST: 03
1. Only Simple Present Tense and Present Continuous Tense should be used.
2. For the action taking place, Present Continuous Tense should be used and for the concrete nouns Simple Present Tense should be used.
3. A sentence with "there is" and another sentence with "there are" can be used.
4. The rest three sentences could be written to describe the action taking place using Present Continuous Tense.

TEST: 04
1. H.R.Manager 2. Ginitota Plywood Manufacturers PVT. Ltd.
3. Plywood 4. Word, Excel, Power Point, e – mail and internet
5. e – mail and internet

TEST: 05
2. d 3. e 4. b 5. f 6. c

TEST: 06
Include – name, age, subject he teaches, how he comes to school, say something about his teaching and his qualities.

TEST: 07
1. To Welimada 2. Paddy fields, hills, gem mines (write any two)
3. At Belihul Oya 4. His mother
5. a-Jungle fowls, b-Pigeons

TEST: 09
has - have at - from own - owns A - the her - his
trust - trusting Ones - one do - does have - had on - with

TEST: 10
1. endemic 2. creepers 3. unscrupulous
4. smuggle 5. visitors


TEST: 11
1. basicaly 2. differes 3. information
4. obviously 5. important 6. educational
7. knowlege 8. helpful 9. navigation
10. performance

TEST: 12
1. On a motorbike 2. A helmet 3. Her cat

TEST: 13
a of b waves c oceans d across e in
f on g water h if i one j runs
k forward l happens

## விடைகள் — கணிதம் I&II

### கணிதம் I பகுதி A

01. ரூ. 12.50
02. $6 = 110_{இரண்டு}$
03. 4.2l
04. 24 பேர்
05. $2x^2$
06. $x = 60^0$
07. 0.0875
08. 8
09. x = 5
10. 0.002m, 0.8cm, 1.2cm, 15mm
11. 48%
12. 1) $<ADC = 40^0 + 40^0$ (புறக்கோணம் அகக்த் தெதிர்கோணங்களின் கூட்டுத்தொகைக்கு சமன்)
2) $<ACD = 50^0$
13. $x \geq 2$
14. ரூ. 180.00
15. (x-1) (2x -3)
16. 1)



2) AC = 15
17. 1) 8cm 2) CY = YD
18. $27x^3 + 54x^2y + 36xy^2 + 8y^3$
19. 1) f = v - u / t 2) f = 60 - 20 / 10 = 4
20. ரூ. 70,000
21. 1) $<BPO = 35^0$ 2) $<OBP = 90^0$
22. 1) [illegible] 2) Y = 3x
23. 1) பல்கோண அகக் கோணங்களின் கூ.தொ.(n -2) $180^0$ 2) புறக்கோணம் = $40^0$
24. 1) AD/DB = DE/BC = AE/EC
2) x = 5cm
25. x = 1/2
26. $x^2 = x - 6 = 0$
27. 1)1200 2)14,400
28. நி.வே: SQ = SR
நிறுவல்: PQS, PRS (முக்கோணிகளில்)
PQ = PR(தரவு)
<QPS = <RPS(தரவு)
PS = PS(பொது)
Δ PQS = Δ PRS(ப.கோ.ப)
QS = SR
29. x = 10
30. 800m

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கில் புதிய கிளைகளைத் திறந்து

# இலங்கையில் ரூ.1000 கோடிகடன் வழங்குகின்றது இந்தியன் வங்கி!

கொழும்பு,நவ.20

இலங்கையில் அடுத்த இரண்டரை ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபா கடனை வழங்க இந்தியன் வங்கி திட்டமிட்டுள்ளது என இந்தியன் வங்கியின் தலைவர் பாசின் தெரிவித்துள்ளார்.

சென்னையைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்தியன் வங்கி இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட வடபகுதியில் புதிய கிளையைத் திறக்கவுள்ளது.

இதுதொடர்பாக இந்தியன் வங்கியின் தலைவர் பாசின் கூறியவை வருமாறு -

இலங்கையில் புதிய கிளைகளைத் திறந்த பின்னர் அடுத்த இரண்டரை ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாவைக் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முப்பது ஆண்டு காலப் போர் முடிவுக்கு வந்துள்ளதானது உட்கட்டுமான நிதி வாய்ப்புகளை அதிகப்படுத்தியுள்ளது.

இதனால் அடுத்த இரண்டரை ஆண்டுகளில் இந்தியன் வங்கி தனது கடன்வழங்கும் தொகையை இரட்டிப்பாக்கவுள்ளது.

இதன் மூலம் ஆயிரம் கோடி ரூபா கடன் வழங்கப்படும்.

உட்கட்டுமான நிதி ஒரு முக்கியமான துறையாகும். இந்தியாவில் நாம் பெற்ற அனுபவங்கள் இலங்கையில் அதைச் செய்வதற்குத் துணையாக இருக்கும்.

தற்போதுள்ள அமைதியான சூழலில் இலங்கையில் பெருமளவு வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஏற்படவுள்ளன.

இந்த ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 வீதமாக இருக்கும் என்று மத்திய வங்கி கூறியுள்ளது.

1932 ஆம் ஆண்டு முதல் கொழும்பில் இயங்கும் இந்தியன் வங்கி அங்கு கடன் வழங்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

புதிய வங்கிக் கிளைகள் அங்கு அமைக்கப்படுவது கடன் வழங்கும் தொகையை இரட்டிப்பாக்க வழிசெய்யும்.

யாழ்ப்பாணத்தில் வங்கிக் கிளையைத் திறப்பதற்கு இந்திய, இலங்கை ஒழுங்கமைப்புக் குழுக்களின் அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் அடுத்த ஆண்டு ஜனவரியில் அங்கு கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் புதிய கிளைகளை அமைக்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சுய உதவிக் குழுக்களின் மூலம் கடனுதவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

முக்கியமாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்துறைகளில் இந்த கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன. இந்தியாவில் இந் தத் திட்டம் வெற்றி பெற்றுள்ளது.

-இப்படி அவர் தெரிவித்தார். (சி)

## நுளம்புத்திரி பாவனை தேவையா?

# உடனடி ஆய்வுக்கு அமைச்சர் உத்தரவு

நுளம்புத்திரிகள் பயன் படுத்தப்படுவதால் நுளம்புகள் விரட்டப்படுகின்றனவா, அவை அழிந்து போகின்றனவா அல்லது வேறும் பெறுறொன்று கிட்டுகிறதா என்பன தொடர்பாக உடனடி ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

16 ஆம்திகதியன்று கொழும்பிலுள்ள மருத்துவ ஆய்வு நிறுவனத்துக்குத் திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற் கொண்ட வேளையில் அவர் மேற்படி நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு இந்த உத்தரவை விடுத்துள்ளார்.

மேலும் இந்த நாட்டு மக்கள் தினமொன்றில் ஐந்து கோடி ரூபாய்கள் வரை பெறுமதியான நுளம்புத்திரிகளைப் பயன்படுத்துவதாகவும் அந்தளவு நுளம்புத்திரிகள் பயன்படுத்தப்பட்டாலும் அவற்றால் கிட்டும் பலாபலன் பற்றி இதுவரையில் விஞ்ஞானப் பரிசோதனை யொன்று நிகழ்த்தப்படாமைபெரும்குறைபாடொன்றே எனவும் அமைச்சர் அங்கு வைத்துத் தெரிவித்துள்ளார்.

இதைக் கவனத்தில் கொண்டு வெகு விரைவில் பரிசோதனை யொன்றை மேற்கொள்ளுமாறும் அதன் பெறுபேறு மக்கள் முன் வைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் மருத்துவ ஆய்வு நிறுவன அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார். (ஐ-22)

# போதைப்பொருளுடன் கைதானவருக்கு ரூ.40,000 அபராதம்; ஒத்திவைத்த சிறை


மஸ்கெலியா,நவ.20

போதைப் பதார்த்தம் அடங்கிய 15 குப்பிகளுடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு ஹட்டன் மாவட்ட நீதிவான் சந்துன் விதான 40,000 ரூபா அபராதத்துடன் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

ஹட்டன் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய கடந்த 15 ஆம்திகதி நடத்தப்பட்ட திடீர் சோதனை யின்போது நோர்வூட் பிரதேசத்தில் வைத்து குறித்த நபர் போதைப் பதார்த்தமடங்கிய குப்பிகளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். (சி)


## கணிதம் I பகுதி B

01. 1) x = 18 பேர், y = ஒருவர்
 2) 31 பேர்
 3) 84 பேர்
 4) 130 பேர்
 5) 28 பேர்




02. 1) 18,000 ரூபா 2) 4,500 ரூபா 3) 9%
 4) 138,000 ரூபா 5) 0.5%

03. 1) 4/24
 2) 12/24
 3) 12/24
 4) 5/24
 5) வரைபில் வட்டமிட்டு காட்டப்பட்டுள்ளது.




04. 1) 19.25cm² 2) BC = 15cm
 3) 770cm³
 4) அகழ்ந்து எடுத்த கண்ணாடி நிறை = 7.7kg
 அரியத்தில் நிழற்றாத வெட்டு முக பரப்பு = 34.75cm³
 5) 1390cm²

05. 1)


| x | fxx |
|---|---|
| 45 | 270 |
| 165 | 4620 |
| 195 | 3315 |

2)

| ஒய்வெடுக்கும் நேரம் (வகுப்பாயிடை) | மாண.எண் (மீடிறன்) | நடுப்பெறுமானம் (X) | f×X |
|---|---|---|---|
| 0-90 | 06 | 45 | 270 |
| 90-120 | 08 | 105 | 840 |
| 120-150 | 12 | 135 | 1620 |
| 150-180 | 28 | 165 | 4620 |
| 180-210 | 17 | 195 | 3315 |
| 210-240 | 9 | 225 | 2025 |
| Σf | 80 | | 12690 |

3) $\Sigma fx = 12690$, $\Sigma f = 80$
4) 150 – 180

5)




## கணிதம் II பகுதி A

01. 1) ரூ. 40,000 2) ரூ. 2000 3) ரூ. 20 4) ரூ. 16400
 5) ரூ. 2410

02. 1) 80 பேர் 2) 25 பேர் 3) 240 - 320 4) ரூ. 341
 5) ரூ. 27280

03. 1)

| x | 0 | 1 | 2 |
|---|---|---|---|
| y | 5 | 6 | 5 |

 3) 2. திரும்பல்புள்ளி ஆழ்கூறுகள் (1, 6)
 3. x = 1

04. 1) 616cm² 2) ஆரை = 14 3) 8624cm³
 4) 14cm 5) 2464cm²

05. a) 1) x - y= 6, 3x - 2y = 30 2) x = 18, y = 12
 b) 1) முன் இரட்டை எண் = (x - 2) பின் உள்ள இரட்டை எண் = (x+2)
 2) $(x - 2)^2 + (x)^2 + (x+2)^2 = 308$
 3) 8, 10, 12

06. a) 3.75 அல்லது -2.25
 b) 1) தாயம் Q ஆனது 3×3 வரிசையாகும்.
 2) 3P - 2Q = (11 2 9 / [illegible] / [illegible])
 3) A நிரல் தாயம் ஆகும்.

(கணித [illegible])


## கணிதம் II பகுதி B

07. a) 1) முதல் 4 உறுப்புகள் 2, 0, -2, -4 ஆகும். 2) இது கூட்டல் விருத்தியாகும்.
 3) வித்தியாசம் பொதுவாக உள்ளதால். 4) ஏழாவது உறுப்பு = -10
 5) $S_{11} = -220$ 6) -76 என்பது 40ஆவது உறுப்பாகும்.
 b) முதல் ஆறு உறுப்புகளின் கூட்டுதொகை = 31.5

08. 2) AC இன் நீளம் 6.2cm 6) சுற்றுவட்டம்
 7) வட்ட ஆரை 3.1cm


09. a) முறைப்படி தேற்றத்தை நிறுவலாம்.
 b) 1) <XAD = <ACD (இவை ஒன்றுவிட்ட துண்டக்கோணங்கள்)
 2) <ADX வட்டநாற்பக்கல் ABCD இன் புறக்கோணம்
 <ADX = <ABC
 3) <OAX = $90^0$
 4) <ACX = $65^0$ (மையகோணம் பகுதி கோணத்தின் இருமடங்கு)

10. A)




 B) 1. 120/720
 2. 216/720
 3. 120/720
 C) X இன் தீர்வுகள் 0, 3/2 ஆகும்.

11. A) முறைப்படி தேற்றத்தை நிறுவலாம்.
 B)





 1) ABC Δ, AD = DB
 (DE // BC ஆகையால் AE = EC)
 ஆனால் DE = EX (தரவு)
 ADCX ஓர் இணைகரம்.
 (மூலைவிட்டங்கள் ஒன்றை ஒன்று இருசமகூறிடுவதால்)
 ABE Δ = 2X
 ABC Δ BE இடையம்
 ( DE // BC , AD = DB
 ஆகையால்)
 ABE Δ = BEC Δ
 ஆனால் ABE Δ = 2X
 BEC Δ = 2X
 ABC Δ = 4X
 ஆனால் ADC Δ = 1X
 4 Δ ADE = Δ ABC

 2) நிறுவல்:
 AEB Δ
 AD = DB
 DE இடையம்
 ADE Δ = X எனின்
 BDE Δ = X
 இடையம் பரப்பை
 இருசமகூறிடும்.

 3) நிறுவல்:
 ADE Δ , Δ CXE என்பன
 ஒருங்கிசையும்(ப. கோ. ப)
 ADE Δ = CXE Δ
 ஆனால், DCE Δ = DCE Δ
 ADE Δ + DCE Δ = CXE Δ + DCE Δ
 ADC Δ = DCX Δ

12. 1) A = 560.5
 2) h = 0.8391m
 3) கோபுர உயரம் = 435.5m




(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கராத்தேப் போட்டியில் வென்ற வடமாகாண வீரர்களுக்குப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், நவ.20

அண்மையில் வென்னப்புவவில் இடம்பெற்ற தேசிய கராத்தே போட்டியில் வடமாகாண ரீதியில் பங்குகொண்டு வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:-

11 வயதுப் பிரிவு- கிளிநொச்சி கனிஸ்ட ம.வி. மாணவன் தெ.கனுஜன்- காட்டா போட்டியில் வெண்கலப் பதக்கம்.

13 வயதுப் பிரிவு சுண்டுக்குளியைச் சேர்ந்த யோ. சுகிர்த்தா- காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கம்

16-17 வயதுப் பிரிவு:- செ. செந்தூரன், குமித்தே போட்டியில் வெள்ளிப் பதக்கம்

மல்லாவி தென்னியன் குளம், பி. பிரதாப் குமித்தே போட்டியில் வெண்கலப் பதக்கம், கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம்.

21 வயதுப் பிரிவு:- செ. செல்விகா - மண்ணிறப்பட்டி காட்டா போட்டியிலும் குமித்தே போட்டியிலும் வெண்கலப் பதக்கம் (கிளிநொச்சி, குருகுலம்)

7 வயது பிரிவு காட்டா போட்டியில் 8 வீரர்களில் ஒருவராக வி. நிவேதன் தெரிவானார் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

14 வயதுப் பிரிவு:- காட்டா போட்டியில் சிறந்த 8 வீரர்களில் ஒருவராக கிளிநொச்சி கனகபுரத்தைச் சேர்ந்த நா. நிதுஜா தெரிவானார்.

16 வயதுப் பிரிவில் சண்டைப் போட்டியில் சிறந்த 8 வீரர்களில் ஒருவராக எஸ். பிரசாத் தெரிவானார்.

12 வயதுப் பிரிவு:- காட்டா போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.ஆழிக்குமரன் வெண்கலப் பதகக்கம் வென்றார்.

11 வயதுப் பிரிவு:- குமித்தே போட்டியில் எட்டு சிறந்த வீராங்கனைகளில் ஒருவராக சிந்துஜா தெரிவானார்.

19 வயதுப் பிரிவு:- காட்டா போட்டியில் எட்டு சிறந்த வீரர்களில் ஒருவராக எம். திவாகரன் தெரிவானார். (கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமம்).

21 வயதுப் பிரிவில் சங்கானையைச் சேர்ந்த எஸ். கிருபாகரன் காட்டாப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

11 வயதுப் பிரிவு:- பருத்தித்துறையைச் சேர்ந்த துவாரகா குமித்தே போட்டி வெள்ளி பதக்கம் வென்றார்.

13 வயதுப் பிரிவு:- சண்டைப் போட்டியில்டியில் எட்டு சிறந்த வீரர்களில் ஒருவராக எஸ். தமிழச் செல்வன் தெரிவானார்.

(த-23)

# யாழ்ப்பாணத்தில் ஜனவரியில் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை

## தமிழ் மாவட்டங்களுக்காக இந்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.20

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான ஆரம்ப மற்றும் தரம் உயர்த்துவதற்கான பரீட்சை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழ் மத்தியஸ்தர்களின் நன்மை கருதி ஜனவரி மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் கூறுகையில்,

தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து நீண்டகாலமாக சர்வதேச மத்தியஸ்தர்கள் உருவாகவில்லை. ஆகையால் அதற்கான முயற்சிகளை நாம் ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதனால் 20 வயதிற்குட்பட்ட புதிய மத்தியஸ்தர்களை நாம் உருவாக்க வேண்டியுள்ளது. ஆகவே பாடசாலைகள் மற்றும் கழகங்களின் அணிகளில் விளையாடும் 19 வயதுக்குட்பட்டவர்கள் ஆகக் குறைந்தது மூன்று வீரர்களையாவது சென். பற்றிக்ஸ் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்கு அனுப்பிவைக்க வேண்டும். 35 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டப் பயிற்சி ஆசிரியர்களும் இந்த வகுப்புகளில் பங்குபற்றலாம் என்றார்.

(த-23)

சாதனையாளர்...




கௌரவிப்பு: அண்மையில் வென்னப்புவவில் இடம்பெற்ற தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் வடமாகாண ரீதியில்பங்குகொண்டு வெற்றியீட்டிய வீரர்கள், வீராங்கனைகள் ஆசிரியர் சென்சேய் எஸ்.விஜயராஜுவுடன் காணப்படுகின்றனர். (த-23)

# யாழ். இந்து - மத்திய கல்லூரி இறுதியாட்டத்தில் மோதும்

யாழ்ப்பாணம், நவ.20

அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணி யாழ். இந்துக் கல்லூரி அணி ஆகியவை இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன. முதலில் இடம் பெற்ற அரையிறுதி இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி ''ஏ'' அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 68:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை 69:41 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

# யாழ். மத்தி, இராமநாதன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.20

அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான பாடசாலைகளின் ஆண்,பெண் அணிகளுக்கிடையேயான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வாரம் இடம் பெற்ற ஆட்டத்தில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி 'பி' அணி யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணிஆகியவை வெற்றி பெற்றன.

முதலில் இடம் பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி ''பி'' அணியை எதிர்த்து இராமநாதன் கல்லூரி அணி மோதியது

இதில் இராமநாதன் கல்லூரி அணி, தன்னை எதிர்த்து விளையாடிய வேம்படி மகளிர் 'பி' அணியை 12:2என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம் பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ். மத்திய கல்லூரி அணி தன்னை எதிர்த்து விளையாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 41: 18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

(த-23)

# ஜெயரூபனின் சாதனை பதிவு

வலி.வடக்கு, நவ.20

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் உயரம் பாய்தலில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ஜெயரூபனின் 2010 ஆம் ஆண்டு பெறுபேறு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சிறந்த பெறுபேறாக பதிவு செய்யப்படவுளள்து.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று வருடங்களின் பெறுபேறுகளின் அடிப்படையில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் சாதனைப் பட்டியல் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.அன்ரனிதாஸ் 1.75 மீற்றர் உயரமும் 2009 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எம்.கிருஷ்ணா 1.83 மீற்றர் உயரமும் 2010 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.ஜெயரூபன் 1.86 மீற்றர் உயரமும் பாய்ந்த பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆர் .ஜெயரூபனின் 1.86 மீற்றர் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் புதிய சாதனையாக பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)




# உதைபந்தாட்டப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், நவ.20

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவுடன் யாழ் உதைபந்தாட்டலீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவை இணைந்து சிறுவர் உதைபந்தாட்டபயிற்சிமுகாம்ஒன்றைஜனவரி 22 ஆம் 23ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளன.

இந்தச் சிறுவர் உதைபந்தாட்டப் பயிற்சி முகாமில் பங்கு கொள்ள விரும்பும் பாடசாலைகளின் அதிபர்கள் தங்களது பாடசாலையிலிருந்து உதைபந்தாட்டக் காலணி அணிந்து விளையாடக் கூடிய மூன்று வீரர்களின் பெயர் விவரங்களை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் இல 70/9, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். உதைபந்தாட்ட லீக் செயலாளர் மு.பிரான்சிஸ் அறிவித்துள்ளார். (த-23)

# சாவகச்சேரி இந்து - சென்.ஜோன்ஸ் மோதல் சமநிலையில் முடிந்தது

தென்மராட்சி, நவ.20

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 13 வயது பிரிவு கிரிக்கட் அணிகளுக்கிடையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

அகில இலங்கை பாடசாலைகளின் கிரிக்கெட் சங்கத்தினால் பாடசாலை 13 வயது பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இரு கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான போட்டி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் இனிங்ஸில் இந்துக் கல்லூரி அணி அணைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் முதல் இனிங்ஸில் விளையாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 90 ஓட்டங்களில் அணைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்துக் கல்லூரி வீரர்களான விதுஷன் 3 விக்கெட்டுக்களையும் பிரியங்கன், பிரிசாந்தன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் ஆடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வீரர்களின் சிறப்பான பந்து வீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து 36. ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

84 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் ஆடத் தொடங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்கள் பெற்றபோது ஆட்டம் முடிவுக்கு வந்ததால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி விளையாடிய 5 போட்டிகளில் 3 போட்டிகளில் வெற்றி பெற்றும் இரண்டு போட்டிகள் சமநிலையில் முடிவுற்றதாகவும் இந்த அணி இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

(த-207)

# அளவெட்டி மத்தி சம்பியன்

வலி. வடக்கு, நவ.20

513 ஆவது படையணி மஞ்சி பிஸ்கட் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை கலை ஒளி விளையாட்டுக்கழகமும் அளவெட்டி மத்தி விளையாட் டுக்கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

ஆரம்பத்தில் போட்டியின் போக்கு மந்தமானதாகக் காணப்பட்ட போதும் இரண்டாம், மூன்றாம் சுற்றுக்களில் கலைஒளி விளையாட்டுக் கழகம் விறுவிறுப்பாக விளையாடியது.

ஆனாலும் அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் முதல் மூன்று சுற்றுக்களையும் 25:12, 25:15, 25:22 என்ற புள்ளிகளடிப்படையில் புள்ளிகள் பெற்று சம்பியனாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிந்தது காலி டெஸ்ட்!

காலி,நவ.20

காலியில் நடைபெற்று வந்த மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை இலங்கை அணி சமனிலையில் முடித்துள்ளது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கைக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகிறது.

முதலாவது போட்டி கடந்த திங்களன்று காலியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 580 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி, 378 ஓட்டங்களைப் பெற்று 'பலோ ஒன்' ஆனது.

இதன் காரணமாக, 202 ஓட்டங்கள் பின்னிலை யுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும் போது விக்கெட் இழப் பின்றி 89 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பரணவிதாரண (44), டில்ஷான் (44) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது இலங்கை அணி, முந்தைய நாள் அரைச்சதமடிக்கும் தருவாயில் இருந்த டில்ஷான், அரைச்சதமடித்த (54) கையோடு ஆட்டமிழந்து சென்றார். அவரைத் தொடர்ந்து அணித்தலைவர் சங்கக்கார (4) ஏமாற்றிச் செல்ல, மறுமுனையில் சிறப்பாக ஆடி சதமடிப் பார் என எதிர்பார்க்கப் பட்ட பரணவிதாரண 95 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்தார். பின்னர் வந்த மஹேல ஜெயவர்த்தன அரைச் சதம் (58) அடித்து ஆட்டமிழந்தார்.


இலங்கை அணி, 4 விக்கெட்டுகளை இழந்து 241 ஓட்டங்களைப் பெற்ற வேளை, மழை குறுக்கிட்டது. இதனால் போட்டி இடைநிறுத்தப்பட - ஆட்டம் சமனிலையடைந்தது.

சமரவீர (19), மத்யூஸ் (5) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில், ரோஜ் 2 விக்கெட்டுகளையும், ஷிலிங் போர்ட், நாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவு செய்யப்பட்டார்.

2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகிறது.



# தாய் மண்ணில் கிண்ணத்தை கைப்பற்றுமா இந்திய அணி?

நாக்பூர்,நவ.20

இந்தியா - நியூஸிலாந்து அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி, இன்று நாக்பூரில் ஆரம்பமாகிறது. இப்போட்டியில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்ற இரு அணிகளும் மல்லுக்கட்டவுள்ளன.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி, 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. ஏற்கனவே நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளும் சமனிலையில் முடிந்தன.

இந்நிலையில், 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி, இன்று நாக்பூரில் ஆரம்பமாகிறது. இப்போட்டியில் வெற்றிபெறும் அணி தொடரைக் கைப்பற்றும் என்பதால், அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்திய அணியின் பந்து வீச்சைப் பொறுத்தவரை, இந்திய அணி விக்கெட் வேட்டை நடத்த வேண்டும். இடுப்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சஹீர்கான், இன்றைய போட்டியில் இடம்பெறவில்லை. இதனால், பந்துவீச்சில் இந்தியாவுக்கு மேலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக ஜெயதேவ் உனாட்கட் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், 8ஆவது வீரராகக் களமிறங்கி சதம் அடித்துச் சாதித்தவர் இந்திய சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங். ஆனால், பந்துவீச்சில் கைகொடுக்கத் தவறிவிட்டார். நாக்பூர் போட்டியில் இவர் விக்கெட் வேட்டை நடத்தினால், இந்திய அணி எளிதில் வெற்றி பெறலாம்.

அதேவேளை, இத்தொடர் தொடங்குவதற்கு முன்னர் நியூஸிலாந்து அணித் தலைவரான வெற்றோரி, "நாங்கள் இரண்டு போட்டிகளை சமனிலையில் முடித்தால் கூட எங்களுக்கு அது வெற்றியாக அமையும்" எனக் கூறியிருந்தார். அதேபோல அந்த அணி சொன்னதைச் சாதித்துவிட்டது.

எனினும், இன்றைய போட்டியில் இரு அணிகளும் கிண்ணத்தைக் கைப்பற்ற முயற்சிக்கும்.

## மழை வருமா?

நாக்பூரில் நடக்கவுள்ள இன்றைய டெஸ்ட் போட்டி மழையால் பாதிக்கப்பட, அதிக வாய்ப்புகள் உள்ளன. நேற்றுமுன்தினம் மழை காரணமாக, இரு அணி வீரர்களும் காலை மட்டுமே பயிற்சிகளை மேற்கொண்டனர். மழை தொடரும் பட்சத்தில், சொந்த மண்ணில் வைத்துத் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற இந்திய அணியின் கனவு பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

# தொடரைத் தீர்மானிக்கும் இறுதி மோதலில் தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகள்

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதன் முதலாவது போட்டி சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது மற்றும் கடைசிப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இன்றைய போட்டியில் வெற்றிபெறும் அணியே தொடரைக் கைப்பற்றும் என்பதால் இரு அணிகளும் ஆக்ரோஷத்துடன் இன்று களம் காண்கின்றன.

அதேவேளை, அண்மைக் காலமாக பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிவரும் பாகிஸ்தான் அணி, தம் மீதான களங்கத்தைப் போக்க இந்தப் போட்டியில் சாதிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாறாக இந்தப் போட்டியிலும் ஏதாவது சர்ச்சைகள் ஏற்படக்கூடும் என கிரிக்கெட் வட்டாரங்கள் எதிர்பார்க்கத்தான் செய்கின்றன.

எது எப்படியோ இன்றைய போட்டியில் இரு அணிகளும் வெற்றிக்காகப் போராடும் பட்சத்தில் போட்டி பரபரப்பு நிலையை அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

# சாதிப்பாரா அல்லது ஏமாற்றுவாரா?



முந்தைய டெஸ்ட்களின்போது தமது 50 டெஸ்ட் சதத்தை அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட சச்சின், அந்தச் சாதனையை நிகழ்த்தத் தவறினார், இந்நிலையில் இன்று ஆரம்பமாகும் கடைசி ஆட்டத்தில் சாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் சச்சின், பெரியளவில் சாதிக்க வில்லை. டெஸ்ட் அரங்கில் 50ஆவது சதம் பதிவு செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஒரு அரைச் சதம் கூட அடிக்கவில்லை. அதேபோல இன்றைய போட்டியிலும் சச்சின் தமது சாதனையை நிலைநாட்டத் தவறும் பட்சத்தில் ரசிகர்களுக்கு அது பெரும் ஏமாற்றமாகவே அமையும்.

இதனால், இன்றைய போட்டியில், சச்சின் இச்சாதனையை நிலைநாட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தாய்வான் வீராங்கனை தகுதி நீக்கம்:

# சீனாவின் சதிவேலை என முறுகுகிறது தாய்வான்!

குவாங்சு,நவ.20

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின், 'டேக்வாண்டோ' போட்டியில் பங்கேற்ற தாய்வான் வீராங்கனையான யாங் ஷு-ஜன், சர்ச்சைக்குரிய முறையில் தகுதி நீக்கம் செய்யப்பட்டமையால், சீனா சதி செய்துவிட்டது என முறைப்பாடுகள் கூறப்பட்டுள்ளன.

இதனால், சீனா மற்றும் தாய்வான் இடையே அரசியல் ரீதியாக மோதல் உருவாகியுள்ளது.

சீனாவின் குவாங்சு நகரில் ஆசிய விளையாட்டுப்போட்டி நடந்து வருகிறது. இதில், தற்காப்புக் கலை போட்டியான 'டேக்வோண்டோ'வின் 49 கிலோ கிராம் பிரிவில் தாய்வானின் யாங் ஷு-ஜன், வியட்நாமின் த ஹாவ் மோதினர்.

அபாரமாக ஆடிய யாங் 9-0 என முன்னிலையில் இருந்தார். போட்டி முடிய 12 வினாடிகள் இருந்தபோது நடுவர்கள் திடீரென யாங்கை தகுதி நீக்கம் செய்தனர். இவர் அணிந்திருந்த எலக்ட்ரோனிக் சாக்சில், விதி முறைக்குப் புறம்பான முறையில் கூடுதலாக கருவி (சென்சார்) ஒன்று பொருத்தப் பட்டிருந்ததாகக் குற்றம்சாட்டினார்.

இதனை ஏற்க மறுத்த யாங், பயிற்சியாளர்களுடன் சேர்ந்து களத்தில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார். இதுவும் விதி முறைக்குப் புறம்பானது. எனவே, இவருக்குத் தடை விதிக்கவும் வாய்ப்பு உண்டு.

ஆக்ரோஷமாக மோதிக் கொள்ளும் 'டேக்வோண்டோ' போட்டியில் கால்களால் உதைக்கலாம். இதில், புள்ளிகள் வழங்குவதில் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து வீராங்கனைகள் பாதுகாப்புக்காக அணியும் கவசங்கள் மற்றும் 'சாக்சில்' எலக்ட்ரானிக் கருவி ஒன்றும் பொருத்தப்பட்டது.

இதன் மூலம் கால் அல்லது கை பட்டால் அந்தக் கருவி மூலம் உணர்ந்து, துல்லியமாகப் புள்ளிகள் வழங்கப்பட்டன. இதன்படிதான் யாங், அந்தக் கருவியை அணிந்து பங்கேற்றுள்ளார்.

போட்டி ஆரம்பமாவற்கு முன் 'சாக்ஸ்' உள்ளிட்ட கவசங்களைச் சோதனை செய்த நிர்வாகிகள் 'சென்சார்' கருவி குறித்து முறையிட்டிருக்கவில்லை.

ஆனால், களத்தில் இறங்கி மோதிய போதுதான், யாங் அணிந்தி ருந்த 'சாக்சின்' குதிக்கால் பகுதியில் விதிமுறைக்குப் புறம்பாக கூடுதல் 'சென்சார்' பொருத்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

இப்படி திடீரென குற்றஞ்சாட்டியிருந்தமையால், சீனாவின் சதி இருப்பதாக தாய்வான் நாட்டினர் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது யாழ்ப்பாணத்திலும்....
சிறிய பெரிய கட்டட நிர்மாணப் பணிகளுக்கு

## Astron Constructions & Developers

Budget Houses

* ஒரு படுக்கையறையுடன் கூடிய வீடு 3 1/2 இலட்சம் முதல்
* இரு படுக்கையறையுடன் கூடிய வீடு 4 இலட்சம் முதல் முழுமையான நிர்மாணம்தளபாடங்கள் அனைத்தும் பொருத்து கைகளுடன் செய்து தரப்படும்.

தவணைக் கட்டண முறைமையும் உண்டு.

No. 70, Hathi Abubakkar Road,
Moor Street, Jaffna. (106273)

தொடர்புகளுக்கு
0770525391,
0771656573


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி வத்சலா கருணாகரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

### நாகலிங்கம் செல்லத்துரை

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### மாரிமுத்து லட்சுமி

பலாலி மேற்கைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து லட்சுமி நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும், இளையதம்பியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் செல்வரத்தினம், செல்வராசா, பாலசுப்பிரமணியம், விமலாதேவி, யோகமலர், சந்திராதேவி, நாகேஸ்வரி, ஜெயக்குமார் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தாயும் மல்லிகாதேவி, கந்தசாமி, மகேஸ்வரி, சிவனேஸ்வரி, யோகநாதன், விஜயரத்தினம், திருக்கேதீஸ்வரன், வித்தியா ஆகியோரின் மாமியும் குமுதறஞ்சினி, முகுந்தன் (கட்டார்), காலஞ்சென்ற சுரேஸ்குமார், மற்றும் சதீஸ்குமார் (லண்டன்), ராதிகா, ரேணுகா (ஆசிரியை, யா/மத்திய கல்லூரி), ரமேஸ் (சவுதி அரேபியா), மைதிலி, ஹிரிதரன் (பிரான்ஸ்), கம்ஜியா, லதா, செந்தில்மோகன் (பிரான்ஸ்), செந்தில் ரூபன், சுகன்யா, சுதர்சன் (பிரான்ஸ்), சுகிர்தன், சுபிதா, மிதுஷா (யா/ வேம்படி உயர்தரப் பாடசாலை), விதுஜனன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2010) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி. (106275)

### சிவகுரு கதிராசிப்பிள்ளை



பெரிய பளை, பளையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செம்மணி வீதியை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு கதிராசிப் பிள்ளை நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு (பத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், தவத்தரசா (மிருசுவில்), காலஞ்சென்ற தவராசா (பவுண்), மற்றும் தவலட்சுமி (கொழும்பு), தவச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தமலர், நாகராணி காலஞ் சென்ற முனேஷ் துரைசிங்கம், மற்றும் ஈஸ்வரராஜன் ஆகியோ ரின் அன்பு மாமியாரும், தவலோஜினி, தவதர்சினி, தவலெலினி, தவஷிரோஜன், தவரூஜீபன், தவஜீவிதன், தவநீரஜன், மோகனதாஸ், ரேணுகா, மேனகா, வினோக்கா, சௌமியா, ஜுஷா, ரேனுகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஜிஷாலினி, சங்கீர்த்தனி, டனிசியா, லதுர்சினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. ஈஸ்வரராஜன் (மருமகன்)
57/01, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (106271)

## இவரைக் காணவில்லை



கரவெட்டி விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த சந்திரகுமாரன் சிவகரன் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். இவர் தீபாவளியன்று யாழ்ப்பாணம் சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை. இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து தகவல் தரு மாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்.
சி.வனிதா (மனைவி)
0776293778,0778689754

## தவறிவிட்டன

பிள்ளையார் கோயிலடி, ஊரெழு கிழக்கு, சுன்னாகம் எனும் முகவரியையுடைய அமிர்தயோகன் கிறிசாந்த் என்பவரின் 892583862V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விழிப்புலனற்றோர் சங்கத்தால் வழங்கப்பட்ட விசேட அ.அட்டையும் ஊரெழுவுக்கும் அச்செழுவுக்கும் இடையில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கு மாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

T.P:-0214908310

## வாகனம் விற்பனைக்கு

J.K XXXX இலக்கமுடைய Isuzu Coolar model Van விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0775076917

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6146434

## வீடும் கடையும் வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலும் நாவலர் வீதியிலும் வீடும், கடையும் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
2223479, 0215670313.

## விற்பனைக்கு

78- தொடர் இலக்கமுடைய ரொபோரா 600 ரக லாண்ட் மாஸ்ரர் பெட்டியுடன் கூடியது விற்பனைக்கு உண்டு
தொடர்பு-0711472762

## பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பலவகை இலகுவான DSI பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்ட 1Kg ரூ. 450 மட்டும்
விஜயகுமார், குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன்,நல்லூர்.

## மணமகள் தேவை

கொழும்புத்துறையைச் சேர்ந்த தொழில் ஸ்தாபன உரிமையாளருக்கு (வயது-30) கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த (R.C) மணமகள் தேவை.
தொடர்பு-0214915239

## கோழிக் குஞ்சு விநியோகம்

ஒறிஜினல் No 1 புறொயிலர் குஞ்சுகள் 22.11.2010 காலை விநியோகிக்கப் படும். முற்பதிவு செய்யவும்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்

## ஏல விற்பனை

YAMAHAமோட்டார் சைக்கிள் RS 125 Z 116-1962 (125cc) 13.12.2010 ம் திகதி மாலை 2.30 மணிக்கு கீழ் கொடுக்கப்பட்ட விலாசத்தில் ஏலத்தில் விடப்படும். விரும்புபவர்கள் ஞாயிறு தவிர்ந்த கிழமை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு:
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்,
கொங்கிறீட் உற்பத்திப் பகுதி, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
TEL.No: 0212222128,0212227890

## யாழ்ப்பாணம் மாநகரசபை கேள்வி அறிவித்தல் - 2010

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மேற்கொள்வதற்காக "இக்ராட்" நிர்மாண பயிற்சி நிறுவனத்தில் பதிவுள்ளதுடன் யாழ். மாநகரசபையில் ஒப்பந்தகாரராக பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.
பதிவு செய்ய வேண்டிய இக்ராட் தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசி திகதி
: 29.11.2010 பி.ப. 3.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி
: 02.12.2010 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி
: 02.12.2010 பிற்பகல் 2.00 மணி

கீழ்க்காணும் கட்டணங்களை செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை பூரணப்படுத்தி அரக்கு முத்திரை இடப்பட்டு இரு பிரதிகளில் வேறு வேறான கடித உறைகளில் வைக்கப்பட்டு "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என முகவரி இடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் அதாவது 02.12.2010 இல் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதற்கென செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் வேலைப் பகுதி அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்விப் பத்திர கட்டணம் VAT, NBT உட்பட |
|---|---|---|---|
| குருநகர் புதிய கடற்கரை வீதியினை கொங்கிறீற் வீதியாக நிர்மாணித்தல் (Construction of Concrete Road along New Beach Road, Gurunagar) | C8 | 40000.00 | 2300.00 |

19.11.2010

(திருமதி யோ. பற்குணராசா)
மாநகர முதல்வர்,
மாநகர சபை.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வலயக்கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பகுதியில் கடமையாற்றும் திரு.மா.ஈஸ்வரராஜன்
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி கதிராசிப்பிள்ளை சிவகுரு

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அமரரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

கல்விப் பணிப்பாளரும், சக உத்தியோகத்தர்களும்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## நினைவஞ்சலி

39ஆம் நாள் 34ஆம் நாள்





ஐயாத்துரை தம்பிராசா
(ஓய்வுபெற்ற பிரதமலிகிதர் -கச்சேரி)
உதிர்வு
13.10.2010

திருமதி தம்பிராசா இரத்தினபூபதி
உதிர்வு
17.10.2010

இறைவன் திருவடி சேர்ந்த எமது குலவிளக்குகளாகிய தங்கள் இருவரையும் மறவாமை என்ற மனக்கோயிலில் வைத்து மனை வாழ்விலும் மரணத்திலும மனமொத்த தங்கள் மாட்சிமையை வியந்து அஞ்சலிக்கின்றோம்.

மாசியப்பிட்டி வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## வேதவனம் தங்கராசா

*(சர்க்கரை - ஓய்வுபெற்ற முகாமையாளர், பரந்தன் ப.நோ.கூட்டுறவுச் சங்கம்)*

கிளிநொச்சி, குஞ்சுப்பரந்தனைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம், சிவநகரை வசிப்பிடமாகவும் கொண்ட வேதவனம் தங்கராசா 15.11.2010 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம் (சின்னத்துரை) மற்றும் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராமுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் (சர்க்கரை அக்கா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் (ஆசிரியர்), நாகராசா மற்றும் வேலுப்பிள்ளை (சீனி), மங்கையர்க்கரசி (கனடா), பரமேஸ்வரி, புவனேஸ்வரி, கந்தசாமி, மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி, கிருஸ்ணபிள்ளை, தேவராசா, புஸ்பமலர், பரஞ்சோதி, சாரதாதேவி மற்றும் பிறேமதி, ரமேஸ் (கனடா), ரோணேஸ் (றோணா - லண்டன்), ரமணேஸ், மிரேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாஸ்கரன், விக்னேஸ்வரன், சஜீதா (கனடா), மைதிலி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கீர்த்தி, அபி, மகிஷா, கிரிஷாந், கபிலாஸ், ஓவியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் வீதி, சிவநகர்,*
*உருத்திரபுரம்.* (சி- 573070)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



## கந்தப்பு சின்னத்துரை

கரணவாய் மேற்கு, சோழங்களையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு சின்னத்துரை நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பு - சீதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், சின்னமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் செல்லத் துரை (ஆசிரியர், கனகசபை, சிவபாக்கியம், அமரர் இராசரத்தினம் மற்றும் அன்னலச்சுமி, சுந்தரம், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வராணி, திலகவதி (கனடா), காலஞ்சென்ற திரவியநாயகம், தவநாயகம் (அபிவிருத்தி உதவியாளர், சண்டிலிப்பாய் கோட்டம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரம், யேசுதாஸ், மேரிலியூலின், சுபானுதா (ஆசிரியை, யாழ். சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் கபிலன், கஜிதா, பிரிந்தா, சஞ்சுதா, அபிசேக், அஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பழைய பொலிஸ் நிலைய பின் வீதி பழம் றோட் ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள மகன் தவநாயகத்தின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**தவநாயகம் - மகன்,**
*(அபிவிருத்தி உதவியாளர் கோட்டம் -சண்டிலிப்பாய்)*

*அராலி வீதி,*
*சங்கானை.* (106280)

## திருமதி சின்னம்மா செல்லையா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லையா நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ. செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நல்லையா செல்வநாயகி, காலஞ்சென்ற திருமதி சிரோன்மணி மற்றும் செல்வமணி, ரஞ்சிதமலர், கமலாவதி, செல்வராணி, ஆகியோரின் அன்புத் தாயும் சோமசுந்தரம், காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் மைக்கல் சூரசங்கரன் காலஞ்சென்ற சறோஜினி மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ரவீந்திரன், அம்பிகா, குகரூபன், மிருணாளினி, ரோசி காலஞ்சென்ற அன்ரனி மற்றும் ஆன் வெரோனிக்கா, சில்வெஸ்டர் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 70/4, ஈச்சமோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**செ. செல்வநாயகி,**
**க. செல்லையா** (ஆசிரியை)
*தொ.பே. 0779113014.*

70/4 , *ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# ஜே.வி.பியினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் இருவரும் கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். லெபனான் ஜனநாயக இளைஞர் சங்கத்தின் தலைவரான மொஹமட் ஹொடெக் மற்றும் அவரது மனைவியுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கடந்த 14ஆம் திகதி மாலை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார். இந்தத் தாக்குதலைக் கண்டித்து கடந்த 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்புக் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் லெபனான் ஜனநாயக இளைஞர் சங்கத்தின் தலைவரும் அவரது மனைவியும் பதாகை ஒன்றை ஏந்திய வண்ணம் காட்சியளித்த புகைப்படமும் அந்த இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த இருவரும் தங்களது விடுமுறை தினத்தை கழிப்பதற்காகவே இலங்கை வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்தக் கைது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயகொடியிடம் வினவியபோது, அவ்வாறு லெபனானிய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகத் தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று கூறினார். (சி)


## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மெமோறியல் லேனில் 3 3/4 பரப்பு காணியும் அதற்குள் அமைந்துள்ள வீடும் விற்பனைக்கு உண்டு. இந்த வீடு கோயில், பாடசாலை கள், ஆஸ்பத்திரி ஆகியவ ற்றுக்கு அண் மையில் அமைந் துள்ளது.

தொடர்பு- 0112503018,0112337594,
0777349357,0213219663
Mohan 1821 @ hotmail.com

## வீடு வாடகைக்கு

மீசாலை வடக்கு, சியாமளா மில் ஒழுங்கையில் உள்ள சகல வசதிகளையும் உடைய வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு-0779291092, 0772487500.

## வேலைக்கு ஆள்கள் தேவை

உபசரிப்பு, பராமரிப்பு மற்றும் கார் சாரதி போன்ற வேலைகளுக்கு 45 வயதிற்கு மேற்பட்டோர், தங்கியிருந்து பணியாற்றக் கூடியவர்கள் தேவை.

தொ.பு: 021 567 8585

## கார் விற்பனைக்கு

NPJH XXXX Nissan Sunny TA-FB 15 (Super Saloon) 2001 Model, White Colour உடன் விற்பனைக்குண்டு.

T.P: 0777807517 (106253)

## பிற்போடப்பட்டுள்ளது

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினால் நாளை (21.11.2010) நடைபெறவிருந்த அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. குலுக்கல் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தலைவர்
நல்லூர் றோட்டறக்ட் கழகம், நல்லூர்.

## பஸ் விற்பனைக்கு

யாழ்- கொழும்பு சேவையில் ஈடுபடும் புதிய அரைசொகுசு பஸ் ROUTE PERMIT உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0775430731 (106251)

## வீடு வளவு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் 4பரப்பு 7குழி, 3 அறைகள், சாப்பாட்டு அறை, சமயலறை, சுற்றுமதில் போன்ற வசதிகள் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0717353524

## வெற்றிடங்கள்

- களஞ்சியக் காப்பாளர்.
- Computer Hardware நன்கு தெரிந்த ஒருவர் நேரில் வரவும்.

தொடர்பு:
Media Electro Mart
1-1, 1-H, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021-222-4566


# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், புவியியல் துறையின் தலைவருமான பேராசிரியர் S.T.B. இராஜேஸ்வரன் அவர்களின் தாயார்

*திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்*

அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்* தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-573063) - **பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும், இந்து நாகரிகத்துறையின் விரிவுரையாளருமான பொ. சந்திரசேகரம் அவர்களின் தாயார்

**திருமதி சின்னப்பிள்ளை பொன்னுத்துரை**

காலமாகிவிட்டார்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்* தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-573062) - **பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி பாக்கியம் (சிவபாக்கியம்) நடராசா

*(முன்னைநாள் ஆசிரியர், வேலணை மத்திய மகாவித்தியாலயம், இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் )*

இளவாலை, பத்தாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பாக்கியம் நடராசா 18.11.2010 வியாழக்கிழமை மாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் மட்டுவில் ஆ. நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இளங்கோ, மற்றும் மாலதி, இளங்செழியன், இளமதி, நந்தகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி. அன்னலட்சுமி கனகசபையின் சகோதரியும், திருகரன், தர்ஷனி, சபாலிங்கம், கங்கா ஆகியோரின் மாமியாரும், மாதங்கி, திருமாறன், சுபாங்கி, சேயோன், செங்கோடன், சயங்கொண்டான், அதியமான், ஆகியோரின் பேர்த்தியும், அம்பிகைப்பிள்ளை, மகேச்கரன், அன்னப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் அன்னபூரணத்தினத்தின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 23.11.2010 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி :-
*011 2552203 (ஆ.நடராசா),*
*0772928841 (மாலதி திருகரன்),*
*0714969483 (இளமதி சபாலிங்கம்).*

**தகவல்:**
**ஆ.நடராசா**
25 1/2, ஈ.எஸ் பெர்னாண்டோ மாவத்தை,
கொழும்பு.06

*(105708)*



## நாகமுத்து பரமசாமி (சங்கானை)

சங்கானை, அராலி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பரமசாமி நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சோமசுந்தரம் (இருபாலை), கனகரத்தினம், சீவரத்தினம் (இருபாலை), தவமணி, தம்பிஐயா, சோதிலிங்கம, தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மலோஜினி, சாந்தாதேவி, விணோதரன் (ஜேர்மனி), ஞானவதி, லங்கேஸ்வரி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி) ஆகியோரின அருமைத் தந்தையும், உபேந்திரன் (உப அதிபர், சங்கானை சிவப்பிரகாச ம.வி.), ரவீந்திரன் (தொழில் துறைத் திணைக்களம் பிரதேச செயலகம், சாவகச்சேரி), சுமதி (ஜேர்மனி), காலஞ்சென்ற தங்கவடிவேல் (துன்னாலை) மற்றும் குலேந்திரன் (New Nelson Learners - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் துஷ்யந்தன் (ஆசிரியர், விபுலானந்தா கல்லூரி, வவுனியா), சுதர்சினி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), திலீபன் (இயன்மருத்துவர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), தாரணி (சிவப்பிரகாச ம.வி., சங்கானை), சோபிதன் (யாழ். இந்துக் கல்லூரி), நிதர்சன் (சிவப்பிரகாச ம.வி., சங்கானை), அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2010) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வீதி,*
*சங்கானை.*

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

காமன்ஸுக்கு தையல் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. நாள் சம்பள அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள் ளப்படும். வன்னியில் உள்ளவர்கள் பிள்ளையார் அருள் புடைவை, கிளிநொச்சி எனும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். 24.11.2010 புதன்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை தொடர்புகொள்ளவும். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்.

*யாழில் தொடர்பு :-*
*றொசாணி காமன்ஸ்,*
*263/1, இராஜகாரியர் வீதி,*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.* (106104)

*கிளை :-*
*சபாபதிப்பிள்ளை வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

# AAA MOVIES INTERNATIONAL
## நடத்தும் AAA 2010 விருதுக்கான
## மாபெரும் குறுந்திரைப்படப்போட்டி

இப்போட்டிக்கான விருது வழங்கும் விழா எதிர் வரும் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற விருக்கிறது. இப்போட்டிக்காக எம்மிடம் பதிவு செய்த வர்களுக்கும், தமது குறும்படங்களைச் சமர்ப்பித்தவர் களுக்கும் எமது

**நன்றிகள்,**

இப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் ஏனைய வர்களையும் உடனடியாக எமது அலுவலகத்தில் தமது விபரங்களைப் பதிவு செய்துகொள்ளும்படியும் குறும்படங்களைத் தயாரித்து முடித்தவர்கள் அவற்றை DVD அமைப்பில் மூன்று பிரதிகளுடன் எமது அலுவல கத்தில் ஒப்படைக்கும்படியும் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களுக்குத் தேவையான விபரங்களுக்கும், ஆலோசனைகளுக்கும்

AAA MOVIES INTERNATIONAL,
#92, Brown Road, Jaffna.
Tel : 0213734742, 0213207386
Email : aaamoviessintl@hotmail.com
(160261)


## நேர்த்தி செய்ய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த பவுண்ராஜா செல்வ ராஜா(வயது 52), அவ ரது மனைவியான செல்வராசா நகு லேஸ்வரி(வயது 48) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இச்சம்பவத்தில் 8 படையினர் காயமடைந்தனர். படையி னரின் வாகத்தைச் செலுத்திவந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

வெளிநாட்டில் இருந்து வந்த தமது பிள்ளைகளின் நேர்த்தியைப் பூர்த்தி செய்வதற்காக நல்லூரில் இருந்து எம்.டி.90 மோட்டார் சைக்கிளிலில் உயிரிழந்த தம்பதியினர் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் நோக்கிச் சென்றனர்.

முறிகண்டி, இந்துபுரம் பகுதியில் இவர்கள் சென்றுகொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

தம்பதியர் அந்த வாகனத்துக்குள் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் அந்த இடத் திலேயே உயிரிழந்தார்.

சடலங்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டன. அங்கு வெளிநோயாளர் பிரிவில் சடலங்கள் வைக்கப் பட்டிருந்தன.

எதிர்பாராத விதமாக அங்கு சிகிச்சை பெற வந்திருந்த பெண்மணி ஒருவர் சடலங்களை அடையாளம் காட்டினார். அந்தப் பெண் உயிரிழந்தவர்களின் உறவினர் ஆவார்.

அதைத் தொடர்ந்து விபத்தில் பலியானவர்களின் உறவினர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு பதில் நீதி வான் தங்கராசா பரஞ்சோதி வைத்தியசாலைக்கு நேற்று நண்பகல் வந்து விசாரணைகளை நடத்தினார்.

விசாரணைகளின் பின் சட லத்தை உறவினர்களிடம் ஒப் படைக்குமாறும் இராணுவ வாக னத்தின் சாரதியை எதிர் வரும் திங்கட்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் பொலீஸா ருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-ஜ-16)

## கலை நிகழ்வுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்காலத்துக்கான பொறுப்புகளை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

பதவியேற்பு வைபவம் பல்லாயிரக்கணக்கான பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புடன் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த மக்கள் காலை 7.00 மணிமுதலே காலிமுகத்திடலை வந்தடைய ஆரம்பித்து விட்டனர். ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை, ஜனாதிபதி மாளிகை மற்றும் பொலிஸ் தலைமையகம், துறைமுகம் அமைந்துள்ள அனைத்து வீதிகளும் பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்ததால் பொதுமக்கள் காலிமுகத்திடலை வந்தடைவதில் சிரமத்தை மேற்கொண்டனர்.

ஜனாதிபதியின் வசிப்பிடமான அலரிமாளிகை முதல் ஜனாதிபதி செயலகம் வரை பலவர்ணக் கொடிகளாலும் தேசிய மற்றும் மாகாணக் கொடிக்ளாலும் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

காலை 8.30 மணிமுதல் பிரதமர், சபாநாயகர், அமைச்சர் கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை முதலமைச் சர்கள் எனப் பலரும் காலிமுகத்திடலுக்கு வர ஆரம்பித்து விட்டனர்.

இவர்களுடன் வெளிநாட்டு இராஜதந்திரிகளும், வெளிநாட்டு விசேட பிரதிநிதிகளும் தமக்கென ஒதுக்கப்பட்ட விசேட ஆசனங்களில் வந்து அமர்ந்துகொண்டனர். கோல உடை தரித்த இராணுவ வீரர்கள், பாண்ட் வாத்திய இசையுடன் முப் படையினர் விசேட மேடையின் முன் அணிவகுத்து நின்றனர். (சி)


## கார் விற்பனைக்கு

Honda Civic 1350 cc 13-Turbo Sports Model, Full A/C, A/W, Woofer Set, Fogge Light, 15 Km/L நல்ல நிலையில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொ.பே : 0714223152

## பதிவாளர் தேவை (CLERK)

சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களில் உள்ள ஐடியல் அக்கடமி கல்வி நிறுவனங்களுக்கு A/L படித்த பெண்பிள்ளைகள் இருவர் தேவை.

சுயவிபரக் கோவையுடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி எண்ணைக் குறிப்பிட்டு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் "ஐடியல் அக்கடமி", கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Note : மேற்படி இரு கல்வி நிலையங்களின் எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

நிர்வாகி.


# மரண அறிவித்தல்

## திருமதி இராஜதுரை மகேஸ்வரி



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை மகேஸ்வரி (ராணி) நேற்று (19.11.2010) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராஜதுரையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காரைநகர், கோவளத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேயன் பென்சனியர்) - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காரைநகர், சந்தம்புளியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (மலேயன் பென்சனியர்) - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் விஷாலாட்சி (யாழ்ப்பாணம்), தங்கம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரவீந்திரன் (பொறியியலாளர் - கனடா), சுரேந்திரன் (பொறியியலாளர், Metro Construction (Pvt) Ltd. - கொழும்பு), விஜிதா (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தாயும் சிவதர்ஷினி (கனடா), திருமகள் (கொழும்பு), லோகநாதன் (உதவி சுங்க அத்தியட்சகர், கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமியும் வைஷ்ணவி, விதுஷா, மதுரா, சேயோன், சயன், சகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இலக்கம் 52 A,வஜிரா வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு 4இல் உள்ள அவரின் இல்லத்தில் வெள்ளிக் கிழமையும் சனிக்கிழமையும் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பொரளை, ஜெயரட்ண மலர்ச்சாலையில் நாளை (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் முற்பகல் 10 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல் :*
**இ.இரவீந்திரன்** *(மகன்)*
*0014168178479 (கனடா); 0772252255 (கொழும்பு),*
**இ.சுரேந்திரன்** *(மகன்)*
*0777306304 (கொழும்பு),*

*இல. 52 A, வஜிரா வீதி,*
*பம்பலப்பிட்டி,*
*கொழும்பு - 04.*
*தொ.பே : 0112553325*
(சி/573057)

## கொழும்பில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலானோர் முஸ்லிம் மற்றும் தமிழர்கள் ஆவர். இவர்களுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கில் வடக்கிலுள்ள வீடமைப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் அதிகாரிகளுக்கு கொழும்புக்கு இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## காலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப் பின்தலைவருமான சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு நாடு முழுவதிலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)


## இதோ வெளிவந்து விட்டது

G.C.E (O/L) *மற்றும் உயர்தர மாணவர்களுக்கான*
*ஆசிரியர் - ஜெறாட் ஜெயானந்தவின்*
*'இலகு ஆங்கில கட்டுரைகளும் கடிதங்களும்'*
*(தமிழ் உச்சரிப்பு தமிழ் கருத்துக்களுடன்)*

**விலை 180/=**

கிடைக்குமிடம் :- பூபாலசிங்கம் புத்தகசாலை (இரு கிளைகளிலும்), ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ்.
(106197)

## வண். மேற்கு வைத்தியசாலை
## VAN WEST. CLINIC. & NURSING HOME

18, IYANAR KOVIL STREET, VANNARPANNAI, JAFFNA. T.P : 0212221697

பழைய கெங்காதரன் வாட்

உங்களின் வைத்திய சேவைகளை ஆற்ற , வைத்திய நிபுணர் கெங்காதரனின் வைத்திய சேவையுடன் -

1) மகப்பேற்று வைத்திய நிபுணர்கள்
   A. மகப்பேறும் அது சம்பந்தமான ஆலோசனைகளும் சத்திரசிகிச்சைகளும்
   B. பெண் நோயியல் சம்பந்தமான ஆலோசனைகளும் சத்திரசிகிச்சையும்.
2) சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்கள் :- சத்திர சிகிச்சை சம்பந்தமான ஆலோசனைகளும்.
3) பொதுவைத்திய நிபுணர்கள் :- பொதுவைத்தியம் சம்பந்தமான ஆலோசனைகள்.
4) சிறந்த சத்திரசிகிச்சை கூடம்.
5) ஆய்வுகூட வசதிகள்.
6) மருந்தக வசதிகள்.
7) ULTRA SOUND SCANNER வசதி.
8) விடுதியில் தங்கிச் சிகிச்சைபெறும் வசதிகள்.

**ஆகிய சேவைகளைக் குறைந்த கட்டணங்களில் வழங்க உள்ளோம்.**

தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பே.எண் : 0212221697

★ எங்களின் அக்கறை உங்களின் ஆரோக்கியமே!

Van West Clinic, & Nursing Home,
நிர்வாகிகள்.
(106300)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org